DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com
Ragu Thillainathan, Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Kokulan Baskaran
Tax Consultant
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
MohanTeam.com
6888-14th Avenue
Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
solutions@subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN
உதயன்
தித்திக்கும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 | www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1379 | CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM | Friday September 9, 2022

# யாழ் — திருநெல்வேலியில் இடம்பெற்ற கனடா உதயன் இலங்கைச் சிறப்பிதழ் அறிமுக நிகழ்வு

## “கனடா உதயனின் கதிரொளி தாயகத்தின் மீது வெளிச்சம் பாய்ச்சுகிறது”

### — பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவிப்பு

## காலத்தின் கட்டளையாக கனடா உதயன் பத்திரிகை உதயமானது

### சிரேஷ்ட ஊடகவியலாளர் இ. பாரதி தெரிவிப்பு

அண்மையில் கனடா உதயன்பத்திரிகை வெளியிட்டுள்ள இலங்கைச் சிறப்பிதழ் யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிமுக நிகழ்வு திருநெல்வேலி காளிகோவிலடி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை (05.09.2022) நடைபெற்றது. தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் கலாநிதி நா. சண்முகலிங்கன், சிரேஸ்ட ஊடகவியலாளர் இ.பாரதி, ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் கௌரி முகுந்தன், வலிகிழக்கு பிரதேசசபைத் தலைவர் தி. நிரோஸ் ஆகியோர் கலந்துகொண்டு இலங்கைச் சிறப்பிதழ் பற்றியும் உதயன் ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களின் சமூக, இலக்கிய, ஊடகப் பணிகள் குறித்தும் உரையாற்றியிருந்தார்கள்.

வெளிநாடு ஒன்றிலிருந்து தாய் நாட்டை மறவாமல் இலங்கைச் சிறப்பிதழை வெளியிட்ட பத்திரிகையின் ஆசிரியருக்கும் அவரது குழுவினருக்கும் அங்கு உரையாற்றிய அனைத்து பேச்சாளர்களாலும் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(உள்ளே விபரமான செய்தி 17ம் பக்கத்தில்)



# “நல்லூரில் சங்கிலியன் இராஜதானி அமைந்திருந்த வளாகத்தில் உள்ள வரலாற்றுச் சின்னங்களையும் கட்டடங்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது”

## கனடிய தமிழ் ஊடகப் பிரதிநிதிகளோடுடனான சந்திப்பில் யாழ்ப்பாண மாநகர மேயர் மணிவண்ணன் எடுத்துரைப்பு



”யாழ்ப்பாணத்தில் நல்லூரில் கந்தசுவாமி ஆலயம் மற்றும் சட்டநாதர் ஆலயம் ஆகியவற்றுக்கு அருகில் சங்கிலியன் மன்னன் ஆட்சிக் காலத்தில் இராஜதானி அமைந்திருந்த வளாகத்தில் உள்ள வரலாற்றுச் சின்னங்களையும் கட்டடங்களையும் பாதுகாக்க வேண்டிய பொறுப்பு எம்மிடத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. எனவே நாம் உடனடியாக இந்த செயற்பாடுகளில் ஒற்றுமையாக தகுந்த தலைமைத்துவத்தின் கீழ் செயலாற்ற கடமைப் பட்டவர்களாக உள்ளோம். இந்த வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த திட்டத்திற்கு புலம் பெயர்ந்து வாழும் தமிழ் உறவுகள் அனைத்து நாடுகளிலிருந்தும் தங்கள் உதவிக் கரங்களை நீட்ட வேண்டும்“

(உள்ளே விபரமான கட்டுரை 3ம் பக்கத்தில்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
வர்த்தக துறையில் 20 வருட முன்னோடிகள்
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 | 905-794-4404
online service: www.remitbee.com

RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Mobile: 416.710.9150
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE
REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
416 2888882
RE/MAX BLUE FORCE
கவாஸ். சோம சச்சிதானந்தன்

# STEELES PODIATRY CLINIC

**கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்**

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**

- Extended Health Care
- Private - Work Insurance
- MVA - WSIB
- ODSP - Social Service

**LIST OF SERVICES**

- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle - Knee - Back Braces

உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

ENGLISH & TAMIL - SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE



5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7 **416.298.FOOT (3668)**


## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### வேலை வாய்ப்பு

**Cleaning** வேலைக்கு ஆட்கள் தேவை.
ஸ்காபுறோவில் காலை நேரத்தில் தினமும் 3 மணி நேரம் வேலை செய்ய **Cleaning** வேலையாட்கள் உடன் தேவை.
தகுந்த சம்பளம் வழங்கப்படும்.
தொடர்புகளுக்கு:-
**416 858 6316**

### Room for Rent

**ஸ்காபுறோவில் Ellesmere & Meadowvale சந்திப்பிற்கு அருகில் அமைந்துள்ள வீடொன்றில் மேல் தளத்தில் உள்ள அறை ஒன்று உடனடியாக வாடகைக்கு உண்டு. அனைத்து வசதிகளும் உண்டு. வாகனத் தரிப்பிடமும் வழங்கப்படும்.**
**தொடர்புகளுக்கு-**
**416 858 6316**

### குழந்தை பராமரிப்பாளர் (BABY SITTER) தேவை

ஈற்றோபிக்கோ நகரில் உள்ள வீடொன்றில் 1 வயதுடைய ஆண் குழந்தையை வாரத்தின் 4-5 நாட்கள் வீட்டிலேயே தங்கியிருந்து பராமரிக்க பெண் ஒருவர் தேவை.
அனுபவம் விரும்பத்தக்கது. சம்பளம் பேசித் தீர்க்கலாம்.
தொடர்புகளுக்கு:- 416 844 4207
அல்லது 416 510 8727



### ல்ஷ்சுமி திருமண சேவை

உள்நாட்டு வெளிநாட்டு வரன்கள், அரசாங்க உத்தியோகம் தனியார் தொழில், செவ்வாய் தோஷம் உள்ளவர்கள் மற்றும் விவாகரத்து ஆனவர்கள் அனைவருக்கும் தகுந்த சாஸ்திர சம்பிரதாய முறைப்படி உலகளாவிய இலங்கைத் தமிழர்களுக்கான திருமண சேவை.

**சுலபமாய் ஒரு சுயம்வரம்**
**647-961-6886**

### Tutor Available

Math, Physics and Chemistry ஆகிய பாடங்கள்

Experienced Tutor is available for online tutoring in the subjects of Math, Physics and Chemistry.

For further details contact Sethu:
(416) 858-4259
Sedumadavan@hotmail.com

### வேலைக்கு ஆட்கள் தேவை

தொழிற்சாலை ஒன்றிற்கு வேலைக்கு ஆட்கள் தேவை. ஆண், பெண் இருவரும் விரும்பத்தக்கது.

உடனே அழையுங்கள்:
தொடர்புகளுக்கு Jeya:
(647) 669-2739





REALTOR®

RE/MAX METROPOLIS

Cell: **647-929-7242**

**Email: brintha.uruthira@gmail.com**
**Instagram: brinthau**

RE/MAX METROPOLIS REALTY BROKERAGE

8321 KENNEDY ROAD, UNIT 92
MARKHAM, ON L3R 5N4

## உதயன் கதிரோட்டம்

Canada
We acknowledge the financial support of the Government of Canada through the Canada Periodical Fund of the Department of Canadian Heritage.

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# நடமாட இயலாத நிலையில் நாடு உள்ள நிலையில் எதற்கு ஐம்பத்தேழு இராஜாங்க அமைச்சர்கள்?

உள்ள வளங்களைக் கொண்டு வளர்ச்சியை எட்டியிருக்க வேண்டிய இலங்கை என்னும் மாங்கனித் தீவை தீயை மூட்டி எரித்தது போன்ற அழிவைத் தந்த கோத்தாபாய இருட்டும் நேரத்தில் விமான நிலையத்தில் வந்திறங்கினார் என்ற செய்தி நாட்டு மக்களின் செவிகளை சென்றடைந்த போது "மீண்டும் இவர் எதற்காக இங்கு வருகின்றார்? ஓடிச் சென்றது போன்று அந்தந்த நாடுகளிலிலேயே தங்கியிருக்கலாமே? என்ற கேள்வியை தங்களிடமே கேட்டுக்கொண்டார்கள.

நடுத்தட்டு மற்றும் ஏழை மக்கள் இலங்கையில் தங்கள் வாழ்க்கையை நடத்துவது என்பது ஒரு 'விசப் பரீட்சையாக' இருப்பதை சாதாரண மக்களே நன்கு புரிந்து வைத்துள்ளார்கள். ஆனால் அவற்றை அறிந்தும் அறியாதவர்கள் போல இருக்கும் அரசியல்வாதிகளும் அவர்களுக்கு மட்டும் பாதுகாப்பை வழங்கும் ஆயுதப்படையினரும் நாட்டின் அனைத்து வளங்களையும் தங்கள் 'சுகமான' வாழக்கைக்கு பயன்படுத்திக் கொள்கின்றார்கள். அங்கு அரச இயந்திரம். ஆளும் தரப்பினருக்கும் 'பேருக்கு' எதிர்க்கட்சியாக இருப்பவர்களுக்கும் அவர்களது ஆதரவாளர்களாக இருப்பவர்களுக்கு மட்டுமே சேவ-கம் செய்கின்ற பணியாளர்களாக செயற்படுவதனால் 'அங்கு மீண்டும் ஆளும் அதிஸ்டத்தை தொடர்ந்து அனுபவிக்கும் அவர்களே மகிழ்ச்சியாக தொடர்ந்தும் உள்ளார்கள்.

இலங்கையில் அரச பணிகளில் அடிமட்ட ஊழியர்களாக உள்ளவர்களுக்கு ஒழுங்கான முறையில் ஊதியம் வழங்க முடியாத நிலையில் அமைச்சர்களும் உயர் அதிகாரிகளும் தொடர்ச்சியாக தங்கள் கைவரிசையை காட்டிய வண்ணமே உள்ளார்கள் என்பதை நாம் கண்டு கொள்ளக் கூடியதாக உள்ளது.
இவ்வாறான நிலையில் நேற்று இலங்கை அரசாங்கத்திற்கு ஐம்பத்தி ஏழு இராஜாங்க அமைச்சர்களுக்கு பதவிப் பிரமாணம் செய்து வைத்தார் தற்போதைய ஜனாதிபதி 'நரி' ரணில் விக்கிரமசிங்க.
நாட்டின் பொருளாதாரச் சிக்கலை சீர்படுத்த முடியாத இந்த ஜனாதிபதி கூட பேருக்கு ஒருவர் என்ற வகையில் பணியாற்றுகின்றார் என்பது நாட்டு மக்கள் அறிந்த ஒன்று. இவ்வாறான நிலையில் நாட்டு மக்களை நலன்களை விரும்பும் ஒரு உண்மையான அரசியல்வாதியை வீதிக-ளில் காணும் நேரம் நெருங்குவதை நாம உணர்கின்றோம்.
ஆமாம், இந்த புதிய ஐம்பத்தேழு இராஜாங்க அமைச்சர்கள் பாராளுமன்றத்திலும் அமைச்சரவையிலும் எந்த வகையான பணி-களை பாதிக்கப்பட்ட மக்களுக்காக ஆற்றப்போகின்றார்கள் என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

(முன் பக்க தொடர்ச்சி)

# சங்கிலிய மன்னன் இராஜதானியில் அமைந்துள்ள வரலாற்றுச் சின்னங்களை...

இவ்வாறு கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று கனடிய தமிழ் ஊடகப் பிரதிநிதிகளோ-டுடனான சந்திப்பில் யாழ்ப்பாண மாநகர மேயர் மணிவண்ணன் எடுத்துரைத்தார். ஸ்காபுறோவில் உள்ள கனடிய தமிழர் பேரவையின் தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற இந்த சந்திப்பில் திரு மணிவண்ணனுக்கு உதவியாக கனடிய தமிழர் பேரவையின் தலைவர் சிவன் இளங்கோ அவர்கள் பிரதான மேசையில் அமர்ந்திருந்தார்.
சங்கிலிய மன்னன் இராஜதானியில் அமைந்துள்ள வரலாற்றுச் சின்னங்களை மற்றும் கட்டடங்கள் ஆகியவற்றை பாதுகாக்கும் விடயம் தொடர்பாக மேயர் மணிவண்ணன் தொடர்ந்து உரையாற்றுகையில்
'இந்த திட்டங்களை ஒழுங்கான முறையிலும் சட்ட நடைமுறைகளுக்கு ஏற்பவும் நடைமுறைப்படுத்துவதற்கு ஏதுவாக ' யாழ்ப்பாணம் மரபுரிமை இயக்கம்' என்ற அமைப்பு தற்போது யாழ்பபாணத்தில் நிறுவப்பட்டுள்ளது. இதன் தலைவராக யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை முன்னாள் பேராசிரியர் புஸ்பரட்ணம் அவர்கள் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளார்.
இந்த அமைப்பின் முதற்கட்ட வேலையாக சங்கிலின் தோரணத்திற்கு முன்பாக அமைந்துள்ள 'மந்திரி மனை' என்ற வரலாற்று முக்கியத்துவம் கொண்ட கட்டடத்தை தொலலியல் திணைக்களத்திடமிருந்து அனுமதியைப் பெற்று அதனை பாதுகாக்கும் வகையில் புணரமைத்து பாதுகாப்பாக பராமரிப்பது என்ற திட்டத்தின் ஆரம்பக் கட்டமாக தொல்லியல் திணைக்களத்திடமிருந்து அனுமதியைப் பெற்றுள்ளோம்.
தற்போது இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு பாரிய நிதி தேவைப்படுகின்றது.
இந்த நிதியை இலங்கை அரசாங்கமோ அன்றி தொல்லியல் திணைக்களமோ எமக்கு தராமாட்டா.எனவே எமது புலம் பெயர் உறவுகளிடமிருந்து நிதிஅன்பளிப்புக்களை நாம் ஏற்றுக்கொள்ளவுள்ளோம்.
இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்தும் அதே நேரத்தில் அதற்கு சமாந்தரமாக இந்த சங்கிலியன் இராஜதானி அமைந்திருந்த பிரதேசத்தில் அமைந்திருக்கும் சங்கிலியன் தோரண வாயில். ஜமுனா ஏரி. சங்கிலியன் அரண்மனை ஆகியவற்றை பாதுகாத்து பராமரிப்பது போன்ற பணிகளையும் மேற்கொள்ள தீர்மானித்துள்ளோம்.' என்றார்.
தொடர்ந்து உரையாற்றிய கனடிய தமிழர் பேரவையின் தலைவர் சிவன் இளங்கோ அவர்கள் கருத்து தெரிவிக்கையில் 'மந்திரி மனை' பாதுகாத்து பராமரிக்கும் திட்டத்திற்கு தேவையான ஆரம்பக் கட்ட நிதியை கனடிய தமிழர் பேரவை சேகரித்து வழங்கும் என்று உறுதியளித்தார்.
தொடர்ந்து கனடிய தமிழ் ஊடகங்களான பத்திரிகைகள் மற்றும் சமூக ஊடகங்களின் பிரதிநிதிகளின் கேள்விகளுக்கும் மேயர் மணிவண்ணம் பதிலளித்தார்.

- ***LJI ARJUNE AND GANESH***

# அரசியல் கைதிகளின் விடுதலை அரசாங்கத்தின் ஏமாற்று வார்த்தைகளாகும் — செல்வம் அடைக்கலநாதன் MP

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கப்படும் என்று ஜனாதிபதி கூறுகின்ற போதும், அவர்கள் மீது புதிய வழக்குகள் பதிவு செய்யப்படுகின்றது. இதனால் அரசியல் கைதிகளின் விடுதலை என்பது ஏமாற்று வார்த்தைகளாக மாறப்போகின்றனவா என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது என செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நடைபெற்ற சமூக பாதுகாப்பு வரி தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அதன்போது செல்வம் அடைக்கலநாதன் எம்.பி மேலும் தெரிவிக்கையில்,
எங்களுடைய மக்களின் பிரச்சினைகள் ஒவ்வொரு நாளும் மேலோங்கி இருக்கின்றது. ஜனாதிபதி தனது அக்கிராசன உரையில் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதாக கூறியிருந்தார். அதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அவரை சந்தித்த போது, அதில் அக்கறை உள்ளவர் போன்றும் கூறியிருந்தார். ஆனால் இப்போது அரசியல் கைதிகள் உண்ணாவிரதம் இருக்கின்றதாக அறிகின்றோம்.

நீதிமன்றத்தினால் வழக்குகள் தீர்க்கப்பட்ட அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான நிலை இருந்த போதும், ஜனாதிபதி பொது மன்னிப்பில் விடுதலை செய்யும் நிலை உள்ள போதும், அவர்கள் மீது புதிய வழக்குகளை பதிவு செய்யும் துர்ப்பாக்கிய நிலைமை இருக்கின்றது. இந்த ஒருவாரத்திற்குள் பலர் மீது புதிய வழக்குகள் போடப்பட்டுள்ளன. தீர்ப்பளிக்கப்பட்ட 10 வருடங்கள், 15 வருடங்களாக அந்த தீர்ப்பை அனுபவித்துக்கொண்டு இருக்கின்ற நேரத்தில் புதிய வழக்குகளை போடுவதை அவதானிக்க முடிகின்றது. அவர்களின் விடுதலை என்பது ஏமாற்று வார்த்தைகளாக மாறப்போகின்றனவா என்ற அச்சம் எங்களிடையே ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் ஜனாதிபதி கவனம் செலுத்தி அவர்களை விடுதலை செய்யும் வாய்ப்புகளை ஏற்படுத்த வேண்டும். இந்நிலையில் புதிய வழக்குகளை போடுவதன் ஊடாக அவர்கள் சிறைகளுக்குள்ளேயே மரணிக்கும் சூழல் ஏற்படுவதாகவே நாங்கள் கருதுகின்றோம். இதனால் இந்த விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் என்று வேண்டுகேள் விடுகின்றோம்.

இதேவேளை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் விசாரணைகளுக்காக வடக்கு, கிழக்கில் பலரை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் அழைத்துள்ளனர். அதில் தமிழ் பத்திரிகையாளர்களும் விசாரணைகளுக்காக அழைக்கப்பட்டுள்ளனர். வடக்கு கிழக்கில் 12 பேருக்கும் மேல் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளனனர். இவ்வாறான நிலைமையில் எவ்வாறு சமாதானத்தை உருவாக்க முடியுமாக இருக்கும்.

விசாரணைக்கு அழைக்கப்படுவதற்கான காரணங்கள் கூறப்படவில்லை. வெளிநாட்டில் உள்ளவர்களுடன் தொடர்பு வைத்திருந்தமையும் காரணமாக கூறப்படுகின்றது. இந்த விடயங்கள் இனப் பிரச்சினைக்கான தீர்வுக்கு எவ்வாறு வழியமைக்கப்போகின்றது.

மீள் உருவாக்கம் என்ற நிலை இப்போது இல்லை. புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் கூட அரசியலுக்கு வரும் சூழல் இருக்கின்றது. இவ்வாறான நிலைமையில் அனைவரையும் அழைத்து விசாரணை என்றால் இனப்பிரச்சினைத் தீர்வுக்கும், நாட்டின் பொருளாதாரப் பிரச்சினைகளை தீர்பதற்கும் எங்களின் புலம்பெயர்ந்தவர்கள் வருவார்களா என்று கேட்கின்றேன்.

இதேவேளை இந்தியாவில் இருந்து எங்களின் மக்களை அழைத்துவர குழுவொன்றை அமைத்துள்ளனர். இதனை வரவேற்கின்றோம். அவர்கள் பல வருடங்களாக இருந்தவர்கள். இவர்களை விமானத்தில் அழைத்து வரும் போது குறிப்பிட்ட கிலோ அளவுக்கே பொருட்களை கொண்டு வர முடியும். இதனால் அவர்களை கப்பல்களில் அழைத்துவர நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர்களுக்கு காணி, வீடு வழங்கப்பட வேண்டும் என்று கோரிக்கைகளை முன்வைத்துள்ளோம். ஆனால் இதற்கு முன்னர் வந்தவர்களுக்கு அவ்வாறு வழங்கவில்லை.

இதனால் அவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய அனைத்தையும் வழங்கியே கொண்டுவர வேண்டும் என்று கூறுகின்றோம். இந்தியாவில் இருந்து படித்து பட்டதாரிகளாகியவர்களுக்கு இங்கு வந்த பின்னர் முறையான வேலைகள் வழங்கப்படுவதில்லை. இதனால் அவர்களுக்கு வேலைவாய்ப்புகளை வழங்க வேண்டும். இவற்றை செய்த பின்னரே அழைத்து வர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

# ரணில் ஆட்சியின் அடக்குமுறை குறித்து ஜேடிஎஸ் ஐ.நாவிற்கு அறிக்கை



அதிருப்தியாளர்களுக்கு எதிராக அரசாங்கம் மேற்கொண்டு வரும் அடக்குமுறையை விபரிக்கும் அறிக்கை ஒன்றை, இலங்கையில் ஜனநாயகத்திற்கான ஊடகவியலாளர்கள் அமைப்பு (JDS) ஐக்கிய நாடுகள் சபைக்கு சமர்ப்பித்துள்ளது.

பாரிய கொடூரமான குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட நாட்டின் இராணுவம் மற்றும் அரசியல் தலைவர்களுக்கு எதிராக சர்வதேச நீதிமன்றத்திற்கு வழக்குத் தொடரவும் பொருளாதாரத் தடைகளை விதிக்கவும் ஆவணங்களுடன் அந்த அமைப்பு அழைப்பு விடுத்துள்ளது.

கோட்டாபய ராஜபக்சவை வெகுஜனப் போராட்டத்தின் மூலம் பதவியில் இருந்து அகற்றிய பின்னர், ஜனாதிபதியாகப் பதவியேற்ற ரணில் விக்ரமசிங்க ஒரு மாத காலத்துக்கும் மேலாக பல கடுமையான மனித உரிமை மீறல்களை மேற்கொண்டுள்ளதாக, ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பப்பட்ட 11 பக்க அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் வசந்த முதலிகே, அனைத்துப் பல்கலைக்கழக பிக்குகள் ஒன்றியத்தின் ஏற்பாட்டாளர் கல்வெவ சிறிதம்ம தேரர் மற்றும் களனிப் பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞானப் பிரிவின் மாணவர் செயற்பாட்டாளர் ஹஷான் ஜீவந்த குணதிலக்க ஆகியோர் பயங்கரவாதச் சட்டத்தைப் பயன்படுத்தி 90 நாட்கள் சிறையில் அடைக்கப்பட்டுள்ளதோடு, பிணையில் விடுதலையாகியுள்ள கவிஞர் அஹ்னாப் ஜஸீம், பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் 3 வருடங்களுக்கு மேலாக விசாரணையின்றி சிறையில் அடைக்கப்பட்டுள்ள பலாலி வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் சின்னையா சிவரூபனின் பெயர் பயங்கரவாதிகள் பட்டியல் இடம் பெற்றுள்ளமை ஜேடிஎஸ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இன்னும் ஒரு வாரத்தில் ஜெனீவாவில் நடைபெறவுள்ள சர்வதேச மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது அமர்வில் இலங்கையின் மனித உரிமை நடத்தைகள் தொடர்பான அறிக்கையை உயர்ஸ்தானிகர் முன்வைக்க உள்ளார்.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியும் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்சவும் அரசாங்கத்திற்கு பதிலளிக்க ஜெனீவா சென்றுள்ளனர்.

நாட்டை விட்டு வெளியேறும் முன் கொழும்பில் ஊடகவியலாளர்களை சந்தித்த வெளிவிவகார அமைச்சர், இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களுக்கு நீதி வழங்க சர்வதேச தலையீட்டை ரணில் விக்ரமசிங்க அரசாங்கம் அனுமதிக்காது என தெரிவித்தார்.



# இலங்கையில் தமிழ் ஆர்வலர்கள் மீதான அடக்குமுறை தொடர்கிறது



வடக்கு, கிழக்கு மக்களின் நீதிக்காகவும் உரிமைகளுக்காகவும் செய்தி வெளியிடும் தமிழ் ஊடகவியலாளர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் வெகுஜன ஆர்வலர்கள் மீதான அரச பாதுகாப்புப் படையினரின் துன்புறுத்தல் அடக்குமுறை ரணில் விக்ரமசிங்க நிர்வாகத்தின் கீழும் தொடர்கிறது.

ஜெனீவாவில் நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவை அமர்வுக்காக வெளிநாடு செல்வதற்கு முன்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிட்ட வெளிவிவகார அமைச்சர் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை விசாரிக்க சர்வதேச தலையீடுகளுக்கு இடமளிக்கப்பட மாட்டாது என தெரிவித்திருந்த நிலையிலேயே இந்த முயற்சி தீவிரமடைந்துள்ளது.

இந்த வாரத்தில் மாத்திரம் கிழக்கு மாகாணத்திலிருந்து ஒரு ஊடகவியலாளர் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர் ஆகியோர் கொழும்பு பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவுக்கு (CTID) விசாரணை தொடர்பான எந்த காரணமும் தெரிவிக்கப்படாமல் மீண்டும் அழைக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மாவட்ட சிவில் சமூக மன்றத்தின் தலைவர் சபாரத்தினம் சிவயோகநாதன் செப்டெம்பர் 9ஆம் திகதியும், மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் செயலாளர் எஸ்.நிலாந்தன் செப்டெம்பர் 14ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கும் விசாரணைக்காக அழைக்கப்பட்டுள்ளனர்.

செங்கலடியில் உள்ள ஊடகவியலாளர் நிலாந்தனின் வீட்டுக்கு செப்டெம்பர் மாதம் 3ஆம் திகதி அழைப்பு கடிதத்தை வழங்கச் சென்ற மட்டக்களப்பு பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஊடகவியலாளர் மனைவி மற்றும் குடும்பத்தினரின் பெயர்கள், தேசிய அடையாள அட்டை இலக்கங்கள் உள்ளிட்ட விபரங்களை பதிவு செய்துள்ளதாக மாகாண ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

பிள்ளையான் என அழைக்கப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் உள்ளிட்ட குழுவினரின் தொடர்ச்சியான அச்சுறுத்தல்கள் காரணமாக மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தின் செயலாளர் செல்வகுமார் நிலாந்தன், பொருளாளர் புண்ணியமூர்த்தி சசிகரன் ஆகியோர் மாகாணத்தை விட்டு வெளியேற நேரிட்டதாக தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் இராசமாணிக்கம் கடந்த மே மாதம் 5ஆம் திகதி நாடாளுமன்றத்தில் வைத்து பாதுகாப்பு அமைச்சருக்கு அறிவித்தார்.

## மூன்று மணி நேர விசாரணை

2009 ஆம் ஆண்டு மே மாதம் அழிக்கப்பட்டதாக அரசாங்கம் கூறுகின்ற, தற்போது செயலிழந்த தமிழீழ விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக, கடந்த ஆண்டு ஜூலை மாதம், பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவு (CTID) மட்டக்களப்பு மாவட்ட தமிழ் ஊடகவியலாளர் சங்கத்தைச் சேர்ந்த செல்வகுமார் நிலாந்தனிடம் விசாரணை நடத்தியது.

பயங்கரவாத எதிர்ப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவுக்கு அழைக்கப்பட்ட அவரிடம், விடுதலைப் புலிகளின் முன்னாள் அரசியல் பிரிவின் ஒரு தலைவராக இருந்த தயாமோகனுக்கும் அவருக்கும் தொடர்பு உள்ளதா என்றும், நாதம் மற்றும் மீனகம் இணையத்தளங்களை நடத்திச் செல்வதில் ஏதாவது தொடர்பு உள்ளதா எனவும் தொடர்ந்து கேள்வி எழுப்பியுள்ளார்.

மூன்று மணி நேரத்துக்கும் மேலான கடுமையான விசாரணைக்குப் பின்னர், ஊடகவியலாளரிடம் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துவது, கடவுச்சொற்களைப் பற்றியும் வங்கிக் கணக்கு குறித்தும் விசாரித்தது.

"நீங்கள் புலிகள் அமைப்பில் உறுப்பினராக இருந்தீர்களா? உங்கள் உறவினர்கள் யாரேனும் விடுதலைப் புலிகள் உறுப்பினராக இருந்தார்களா? புலிகளுக்கு உதவி செய்தீர்களா? அவர்களுடன் உங்களுக்கு தொடர்பு இருந்ததா?" போன்ற ஆதாரமற்ற கேள்விகள் அவரிடம் தொடர்ச்சியாக முன்வைக்கப்பட்டுள்ளன.

செல்வகுமார் நிலாந்தன் அரச சார்பற்ற நிறுவனமொன்றை நடத்தி வருகின்றார் எனவும், அப்படியானால் அதற்கு எவ்வாறு நிதி கிடைக்கிறது எனவும் அவரது ஊடகவியல் செயற்பாடுகள் தொடர்பிலும் அவர்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

பொலிஸாரின் துன்புறுத்தல்கள் தொடர்பில் ஊடகவியலாளர் நிலாந்தன் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

நியூயோர்க்கை தளமாகக் கொண்ட ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு (CPJ) ஊடகவியலாளர்களை துன்புறுத்துவதை நிறுத்துமாறு இலங்கை அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்திருந்தது.

"இலங்கை ஊடகவியலாளர் செல்வகுமார் நிலாந்தனை விசாரணை செய்து, அவரது சமூக ஊடகங்கள் மற்றும் வங்கிக் கணக்குகளில் உள்நுழைய கட்டாயப்படுத்துவதன் ஊடாக தமிழ் ஊடகவியலாளர்கள் துன்புறுத்தப்படுவது உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்" ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான





குழுவின், ஆசிய நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் ஸ்டீபன் பட்லர் தெரிவித்திருந்தார். "அதிகாரிகள் நிலாந்தனை அச்சுறுத்துவதை நிறுத்தி, அவரையும் ஏனைய தமிழ் ஊடகவியலாளர்களையும் சுதந்திரமாக செய்தி வெளியிட அனுமதிக்க வேண்டும்".

இப்போது அவர் மீண்டும் விசாரணைக்கு வருமாறு அழைக்கப்பட்டுள்ளார்.

ஒரு வருடத்திற்கு முன்னர், சபாரத்தினம் சிவயோகநாதனை விசாரணைக்கு வரவழைத்த CTID "இலங்கையில் தடைசெய்யப்பட்ட ஒரு அமைப்பு பற்றிய தகவல்கள் பரிமாறப்பட்ட வட்ஸ்அப் அரட்டை குழுவினை நடத்துவது நீங்களா" என பொலிஸார் அவரிடம் கடுமையாக விசாரித்தனர்.

அப்படிப்பட்ட அரட்டைக் குழுவில் தன்னை யார் இணைத்தது என தெரியாது எனவும், பின்னர் அந்த வட்ஸ்அப் அரட்டைக் குழுவில் பரிமாறப்பட்ட தகவல்களைப் பார்த்து தான் அந்தக் குழுவில் இருந்து வெளியேறியதாகவும் சபாரத்தினம் சிவயோகநாதன் பொலிஸாரிடம் தெரிவித்தார்.


SRI LANKA POLICE
MESSAGE FORM
From Station
To Station

இரண்டு மணித்தியாலங்களுக்கு மேலாக அவரிடம் விசாரணை நடத்திய பயங்கரவாதத் தடுப்பு மற்றும் புலனாய்வுப் பிரிவினர் சிவயோகநாதனின் கையடக்கத் தொலைபேசி மற்றும் பேஸ்புக் போன்றவற்றைக் கடுமையான ஆய்வுக்கு உட்படுத்தி அவரின் தனிப்பட்ட தகவல்களைப் பெற்றதாக அவர் மேலும் கூறுகிறார்.

வடக்கு மற்றும் கிழக்கில் வாழும் மக்களின் மனித உரிமை மீறல்கள் குறித்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் உள்ள மக்களுக்கு தெளிவுபடுத்தும் வகையில் கோட்டாபய ராஜபக்ச அரசுக்கு எதிராக பொத்துவில் முதல் பொலிகண்டி வரை நீண்ட நடைப்பயணத்தை ஆரம்பித்த P2P அமைதிப் பயணத்தின் தலைவர்களில் இவரும் ஒருவர்.

எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 12ஆம் திகதி முதல் ஒக்டோபர் 7ஆம் திகதி வரை நடைபெறவுள்ள ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 51ஆவது அமர்வின் போது, இலங்கையின் மனித உரிமைகள் நடத்தை தொடர்பில் உயர்ஸ்தானிகர் அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்ட விசேட அறிக்கை விவாதத்திற்கு உட்படுத்தப்பட உள்ளது.

கனடிய செய்திகள்
Canadian News

# கனடாவில் நடைபெற்ற பறைத் திருவிழா 2022

கடந்த செப்ரம்பர் 3ம் திகதி சனிக்கிழமையன்று கனடா ஒன்றாறியோ மாகாணத்தில் உள்ள கொல்மோன் என்ற நகரில் தமிழர் மரபுக் கலையகத்தினரல் "பறைத் திருவிழா" வெகு விமர்சையாகவும், வெற்றிகரமாகவும் நடைபெற்றது.





இந்த பறைத் திருவிழாவில் பல நகரங்களிலும் சென்று நூற்றுக்கும் அதிகமானேர் பங்குபற்றினர். மேற்படி பறைத் திருவிழா வெற்றிபெற நடைபெற பலர் உழைத்திருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



மேற்படி பறைத்திருவிழாவில் நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் பெண்கள் மற்றும் பாரம்பரிய பண்பாட்டு அமைச்சர் இந்துமதி கிருபசிங்கம் அவர்கள் வாழ்த்தும், பாராட்டுகளும் தெரிவித்ததுடன் நாடுகடந்த அரசாங்கம் சார்பில் திரு. மகாஜெயம், விஜிதரன் ஆகியோர் தமது குடும்பங்கள் சகிதம் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர் அத்துடன் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தின் ஆதரவாளர்களுனும் கலந்து சிறப்பித்தனர்.

- LJI Journalists Ganesh and Arjune

# அதிபர் பொ. கனகசபாபதி அவர்களின் பிறந்ததினத்தை நினைவு கூர்ந்த மாணவர்கள்

அதிபர் திரு. பொ. கனகசபாபதி அவர்கள் சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், காங்கேசந்துறை குருவீதியை வதிவிடமாகவும் கொண்டவர். 1957 ஆம் ஆண்டு தமிழ்நாட்டில் விலங்கியலுக்கான தங்கப்பதக்கத்தை தனதாக்கிக் கொண்ட பட்டதாரியான இவர் மகாஜனாக் கல்லூரியில் உயர்தர வகுப்பு விலங்கியல் ஆசிரியராகவும், அதன் பின் 1976 ஆம் ஆண்டு தொடக்கம் கல்லூரி அதிபராகவும் இணைந்து கடமையாற்றினார். இவரது காலத்தில் கல்வியில் மட்டுமல்ல, விளையாட்டுத் துறையிலும் கல்லூரி புகழ் பெற்றிருந்தது. இதைவிட ஏழாலை மத்திய மகாவித்தியாலயத்திலும், புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரியிலும் அதிபராகக் கடமையாற்றியிருந்தார். அதன் பின் சிறிது காலம் நைஜீரியாவில் கடமையாற்றினார். அங்கிருந்து 1987 ஆம் ஆண்டு கனடா வந்தார். 1991 ஆம் ஆண்டு தமிழ் மொழியை ஒரு பாடமாகக் ஒன்றாறியோ கல்விச் சபைகளில் கற்பிப்பதற்கு முன்னின்று பாடுபட்டார்.





இவர் பல நூல்களை வெளியிட்டு இருந்தாலும், கடைசியாக இவர் ஆக்கியளித்த "எம்மை வாழ வைத்தவர்கள்", "மரம் மாந்தர் மிருகம்" என்ற நூல்கள் பலராலும் இன்றும் பேசப்படுகின்றன. 1995 ஆம் ஆண்டு இவரது மணிவிழாவின் போது, "ஒரு அதிபரின் கூரிய பார்வை" என்ற நூலும், 1998 இல் "பெற்றோர் பிள்ளைகள் உளவியல்", 2000 ஆண்டு மாறன் மணிக் கதைகள், 2008 ஆம் ஆண்டு மாறன் மணிக்கதைகள்-2, மனம் எங்கே போகிறது, திறவு கோல், ஆகிய நூல்களும் வெளியிடப்பட்டன. ரொறன்ரோ கல்விச் சபையின் பல்கலாச்சார ஆலோசகராகவும், புலம் பெயர்ந்த சமூகத்திற்கு முக்கியமான ஆலோசகராக இருந்து நல்வழிப்படுத்திய அவர், கனடா பழைய மாணவர்சங்கத்தின் ஆரம்பகால அங்கத்தவராய், தலைவராய், ஆலோசகராய் இருந்து வழிநடத்தினார். மகாஜனக்கல்லூரியின் மிகப் பெறுமதி மிக்க 100 ஆண்டு சிறப்புமலர் வெளியிடுவதில் சர்வதேச இணைப்பாளராக இருந்து சிறப்பாகச் செயற்பட்டார்.

24-12-2014 ஆம் ஆண்டு எம்மைவிட்டுப் பிரிந்த அதிபர் பொ. கனகசபாபதி அவர்களின் நினைவாக கனடாவில் ரொறன்ரோ மல்வேன் பூங்காவில் "நினைவுமரம்" ஒன்று அவரது மாணவர்களாலும், நண்பர்களாலும் நடப்பட்டிருக்கின்றது. அவரிடம் கல்விகற்ற மாணவர்களும், நண்பர்களும் ஒவ்வொருவருடமும் இந்த நினைவு மரத்தடியில் அவரது பிறந்த தினமான செப்ரெம்பர் 4 ஆம் திகதி ஒன்றுகூடிக் கலந்துரையாடி நினைவுகூருவார்கள். அந்தவகையில் சென்ற ஞாயிற்றுக்கிழமை 4-9-2022 அன்று மாணவர்கள், மன்றக் காப்பாளர்கள், நிர்வாகசபை உறுப்பினர்கள், குடும்ப அங்கத்தவர்கள், நண்பர்கள் ஒன்றுகூடினார்கள்.

அந்த நிகழ்வில் பல கல்விமான்களையும், வைத்தியக் கலாநிதிகளையும் எங்கள் சமூகத்துக்கு உருவாக்கித் தந்த பெருமை அதிபர் பொ. கனகசபாபதி அவர்களைச் சாரும் என்று பழைய மாணவர் சங்கத் தலைவர் சி. புவனச்சந்திரா தனது உரையில் குறிப்பிட்டார். திரு. குமார் புனிதவேல், எழுத்தாளர் குரு அரவிந்தன், காப்பாளர்களான நா.சாந்திநாதன், க. ஜெயேந்திரன், செ. சுப்ரமணியம் மற்றும் அதிபரின் மகள் மணிமொழி ஆகியோரும் உரையாற்றினார்கள். சங்கச் செயலாளர் ந. தனபால் நன்றியுரை வழங்கினார். குளிரையும் பொருட்படுத்தாது வருகை தந்த எல்லோருக்கும் சிற்றுண்டி வழங்கப்பட்டது.

அதிபர் பொ.கனகசபாபதி அவர்களின் பெயரில் உள்ள நம்பிக்கைநிதியில் இருந்து விலங்கியலில் அதிக புள்ளிகள் எடுத்து பல்கலைக்கழகத்திற்குச் செல்லும் இலங்கையைச் சேர்ந்த, நிதிதேவைப்படும் தமிழ் மொழி மாணவர்களுக்கும், மகாஜனக்கல்லூரி மாணவருக்கும் நிதி உதவி செய்யவும் முன்மொழியப்பட்டது. இது பற்றி நிர்வாகசபையினர் அதிபரின் குடும்பத்தினருடன் கலந்தாலோசித்து இறுதி முடிவெடுத்தபின் விபரங்களை அறியத்தருவார்கள்.

- LJI Journalists Ganesh and Arjune

MORTGAGE
⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா
கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?
மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....
MORTGAGE CLINIC

www.mortgageclinicanada.com
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011
ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843
எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)

RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3
MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# கௌரவமான அரசியல் தீர்வு கோரி அம்பாறையில் கவனயீர்ப்பு போராட்டம்



மக்களின் கௌரவமான அரசியல் தீர்வுக்கான கோரிக்கையை முன் முன் வைத்து கவனயீர்ப்பு போராட்டம் அம்பாறையில் புதன்கிழமை (7) நடை பெற்றது.

100 நாட்கள் செயல் முனைவு மக்கள் குரல் அம்பாறை மாவட்டத்தில் பொத்துவில் பிரதேசத்தில் இன்ஸ்பெக்டர்க் ஏத்தம் பகுதியில் புதன்கிழமை (07) மக்களின் கௌரவமான அரசியல் தீர்வுக்கான கோரிக்கையை முன்வைத்து குறித்த கவனயீர்ப்பு போராட்டம் நடைபெற்றது.

"வடக்கு கிழக்கு மக்களுக்கு கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு வேண்டும்" எனும் 100 நாட்கள் செயல்முனைவின் 38ம் நாள் போராட்டம் இடம்பெற்றது.

இப் போராட்டமானது அம்பாறை மாவட்ட பாதிக்கப்பட்ட மக்கள், சிவில் அமைப்புக்கள் மற்றும் பெண்கள் இணைந்து எமக்கு நிரந்தரமான அரசியல் உரிமை வேண்டும்.

எங்கள் நிலம் எமக்கு வேண்டும், நடமாடுவது எங்கள் உரிமை, பேச்சு சுதந்திரம் எங்கள் உரிமை, ஒன்று கூடுவது எங்கள் உரிமை, என கோரிக்கைகளை முன்வைத்தனர்.

# இலங்கை அரசில் எவ்வித நம்பிக்கையும் எமக்கு இல்லை — காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு சர்வதேச விசாரணையே தேவை

## மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா



தற்போதைய ஜனாதிபதி நல்லாட்சி அரசில் இருந்தார். அப்போது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நல்லதொரு முடிவை தருவதாக கூறி இருந்தார். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை.தற்போது அவர் ஜனாதிபதியாக கண்ணை மூடிக்கொண்டு இருக்கிறார்.

இவ்வாறான சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு தாய்மார்களும், உறவுகளும் சர்வதேச விசாரணை மட்டுமே எமக்கு வேண்டும் என்ற கோரிக்கையில் உள்ளனர் என மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார்.

மன்னாரில் புதன்கிழமை (7) மதியம் இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகள் தொடர்பாக சர்வதேச விசாரணையே எமக்கு வேண்டும் என கோரி நாங்கள் கடந்த 13 வருடங்களுக்கு மேலாக சர்வதேசத்திடம் கோரி வருகிறோம். இலங்கை அரசில் எவ்வித நம்பிக்கையும் எமக்கு இல்லாத நிலையில் காணாமல், ஆக்கப்பட்ட உறவுகளுக்கு சர்வதேச விசாரணையே தேவை என்ற கோரிக்கையை நாங்கள் முன் வைத்தோம்.

ஆனால் 13 வருடங்களாகியும் எமது கோரிக்கை நிறைவேறவில்லை. எமது கோரிக்கை நிறைவேறும் நிலையில் இலங்கையில் இருந்து ஜெனிவா செல்கின்ற அமைச்சர்களும், அரசு சார்பாக செல்கின்றவர்களும் சர்வதேச விசாரணை தேவையில்லை. உள்நாட்டு விசாரணை வேண்டும் என்று கூறுகின்றனர். எதிர்வரும் 51 வது ஜெனிவா கூட்டத்தொடரில் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் உள்ளிட்ட குழுவினர் கலந்து கொள்ள உள்ளனர்.

குறித்த கூட்டத்தொடரில் கலந்துகொள்ள உள்ள இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் இலங்கையின் உள்நாட்டு விசாரணை போதும் என வலியுறுத்த உள்ளார். எனினும் உள்நாட்டு விசாரணையில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய எங்களுக்கு நம்பிக்கை இல்லை.

எத்தனையோ ஆணைக்குழுக்கள் இங்கே வந்து விசாரணைகளை முன்னெடுத்தனர். ஆனால் எவ்வித நடவடிக்கைகளையும் முன்னெடுக்கவில்லை. அவர்களின் எங்களுக்கு நம்பிக்கையும் இல்லை. இவ்வாறான நிலையில் நாங்கள் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி நிற்கின்றோம்.

ஜெனிவா கூட்டத்தொடரின் போது இலங்கையில் காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் தொடர்பில் தீர்க்கமான முடிவு எடுக்கப்பட வேண்டும். காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக நாங்கள் சுமார் 2 ஆயிரம் நாட்களுக்கு மேல் வீதியில் நின்று போராடி வருகிறோம். நீதிக்காகவே நாங்கள் போராடி வருகிறோம்.

நிதிக்காக போராடவில்லை.எமது உறவுகள் குறித்து உண்மையும், நீதியும் எமக்கு தேவை. தற்போதைய வெளிவிவகார அமைச்சராக உள்ள அலி சப்ரி, நீதி அமைச்சராக இருந்த காலத்தில் ஒவ்வொரு மாவட்டமாக சென்று நிதிக்காக எங்களுடன் கலந்துரையாடினார். அவர் நீதிக்காக ஒருபோதும் எங்களுடன் கலந்துரையாட வில்லை. இலங்கையில் உள்நாட்டு விசாரணை போதும் என்று கூற அவருக்கு எவ்வித அருகதையும் இல்லை. பாதிக்கப்பட்டவர்கள் நாங்கள். நாங்கள் தான் நிற்கின்றோம் எங்களுக்கு சர்வதேச விசாரணை மட்டுமே வேண்டும் என்று.

தற்போதைய ஜனாதிபதி நல்லாட்சி அரசில் இருந்தார். அப்போது காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் நல்லதொரு முடிவை தருவதாக கூறி இருந்தார். ஆனால் ஒன்றும் நடக்கவில்லை. தற்போது அவர் ஜனாதிபதியாக கண்ணை மூடிக்கொண்டு இருக்கிறார்.

இவ்வாறான சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட ஒவ்வொரு தாய்மார்களும், உறவுகளும் சர்வதேச விசாரணை மட்டுமே எமக்கு வேண்டும் என்ற கோரிக்கையில் உள்ளனர்.

**- மன்னார் நிருபர்**

இந்தியா செய்திகள்
India News

# திருச்சியில் மூடப்பட்டிருக்கும் நடிகர் திலகம் சிவாஜி கணேசன் சிலையைத் திறக்க அனுமதியளிக்காவிட்டால்!

திருச்சி மாநகரின் மையப்பகுதியில் நிறுவப்பட்டுள்ள நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் திருவுருவச் சிலையைத் திறப்பதற்கு அனுமதியளிக்க மறுத்து வரும் தமிழ்நாடு அரசின் செயல் வன்மையான கண்டனத்திற்குரியது. நடிப்புக்கலையில் தலைமை பல்கலைக்கழகமாக விளங்கிய ஆகப்பெரும் தமிழ்க்கலைஞரின் சிலையினைத் தமிழ்நாட்டிலேயே திறக்க முடியாத அவல நிலை நிலவுவது தமிழ் இனத்திற்கே ஏற்பட்ட பேரவமானமாகும்.

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களின் ரசிகர் பெருமக்களால் திருச்சி மாநகர் பாலக்கரை பகுதியில் கடந்த 2011 ஆம் ஆண்டுப் பெரும் பொருட்செலவில் அமைக்கப்பட்ட சிலையைத் திறக்க பலமுறை முயற்சித்தும் பத்தாண்டுகால அதிமுக ஆட்சியில் அனுமதி தரப்படவில்லை. ஆட்சி மாற்றம் ஏற்பட்டு ஒன்றரை ஆண்டுகளாகியும் திமுக அரசும், கடந்த அதிமுக அரசினைப்போலவே சிலையைத் திறக்க அனுமதி மறுப்பது உலகெங்கும் உள்ள அவரது ரசிகர்கள் மட்டுமின்றி, தமிழ் மக்கள் அனைவரிடமும் மிகுந்த மனவேதனையை ஏற்படுத்தியுள்ளது.

சிலையைத் திறக்கவேண்டி ரசிகர்கள் சார்பில் ஆட்சியாளர்கள் முதல் அரசு அதிகாரிகள் வரை பலமுறை முறையிட்டும், பல்வேறு போராட்டங்களை முன்னெடுத்தும் அனுமதி அளிக்கப்படாதது அவரது மங்காப் புகழ் மீதான காழ்ப்புணர்ச்சியே அன்றி வேறில்லை. இந்திமொழி திரைப்பட நடிகர்களுக்கு இங்கிலாந்து உள்ளிட்ட அயல் நாடுகள்கூடச் சிலை திறந்து, மரியாதை செய்கின்றன. தமிழ்நாட்டிலும் வேற்றுமொழி நடிகர், நடிகைகளின் சிலைகள் அமைக்கப்பட்டுள்ள நிலையில், அவற்றையெல்லாம் அனுமதித்துவிட்டு, தமிழ்நாடு அரசு தம் சொந்த மண்ணின் மகனது சிலையைத் திறக்க அனுமதி அளிக்காமல் காலம் தாழ்த்துவது மறைந்த அந்த மகத்தான கலைஞனுக்குச் செய்யும் மாபெரும் அவமரியாதையாகும்.






ஆகவே, இந்த நூற்றாண்டின் இணையற்ற திரைக்கலைஞர், நடிகர் திலகம் சிவாஜி கணேசன் அவர்களுக்கு திருச்சி பாலக்கரை பகுதியில் அமைக்கப்பட்டுள்ள சிலையைத் திறப்பதற்கு, தமிழ்நாடு அரசு உடனடியாக அனுமதியளிக்க வேண்டும், மேலும் தாமதித்தால் நடிகர் திலகத்தின் பிறந்தநாளான அக்டோபர் 1 ஆம் தேதி அவரது ரசிக பெருமக்களின் முன்னிலையில் நான் முன்னின்று சிலையை திறப்பேன் என தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

சினிமா

# "நட்சத்திரம் நகர்கிறது" திரைப்படம் பார்த்த ரஜினிகாந்த் பா. ரஞ்சித்தை பாராட்டினார்





இயக்குநர் பா. ரஞ்சித்தின் நட்சத்திரம் நகர்கிறது படம் குறித்து நடிகர் ரஜினிகாந்த் பாராட்டு தெரிவித்துள்ளார். இயக்குநர் பா. ரஞ்சித் இயக்கத்தில் உருவான நட்சத்திரம் நகர்கிறது படம் கடந்த ஆகஸ்ட் 31 ஆம் தேதி திரையரங்குகளில் வெளியானது. இந்தப் படத்தில் காளிதாஸ் ஜெயராம், துஷாரா விஜயன், கலையரசன் உள்ளிட்டோர் முக்கிய வேடங்களில் நடித்திருந்தனர்.

பா. ரஞ்சித் முதன்முறையாக இசையமைப்பாளர் தென்மாவுடன் இணைந்து பணியாற்றினார். நட்சத்திரம் நகர்கிறது படத்துக்கு கலவையான விமர்சனங்கள் கிடைத்துவருகிறது. ஒரு சிலர் இந்தப் படத்துக்கு அதீத பாராட்டு தெரிவித்துவரும் நிலையில் மற்றொரு சிலர் கடுமையாக விமர்சித்து வருகின்றனர். பா. ரஞ்சித் படங்களுக்கு இப்படி கலவையான விமர்சனங்கள் வருவது இயல்பான ஒன்றுதான். இந்த நிலையில் ரஜினிகாந்த் இந்தப் படத்தைப் பாராட்டியுள்ளார். இதனை இயக்குநர் பா.ரஞ்சித் தனது கீச்சகத்தில் பகிர்ந்துள்ளார்.

அதில், "நட்சத்திரம் நகர்கிறது படம் பார்த்துவிட்டு நடிகர் ரஜினிகாந்த் என்னிடம், இயக்கம், எழுத்து, நடிகர்களின் நடிப்பு, கலை, ஒளிப்பதிவு, இசை என இது உங்களது சிறந்த பணி என பாராட்டினார். உச்சகட்ட மகிழ்ச்சியில் இருக்கிறேன். நன்றி சார்" என தெரிவித்துள்ளார். இயக்குநர்கள் சாம் ஆண்டன், குமரன், இசையமைப்பாளர்கள் ஜி.வி. பிரகாஷ் குமார், ஜஸ்டின் பிரபாகரன், நடிகை காயத்ரி, நடிகர் ஷாந்தனு, தெலுங்கு இயக்குநர் நீரஜ் கெய்வான் உள்ளிட்டோர் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# நள்ளிரவில் வந்த தொலைபேசி அழைப்பால் உஷார் படுத்தப்பட்ட தனுஷ்கோடி கடல் பகுதி: மத்திய, மாநில உளவுத்துறை தீவிர சோதனை

இலங்கை தமிழர்கள் சுமார் 15 பேர் கடல் வழியாக தனுஷ்கோடி வந்து இறங்கி தனுஷ்கோடி புதிய பாலம் அருகே நிற்பதாக ராமநாதபுரம் மாவட்ட காவல்துறை கட்டுப்பாட்டு அறைக்கு வந்த மர்ம தொலைபேசி அழைப்பால் தனு'கோடி கடற்கரை பகுதி உஷார்படுத்தப்பட்டு மத்திய, மாநில உளவுத்துறை மற்றும் போலீசார் தனுஷ்கோடி பகுதியில் தீவிர சோதனை நடத்தினர்.

தொலைபேசி அழைப்பு வந்த எண்ணை போலீசார் விசாரித்து வருகின்றனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் மாதம் 22ஆம் தேதி முதல் இலங்கையில் இருந்து இலங்கை தமிழர்கள் தனு'கோடி கடல் வழியாக தமிழகத்திற்குள் அகதிகளாக வந்து மண்டபம் அகதிகள் முகாமில் தங்க வைக்கப்பட்டு வருகின்றனர்.

இவ்வாறு சட்டவிரோதமாக தமிழகத்திற்கு வரும் இலங்கை தமிழர்களை கண்காணிக்கவும், அவர்களை அழைத்து வரும் படகோடிக்களை சுற்றி வளைத்து கைது செய்யவும், மத்திய, மாநில உளவுத்துறை, இந்திய கடற்படை, கடலோர காவல் படை மற்றும் மரைன் போலீசார் உஷார்படுத்தப்பட்டு தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் புதன்கிழமை (7) இரவு சுமார் 11 மணியளவில் இராமநாதபுரம் மாவட்ட காவல் காவல்துறை கட்டுப்பாட்டு அறைக்கு மர்ம தொலைபேசி அழைப்பு ஒன்று வந்தது.

அதில் பேசிய மர்ம நபர், தனுஷ்கோடி கடல் பகுதியில் 15க்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வந்திருப்பதாகவும், அவர்களை அழைத்து வந்த படகோடிகள் அரிச்சல்முனை பகுதியில் இருப்பதாகவும் உடனடியாக வந்தால் அவர்களை கைது செய்து இலங்கை தமிழர்களை மீட்டு செல்லாம் என தெரிவித்துள்ளார். மேலும் அதே மர்ம நபர் மரைன் போலீசாரையும் தொலைபேசியில் அழைத்து இதே போல் கூறியுள்ளார்.

இதையடுத்து தனுஷ்கோடி கடற்கரை பகுதி உஷார்படுத்தப்பட்டு, உடனடியாக மத்திய, மாநில உளவுத்துறை, மரைன் போலீஸ் மற்றும் தனுஷ்கோடி காவல் நிலைய போலீசார் சுமார் 20க்கும் மேற்பட்டோர் ஜீப், வேன் உள்ளிட்ட வாகனங்களில் தனுஷ்கோடி அரிச்சல்முனை, தனுஷ்கோடி புதிய பாலம், கோதண்டராமர் கோயில், சேராங்கோட்டை உள்ளிட்ட கடற்கரைப் பகுதியில் இரவு முழுவதும் இலங்கை தமிழர்கள் மற்றும் படகோடிகளை தேடினர். ஆனால் அந்த தொலைபேசி அழைப்பில் குறிப்பிட்டவாறு இலங்கை தமிழர்கள் யாரும் அகதிகளாக தனுஷ்கோடி வரவில்லை என உறுதி செய்யப்பட்டது.

பின்னர் அந்த தொலைபேசி எண்ணை தொடர்பு கொண்ட போது செல்போன் அணைத்து வைக்கப்பட்டது. இதனால் சந்தேகமடைந்த போலீசார் தொலைபேசியில் அழைத்தது யார் என்பது குறித்து செல்போன் எண்ணை கொண்டு போலீசார் தீவிரமாக விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

மர்ம நபரின் தொலைபேசி அழைப்பால் இரவு முழுவதும் தனுஷ்கோடி கடல் பகுதி உஷார்படுத்தப்பட்டு மத்திய, மாநில உளவுத்துறை அதிகாரிகள் மற்றும் மரைன் தனுஷ்கோடி உள்ளிட்ட பகுதியில் வாகன சோதனையில் ஈடுபட்டனர்.

**- மன்னார் நிருபர்**

# புதுக்குடியிருப்பு இஷானியா கலாமன்றத்தில் இடம் பெற்ற கல்வி நிலையக் கால்கோள் விழா, சாதனையாளர் மதிப்பளிப்பு, உணவுப்பொருட்கள் வழங்கல், அன்பின் உணவளிப்பு



ஈழத்தின் முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் அமைந்துள்ள இஷானியா கலாமன்றத்தில் 02.09.2022 வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு இந்த நிகழ்வு ஆரம்பமானது.

நிகழ்வுக்கு பிரதம அதிதியாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் சி.ஜெயக்காந் கலந்து கொண்டார். சிறப்பு அதிதியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி பண்டிதர் ம.ந. கடம்பேசுவரன் கலந்து கொண்டார். இஷானியா கலாமன்ற நிறுவுநர் வை.கமலராஜா ஒழுங்கமைப்பில் நிகழ்வுகள் இடம்பெற்றன.

தொடக்க நிகழ்வாக விருந்தினர்கள் மாலை அணிவிக்கப்பட்டு வரவேற்கப்பட்டனர். சுடர் ஏற்றல் அகவணக்கம் என்பன இடம்பெற்றதனைத் தொடர்ந்து வரவேற்புரையினை ஆசிரியர் பாஸ்கரன் வழங்கினார். ஆசியுரையினை சிவஹ்ரீ நவரத்தினம் வழங்கினார். யோ. புரட்சி நிகழ்ச்சிகளை தொகுத்து அளித்தார்.

பிரதம அதிதி உரையினை புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் சி.ஜெயகாந்த் நிகழ்த்தினார். தொடர்ந்து சாதனையாளர் மதிப்பளிப்பு இடம் பெற்றது. விளையாட்டுச் சாதனையாளர் ம.அகிலத்திருநாயகி, மனிதநேயச் செயற்பாட்டாளர் ச.சுந்தரலிங்கம், அறநெறிச் செயற்பாட்டாளர் மா.பற்றிமா இராஜேஸ்வரி, குத்துச்சண்டை வீராங்கனை யோ.டிலைக்சனா, மாற்றுத்திறனாளி பெண் முயற்சியாளர் அ.வதனா ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டனர். இந்நிகழ்ச்சியை கவிஞர் ஜெயம் ஜெகன் ஒழுங்கமைத்தார். மதிப்பளிப்பு பெற்றோருக்கு பொற்கிழி வழங்கலும் இடம்பெற்றது.

தொடர்ந்து இஷானியா கலாமன்றம் நிறுவுநர் வை.கமலராஜா உரை நிகழ்த்தினார். சிறப்புரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி பண்டிதர் ம.ந. கடம்பேசுவரன் நிகழ்த்தினார். இஷானியா கலாமன்றத்தில் பாடங்களை நடத்தவுள்ள ஆசியர்களுக்கான வாழ்த்தளிப்பு இடம்பெற்றதோடு, முல்லைத்தீவு ஊடக மையத்திற்கு ஒரு இலட்சம் உரூபாய் நிதி வழங்கப்பட்டது.

தொடர்ந்து 50 குடும்பங்களுக்கான உணவுப் பொருட்கள் வழங்கல் இடம்பெற்றன. யாவருக்கும் வாழை இலையில் மதிய உணவு வழங்கப்பட்டது.



பிற்பகல் 02.00 மணிக்கு மாணவர்களுக்கான கற்கைகள் ஆரம்பித்தல் நிகழ்வு இடம்பெற்றது. 50 மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டதோடு, அவர்களுக்கான ஆரம்ப பாடங்கள் ஒழுங்கு. செய்யப்பட்டுள்ளன தமிழ், கணிதம், ஆங்கிலம், புல்லாங்குழல், கராத்தே, யோகா உள்ளிட்ட பாடங்களின் நேர அட்டவணை வழங்கப்பட்டது.

நிகழ்வில் நூற்றுக்கணக்கான பெரியோர்களும் சிறியவர்களும் கலந்து கொண்டனர்.



இந்தியா செய்திகள்
India News

# ஓபிஎஸ், இபிஎஸ், சசிகலா மூவருமே ஊழல்வாதிகள் என்கிறார் முன்னாள் அதிமுக எம்பி



ஓபிஎஸ், இபிஎஸ், சசிகலா ஆகிய மூவரும் ஊழல்வாதிகள் எனவும் தண்டனை பெற்ற சசிகலாவை அதிமுகவில் தலைமை பொறுப்பேற்க தொண்டர்கள் விரும்பவில்லை, இணைந்து செயல்படவே விரும்புவதாகவும் அதிமுக முன்னாள் எம்பி கேசி பழனிசாமி தெரிவித்துள்ளார். விழுப்புரம் நான்கு முனை சந்திப்பில் உள்ள தனியார் திருமண மண்டபத்தில் முன்னாள் அதிமுக எம்பி கே.சி. பழனிசாமி தலைமையில் அதிமுக தொண்டர்களுடான ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. அதனை தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த அவர், அதிமுகவில் ஜெயலலிதா மறைவிற்கு பிறகு அடிப்படை தொண்டர்கள் என்ன எண்ணுகிறார்கள் என்பது வெளிவருவதில்லை எனவும் தொண்டர்களின் கருத்துகளை கேட்பது ஜெயலலிதாவிற்கு பிறகு மறைந்து போய் உள்ளதால் தொண்டர்களை அனைத்து தொகுதிகளிலும் சந்தித்து வருவதாகவும் தொண்டர்கள் யார் ஒற்றை தலைமையில் பொறுப்பேற்க வேண்டும் என முடிவு செய்வார்கள் எனவும் தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து பேசிய அவர், எடப்பாடி பழனிசாமி, ஓ.பன்னீர் செல்வம், சசிகலா போன்றவர்களால் அதிமுகவில் யார் தலைமை பொறுப்பேற்க வேண்டும் என்ற உட்கட்சி யுத்தம் நடைபெறுவதாகவும், பல்வேறு பிளவுகளால் அதிமுகவை பலவீனப்பட்டுள்ளதால் பாஜக போன்ற கட்சிகள் கால் ஊன்றவும், திமுகவை வலிமை பெறும் வகையில் வழிவகை செய்யப்பட்டுள்ளதாகவும் கூறினார். அதிமுகவில் ஒற்றை தலைமை தான் தொண்டர்கள் எதிர்பார்க்கிற நிலையில் எடப்பாடி பழனிசாமியை ஒற்றை தலைமையையாக்க திணிக்க பார்ப்பதாகவும், தேசிய அளவில் அதிமுக வளர்ச்சி பெற வேண்டும் என்பது தான் ஜெயலலிதாவிற்கு நோக்கமாக இருந்த நிலையில் சாதிய பார்வை, லஞ்சம் ஊழல், தொண்டர்கள் புறக்கணிக்கப்பட்டு அடிப்படை உறுப்பினர்களின் கருத்துக்கள் புறக்கணிக்கப்படுவதாகவும் அதிமுக ஒற்றை தலைமை பொதுக்குழு வழக்கில் நீதிமன்றம் தீர்ப்பினால் இருவரும் மாறி மாறி மேல் முறையீடு மட்டுமே செய்து வருவதாலும், உட்கட்சி பூசலால் கட்சியின் சின்னமும் கொடியும் தேர்தல் ஆணையத்தால் கட்சியின் சின்னம் முடக்க வாய்ப்பு இருப்பதாக கூறினார்.

அதிமுகவில் சாதி வாரியாக பிளவு ஏற்படுவதை தடுக்கவே தொண்டர்களை சந்திப்பதாகவும், ஒரு ஓ. பன்னீர்செல்வத்தையும், எடப்பாடி பழனிசாமியை நம்பி அதிமுக இல்லை இருவருக்கும் இங்கு தலைமைபொறுப்பேற்க வேண்டிய சுயநலம் தான் உள்ளதாகவும் ஓ பி எஸ், இபிஎஸ், சசிகலா ஆகிய மூவரும் ஊழல்வாதிகள் என்றும் அதிமுகவில் தண்டனை பெற்ற சசிகலா தலைமை பொறுப்பேற்க தொண்டர்கள் விரும்பவில்லை எனவும் இணைந்து செயல்படவே விரும்புவதாக அதிமுக முன்னாள் எம்பி கேசி பழனிச்சாமி தெரிவித்துள்ளார். விழுப்புரத்தில் கே.சி. பழனிச்சாமி தலைமையில் ஆலோசனை கூட்டம் தொடங்குவதற்குள் அதிமுக தொண்டர்களாக வந்தவர்கள் முண்டியடித்து கொண்டு உணவு கூடத்திற்குள் சென்று உணவு உண்ன அமர்ந்ததால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது.



# காரைக்கால் நேரு நகரில் படிப்பில் தனது மகளை முந்திய மாணவனுக்கு குளிர்பானத்தில் விஷம் கலந்த கொடிய தந்தை

மனதில் எவ்வளவு வன்மமும், பொறாமையும் புகுந்திருக்கிறது என்பதற்கான உதாரணமாக இருக்கிறது இந்த சம்பவம். கொஞ்சம் தாமதித்திருந்தாலும், உயிரையே பறித்திருக்கும். மாணவர்களுக்குள் போட்டி, பொறாமை இருக்க கூடாது. நண்பர்களாக பழக வேண்டும் என்று போதிக்க வேண்டிய பெற்றோர்களே இப்படியெல்லாம் வன்மத்தோடும், பொறாமையோடும் இருப்பார்களா என்பது அதிர்ச்சியை ஏற்படுத்துகிறது. வகுப்பில் தனது மகளை விட நன்றாகப் படிக்கும் மாணவனுக்கு குளிர்பானத்தில் விஷத்தைக் கலந்து கொடுத்தது அம்பலமானது. புதுச்சேரி மாநிலம் காரைக்கால் நேரு நகரில் வசித்து வருபவர் ராஜேந்திரன். இவர் காரைக்கால் நியாயவிலைக் கடையில் பணிபுரிந்து வருகிறார். இவருக்கு ஒரு பெண் மற்றும் 2 ஆண் குழந்தைகள் உள்ளனர். இவரது 2வது மகன் பால மணிகண்டன் நேரு நகரில் உள்ள தனியார் பள்ளியில் 8-ம் வகுப்பு படித்து வருகிறார். இந்நிலையில் அப்பள்ளியில் நடைபெற்ற ஆண்டு விழா ஒத்திகை நிகழ்ச்சிக்காக காலையில் சென்ற சிறுவன் மதியம் வீடு திரும்பிய நிலையில் வாந்தி மயக்கம் ஏற்பட்டுள்ளது.

இதைகண்டு அதிர்ச்சியடைந்த பெற்றோர் விசாரித்தபோது பள்ளியில் காவலாளி குளிர்பானம் கொடுத்ததாகவும், அதை சாப்பிட்டதிலிருந்து வாந்தி வருவதாகவும் தெரிவித்துள்ளார். இதனையடுத்து மாணவனை சிகிச்சைக்காக மருத்துவமனையில் பெற்றோர்கள் சேர்த்துள்ளனர். மேலும் பள்ளியில் சென்று விசாரித்தபோது மாணவனின் பெற்றோர்கள் கொடுத்த குளிர்பானம் மட்டுமே மாணவருக்கு வழங்கப்பட்டதாக பள்ளியில் தெரிவித்துள்ளனர். இதனால் அதிர்ச்சியடைந்த பெற்றோர் தாங்கள் குளிர்பானம் கொடுக்கவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

இதையடுத்து பாடசாலை காவலாளி தேவதாஸ் என்பவரிடம் இதுகுறித்து விசாரித்தபோது, மாணவன் பால மணிகண்டன் உறவினர் என ஒருவர் குளிர்பானம் வழங்கியதாகத் தெரிவித்துள்ளார். இதனையடுத்து சிசிடிவி காட்சிகளை ஆய்வு செய்தபோது மாணவன் பயிலும் அதே வகுப்பை சேர்ந்த மாணவியின் பெற்றோர் குளிர்பானம் வழங்கியது தெரியவந்தது. இதையடுத்து காரைக்கால் நகர காவல் நிலையத்தில் சிறுவனின் தாய் மாலதி, குளிர்பானத்தில் விஷம் கலந்து கொடுத்த சகாய ராணி விக்டோரியா மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என புகார் அளித்தார்.

புகாரின் பேரில் போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். பால மணிகண்டன் வகுப்பில் சிறந்த மாணவனாக உள்ளதால் சகாய ராணி விக்டோரியாவின் மகளுக்கும் சிறுவனுக்கும் போட்டி இருந்து வந்துள்ள நிலையில் குளிர்பானத்தின் விஷம் கலந்து கொடுத்து இருக்கலாம் என்ற கோணத்தில் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். படிப்பில் ஏற்பட்ட போட்டியின் காரணமாக தனது மகனுக்கு விஷம் கலந்த குளிர்பானம் கொடுத்த பெற்றோரை உடனடியாக கைதுசெய்ய வேண்டும் என பாதிக்கப்பட்ட சிறுவனின் பெற்றோர் கோரிக்கை விடுத்துள்ளனர். இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.



# கனடிய தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் மாபெரும் நிதி சேர் நடைப் பயணம்

## இலங்கையில் உள்ள ஐந்து பிரதான வைத்தியசாலைகளுக்கு திரட்டப்பெறும் நிதி அனுப்பிவைக்கப்படும்




இலங்கை அதன் வரலாற்றில் மிக மோசமான சமூக-பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் உள்ளது. ஒரு காலத்தில் வலுவான சுகாதார அமைப்பு வீழ்ச்சியை நெருங்குகிறது, நோயாளிகள் மின் பற்றாக்குறை, மருந்துகள் பற்றாக்குறை மற்றும் உபகரணங்கள் பற்றாக்குறை ஆகியவற்றால் ஆபத்தில் உள்ளனர். - ஐக்கிய நாடுகள்

14வது வருடாந்த தமிழ் கனடிய நடைபயணம் செப்டம்பர் 11, 2022 அன்று ஸ்காபரோவில் உள்ள தாம்சன் நினைவுப் பூங்காவில் நேரில் வந்துள்ளது. இந்த ஆண்டு நடைப்பயணத்தின் மூலம் திரட்டப்படும் நிதி, இலங்கை முழுவதும் உள்ள தெர்தெடுக்கப்பெற்ற 5 மருத்துவமனைகளுக்கு உயிர் காக்கும் மருத்துவப் பொருட்களை வாங்குவதற்கு உதவும். மெற்படி தெரிவு செய்யப்பட்டுள்ள 5 மருத்துவமனைகள் பின்வருமாறு-

புற்றுநோய் வைத்தியசாலை – தெல்லிப்பளை
மாவட்ட பொது வைத்தியசாலை – வவுனியா
மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை
கொழும்பு தெற்கு போதனா வைத்தியசாலை – களுபோவில
மாவட்ட பொது வைத்தியசாலை – நுவரெலியா

இலங்கையானது அதன் மோசமான நிதிச் சரிவால் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருவதால், மருத்துவமனைகள் உயிர்காக்கும் மருந்துகளின் பற்றாக்குறையை அதிகளவில் எதிர்கொள்கின்றன. 2022 தமிழ் கனடியன் நடைப்பயணத்தின் மூலம் திரட்டப்படும் 100% வருமானம் வடக்கு, கிழக்கு, மத்திய மற்றும் தெற்கு ஆகிய நான்கு பிராந்தியங்களில் உள்ள மருத்துவமனைகளுக்கு பயனளிக்கும்.


தெல்லிப்பளை வைத்தியசாலை போன்ற புற்றுநோய் வைத்தியசாலைகள் நோயாளிகளின் சிகிச்சையை இடையூறாகப் பேணுவதற்கு அத்தியாவசிய மருந்துப் பொருட்களை கையிருப்பில் வைத்திருக்க முடியாமல் திணறுகின்றன. பற்றாக்குறையின் தீவிரத்தை வலியுறுத்தும் சமீபத்திய நேர்காணலில், இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர், நோய்வாய்ப்படுவதற்கு அல்லது காயமடைவதற்கு எதிராக குடிமக்களை எச்சரித்தார் மருத்துவமனையில் மருத்துவ உதவி தேவை.

பற்றாக்குறையானது ரேபிஸ், கால்-கை வலிப்புக்கான மருந்துகள் மற்றும் முழுமையான இரத்த எண்ணிக்கை சோதனைகளை நடத்துவதற்கு தேவையான எதிர்வினைகளை உள்ளடக்கியது. தையல் பொருட்கள், பருத்தி கம்பளி, துணி, அறுவை சிகிச்சைக்கான பருத்தி மற்றும் இரத்தமாற்றத்திற்கான பொருட்கள் போன்ற பெரும்பாலான அத்தியாவசிய பொருட்கள் கடுமையான பற்றாக்குறையை எதிர்கொள்கின்றன.

இலங்கை முழுவதிலும் உள்ள மருத்துவமனைகள் மற்றும் சுகாதார நிபுணர்கள், உயிர் காக்கும் அடிப்படை மருத்துவப் பொருட்களை வாங்குவதற்கு நன்கொடைகள் மூலம் உதவி கேட்டு வருகின்றனர். அவர்களது வேண்டுகோளுக்கு இணங்க இந்த நிதி சேர் நடைப் பயணத்தின் மூலம் சேகரிக்கப்படும் நிதி அனுப்பி வைக்கப்படவுள்ளது.



# ஜெனீவா 2022



**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

ஐநா மனித உரிமைகள் பேரவை எனப்படுவது ஒரு நாட்டுக்கு எதிராகத் தீர்மானத்தை நிறைவேற்றலாம். ஆனால் அதை நடைமுறைப்படுத்தும் ஆணை அந்தப் பேரவையிடம் கிடையாது. அதை நடைமுறைப்படுத்தும் உபகரணம் எதுவும் அந்தப் பேரவையிடம் கிடையாது. ஒரு நாட்டுக்கு எதிராக பொருளாதார தடைகளை விதிப்பதற்கோ, பயன் பொருத்தமான அழுத்தங்களைப் பிரயோகிப்பதற்கோ பேரவையால் முடியாது. மாறாக குறிப்பிட்ட ஒரு நாடு பேரவையோடு இணங்கிச் சென்றால் அந்த நாட்டுடன் இணைந்து ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அந்த நாட்டின் இணையனுசரணையோடு ஐநா அலுவலர்கள் தொழிற்பட முடியும். அதன்மூலம் ஒரு தீர்மானத்தை நடைமுறைப்படுத்த முடியும்.

ராஜபக்சக்கள் ஆட்சியில் இருந்தவரை, ஐநா தீர்மானங்கள் இலங்கை அரசாங்கத்துக்கு எதிராகவே நிறைவேற்றப்பட்டன. அவை ஒருவிதத்தில் இலங்கை அரசாங்கத்துக்கு எதிரான மேற்கத்திய வியூகங்களின் பகுதியாக காணப்பட்டன. அவை தமிழ்மக்களுக்கு ஆதரவானவை என்ற வெளித்தோற்றத்தை கொண்டிருந்தாலும், அவற்றுக்குப் பின்னால் இருந்த ராஜதந்திர இலக்கு என்னவென்றால், சீனாவை நோக்கிச் சாயும் இலங்கை அரசாங்கத்தை கட்டுப்படுத்துவதுதான். இந்த அடிப்படையில் ராஜபக்சக்களின் காலத்தில் ஐநா தீர்மானங்கள் அரசாங்கத்திற்கு எதிரானவை. ஆனால் ரணிலுடைய காலத்தில் 2015ல் ஐநாவுடன் அவர் இணக்கத்துக்கு வந்தார். அவ்வாறு இணை அனுசரணை வழங்கி உருவாக்கப்பட்டதுதான் நிலைமாறு கால நீதிக்கான 30/1 தீர்மானம்.

ஆனால் ரணில் விக்கிரமசிங்க இணை அனுசரணை வழங்கி உருவாக்கிய தீர்மானத்தின் பிரகாரம் கட்டமைப்புசார் மாற்றங்களை செய்யவில்லை. அதனால் நிலைமாறு கால நீதி இலங்கைத் தீவில் ஓரழகிய பொய்யாக மாறியது. நாங்கள் ஒரு பரிசோதனை செய்தோம் அதில் தோற்று விட்டோம் என்று சுமந்திரன் வவுனியாவில் வைத்து தெரிவித்தார். ஏனெனில் கூட்டமைப்பு நிலைமாறுகால நீதியின் பங்காளியாகக் காணப்பட்டது.

இது 2015 ஆட்சி மாற்றத்தின் பின் நிகழ்ந்தது. அதன்பின் ராஜபக்சங்கள் மறுபடியும் வந்தார்கள். அவர்களுடைய காலத்தில் அரசாங்கத்திற்கு எதிராக ஐநா தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கடந்த ஆண்டு 46/1 தீர்மானத்தின் மூலம் சாட்சிகளையும் சான்றுகளையும் சேகரிப்பதற்கான ஒரு அலுவலகம் பரிந்துரைக்கப்பட்டது.

இப்பொழுது ரணில் வந்து விட்டார். தர்க்கத்தின்படி பார்த்தால் இந்த முறை வரக்கூடிய தீர்மானம் ரணில் விக்ரமசிங்கவின் இணை அனுசரணையோடு நிறைவேற்றப்பட வேண்டும். அதற்கான வாய்ப்புகள் உண்டா?

இல்லை. ஏனெனில் ரணில் இப்பொழுது ராஜபக்சக்களின் முன்தடுப்பாக காணப்படுகிறார். அவருடைய வெளிவிவகார அமைச்சர் யார் என்றால், ராஜபக்சக்களின் தனிப்பட்ட வழக்கறிஞரான அலி சப்ரி. கடந்த திங்கட்கிழமை அலி சப்ரி பின்வருமாறு தெரிவித்தார்... "இலங்கைக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள மனித உரிமைகள் குற்றச்சாட்டுக்களின் உண்மையை கண்டறிவதற்காக உள்ளக பொறிமுறை ஒன்று எதிர்வரும் காலங்களில் நடைமுறைப்படுத்தப்படும்". ஐ.நா மனித உரிமைகள் பேரவையுடன் பேச்சுவார்த்தைமூலம் இணக்கமொன்றை ஏற்படுத்திக்கொள்ள எதிர்பார்ப்பதாகவும் அலிசப்ரி கொழும்பில் வைத்து கடந்த திங்கட்கிழமை தெரிவித்துள்ளார்.

"இந்த உள்ளக பொறிமுறை ஊடாக மனித உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பில் இறுதி நிலைப்பாட்டை எட்டவுள்ளோம். இந்த விடயத்தில் இராணுவத்தின் மீது அநீதியான வகையில் பாரிய குற்றச்சாட்டு சுமத்தப்பட்டுள்ளது. எனவே, அவர்களுக்கும் தங்களது நிலைப்பாட்டை தெரிவிக்க வாய்ப்பு வழங்கப்படும். அதேநேரம் பாதிக்கப்பட்டுள்ள பொது மக்களுக்கு தங்களது பிரச்சினைகளுக்கு தீர்வினை பெற்றுக் கொடுப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படும். இலங்கையின் சட்டம் மற்றும் யாப்பு என்பவற்றுக்கு உட்பட்டு இதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும். இலங்கையின் சட்டம் மற்றும் யாப்புக்கு அப்பால் சென்று எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்பட மாட்டாது" எனவும் அலிசப்ரி தெரிவித்துள்ளார்.

ஆனால், 2015ஆம் ஆண்டுபோல இம்முறை அரசாங்கத்தின் இணை அனுசரணையோடு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்படக்கூடிய வாய்ப்புகள் உண்டா? குறிப்பாக முன்னைய தீர்மானத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட சாட்சிகளையும் சான்றுகளையும் திரட்டுவதற்கான அலுவலகத்தை ஒரு உள்நாட்டுப் பொறிமுறை மூலம் பதிலீடு செய்யவே முடியாது. ஏனென்றால் அந்த அலுவலகம் ஏற்கனவே இயங்கத் தொடங்கிவிட்டது.

அது ஒரு பலமான அலுவலகம் அல்ல. அது, கடந்த ஆண்டு ஜனவரி மாதம் 21 ஆம் தேதி மூன்று தமிழ்த் தேசிய கட்சிகளும் ஜெனிவாவுக்கு கூட்டாக எழுதிய கடிதத்தில் கேட்டிருந்த பொறிமுறையும் அல்ல. அது மனித உரிமைகள் பேரவைக்கு கீழ்தான் இயங்கும். கடந்த 13 ஆண்டுகளாக மனித உரிமைகள் பேரவை தமிழ் மக்களுக்கு எப்படிப்பட்ட நீதியைப் பெற்றுத்தந்தது என்பது எல்லாருக்கும் தெரியும்.

ஆனால் அப்பலவீனமான அலுவலகத்தைக்கூட சீனா மேலும் பலமிழக்கச் செய்ததாக புலம்பெயர்ந்த தமிழ் அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன. அந்த அலுவலகத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை சீனா தலையிட்டு குறைத்து விட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன. அக்கட்டமைப்புக்கு முதலில் பிரித்தானியாவும் நோர்வேயும் நிதிஉதவி வழங்குவதாக கூறப்பட்டது. ஆனால் அவ்வாறு விசேஷ நிதியை ஒதுக்காமல், ஐநாவின் பொதுநிதி ஒதுக்கீட்டுக்கூடாக அந்த அலுவலகத்தை இயக்கவேண்டும் என்று சீனா வலியுறுத்தியதாக தெரிய வருகிறது.

இது கடந்த ஆண்டு நடந்தது. ஐநா மனித உரிமைகள் பேரவைக்கு ஏற்கனவே நிதிப்பற்றாக்குறை உண்டு. அப்பற்றாக்குறை இந்த அலுவலகத்திலும் பிரதிபலித்தது. கடந்த ஆண்டு ஐநா மனித உரிமைகள் ஆணையாளர் தன்னுடைய அறிக்கையில் இந்நிதிப் பற்றாக்குறை தொடர்பாக சுட்டிப்பாகக் கூறியுள்ளார். நிதி போதாமையால்தான் அவ்வலுவலகம் முழு வேகத்தோடும் முழுப்பலத்தோடும் இயங்க முடியவில்லை என்று சுட்டிக் காட்டப்படுகிறது. நிதி போதாமையால் அவ்வலுவகத்தின் ஆளணி 13 இல் இருந்து 8ஆகக் குறைக்கப்பட்டது. எனினும் அவ்வலுவலகம் இப்பொழுது இயங்குகின்றது. அது சாட்சியங்களைச் சேகரித்து வருகிறது. அந்த அலுவலகத்தை பலவீனப்படுத்தும் நோக்கத்தோடு அல்லது அதற்குரிய காரணங்களை வழுவிழக்கச் செய்யும் நோக்கத்தோடு அலி சப்ரி உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றைக் குறித்து பேசுகிறார்.

ஆனால் உள்நாட்டுப் பொறிமுறை, உள்நாட்டுச் சட்டங்கள், உள்நாட்டின் யாப்பு என்பவை தமிழ் மக்களுக்கு நீதியை வழங்க முடியாதவை என்ற கருதுகோளின் அடிப்படையில்தான் நிலைமாறு கால நீதி என்பது 2015 ஆம் ஆண்டு பரிந்துரைக்கப்பட்டது. உள்நாட்டு நீதியானது போதுமானதாக இருந்தால் ஏன் நிலை மாறுகால நீதி என்ற ஐநா ஏற்பாட்டை குறித்து சிந்தித்திருக்க வேண்டும்? எனவே உள்நாட்டு நீதியின் போதாமை காரணமாகத்தான் ஐநாவின் 30/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அதன் அடுத்த கட்டமாக 46/1 தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால் எல்லாவற்றுக்குப் பிறகும் இலங்கை அரசாங்கம் இப்பொழுதும் உள்நாட்டுப் பொறிமுறை குறித்து கனவு காண்கிறது என்றால் அந்த கனவுக்கான துணிச்சல் எங்கிருந்து வருகிறது? ரணில் விக்கிரமசிங்கவை மேற்கு நாடுகள் கைவிடாது என்ற நம்பிக்கையின் அடிப்படையில்தானே? அந்த நம்பிக்கை காலப் பொருத்தமுடையது அல்ல என்பதனை மேற்கு நாடுகள் நிரூபித்தால்தான் தமிழ் மக்களின் நம்பிக்கையை வென்றெடுக்கலாம்.

சீனா கடந்த இரு ஆண்டுகளாக ஐநாவில் வெளிப்படையாக அரசாங்கத்தை ஆதரித்து வருகிறது. அண்மையில் சீனத் தூதுவர் ருவிற்றரில் இட்ட ஒரு பதிவு இம்முறையும் சீனா இலங்கை அரசாங்கத்தை கைவிடாது என்பதனை காட்டுகின்றது. ஏற்கனவே விசாரணைக் கட்டமைப்புக்குரிய நிதியை தந்திரமாக குறைத்தது சீனாதான் என்ற ஒரு குற்றச்சாட்டு உண்டு. இப்பொழுது சீனா வெளிப்படையாகவே இலங்கை அரசாங்கத்தின் பக்கம் நிற்கின்றது. இப்படிப்பட்ட ஒரு ஜெனிவாக் களத்தில் இந்தியா என்ன நிலைப்பாட்டை எடுக்கும்?

கடந்த ஆண்டு இந்தியா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை. ஒரு நாட்டுக்கு எதிராக தீர்மானம் வரும்பொழுது வாக்கெடுப்பைத் தவிர்ப்பது என்பது மறைமுகமாக அந்த நாட்டுக்கு எதிரானதுதான். ஆனால் தமிழ் மக்கள் அதைவிட வெளிப்படையாக இந்தியா தங்கள் பக்கம் நிற்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார்கள். கடந்த 9 மாதங்களாக இலங்கைக்கு அதிகம் உதவிய நாடு இந்தியா. அந்த உதவியை ரணில் விக்கிரமசிங்க உயிர் மூச்சு என்று வர்ணித்தார். சிங்கள பௌத்த அரசுக் கட்டமைப்புக்கு உயிர் மூச்சை வழங்கிய இந்தியா தமிழ் மக்களின் விடயத்தில் தெளிவான வெளிப்படையான நிலைப்பாட்டை எடுக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும். ஜெனிவாவில் இலங்கை பொறுத்து ஒருவித நிழல் போர் நிலைமையை சீனா தோற்றுவிக்கின்றது. இதில் மேற்கு நாடுகளும் இந்தியாவும் தமிழ்மக்களின் பக்கம் தெளிவான வெளிப்படையான நிலைப்பாட்டை எடுப்பார்களா?

## மகாகவி பாரதி நினைவு நூற்றாண்டில் முருகபூபதியின் பாரதி தரிசனம் நூல் வெளியீடு

இம்மாதம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மகாகவி பாரதியார் மறைந்து 101 வருடங்களாகின்றன. இந்நினைவு நூற்றாண்டில் எழுத்தாளரும், ஊடகவியலாளருமான லெ. முருகபூபதி எழுதியிருக்கும் பாரதி தரிசனம் என்ற புதிய படைப்பு மின்னூலாக வெளியாகின்றது.

கடந்த 2021 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 11 ஆம் திகதி மகாகவி பாரதியின் நினைவு நூற்றாண்டு ஆரம்பமானது. அதனை முன்னிட்டு முருகபூபதி எழுதிவந்த பாரதி தரிசனம் தொடர் தற்போது மின்னூலாக கிண்டிலில் வெளியாகின்றது.

பன்னிரண்டு அங்கங்கள் கொண்டிருக்கும் இந்நூல் இம்மாதம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை, மெய்நிகரில் வெளியிடப்படவிருக்கிறது.




எழுத்தாளரும், ஆஸ்திரேலிய தமிழ் இலக்கிய கலைச்சங்கத்தின் நடப்பாண்டு தலைவருமான திருமதி. சகுந்தலா கணநாதன் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கியுள்ளார்.

அகில இலங்கை கம்பன் கழகத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரும் இலக்கியவாதியும் சிட்னி தமிழ் பாடசாலைகளின் உயர்தர வகுப்பு ஆசிரியருமான திரு. திருநந்தகுமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்த அரங்கில், பாரதியாரின் உடன்பிறந்த தங்கையின் கொள்ளுப்பேத்தி கவிஞர் உமா பாரதி, கப்பலோட்டிய தமிழன் வ. உ. சியின் பேரன் திரு. கே. காளிராஜன், புதுவை பல்கலைக்கழகத்தின் வருகைதரு பேராசிரியர் முனைவர் அரிமளம். பத்மநாபன் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

நிகழ்ச்சியின் இறுதியில் நூலாசிரியர் முருகபூபதி ஏற்புரை வழங்குவார். கலை, இலக்கியவாதிகளையும் ஊடகவியலாளர்களையும் பாரதி இயல் ஆய்வாளர்களையும் இந்த மெய் நிகர் அரங்கில் இணைந்துகொள்ளுமாறு நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்கள் அன்புடன் அழைக்கின்றனர்.

**மெய்நிகர் இணைப்பு:**

Join Zoom Meeting:

https://us02web.zoom.us/j/82893424523?pwd=U3pzVnZybnhQWk9wYzVQZmNZeEt0dz09

Meeting ID: 828 9342 4523 Passcode: 109438



# நாட்டை சூறையாடும் "லைசன்" அல்ல "மக்கள் ஆணை"

- வி.தேவராஜ்
மூத்த ஊடகவியலாளர்

- அரசியல் வியாபாரிகளுக்கு மக்கள் திருப்பிக் கொடுப்பர்.

அரசியல்வாதிகள் அரசியலை முழுமையாக தமக்கான வர்த்தக மையமாக மாற்றியமைத்துக் கொண்டுள்ளனர். இந்த வர்த்தகத்தில் மக்களுக்கும் பங்கு உள்ளது. தமது வாக்குச் சீட்டைக் கைகளில் வைத்துக் கொண்டு தேர்தல் காலங்களில் சில்லறைகளுக்காகவும் தமது வாழ்வாதாரத்துக்கான எதிர்பாரப்புக்களுக்காகவும் விலை போய்விடுகின்றனர். இன்னும் பலர் ராமன் ஆண்டால் என்ன ராவணன் ஆண்டால் என்ன என்ற மனப்போக்கில் தேர்தல் காலங்களில் இருந்துவிடுகின்றனர். மொத்தத்தில் தேர்தல் காலங்களில் அரசியல்வாதிகள் எல்லாவற்றையும் தமக்கு சாதகமாக ஆக்கிக் கொள்கின்றனர்.

இந்த அரசியல் போக்குக்குள்ளும் மக்கள் அதிரடி மாற்றங்களையும் செய்துவிடுகின்றனர். மக்கள் எதைச் செய்து என்ன பயன் இறுதியில் அதிகாரம் சங்கீத நாற்காலிபோல் ஒரு பகுதியினரின் கைகளுக்குப் போய்ச் சேர்ந்துவிடுகின்றது. அதிகாரத்துக்காக பிரிந்து நின்று கயிறு இழுக்கும் அரசியல் சக்திகளில் ஒரு பகுதியினர் வெற்றி பெற்று ஆட்சிபீடம் ஏற மறு பகுதியினர் எதிர்க் கட்சி வரிசையில் அமர்கின்றனர்.

இதுதான் இலங்கை அரசியலின் போக்காக இருக்கின்றது.

மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்படும்வரை மக்கள் தொண்டனாக மக்கள் சேவகனாக காட்டிக் கொள்ளும் பிரதிநிதிகள் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டபின் கறுப்புக் கண்ணாடிகள் அவர்களது கண்களை மறைத்துவிடுகின்றன. கறுப்புக் கண்ணாடிகளுடனான கார்கள் ஆளையே மறைத்துவிடும்.

இதற்குப் பின் நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டவர்கள் எஜமான். வாக்களித்த மக்கள் சாதாரண சேவகர்கள். எஜமானை நோக்கி சாதாரண சேவகர்கள் கேள்வி எழுப்ப இயலாது என்பதே இன்றைய அரசியல்வாதிகள் வகுத்துள்ள எழுதப்படாத சட்டம்.

கடந்த ஒரிரு வருடங்களுக்கு முன் கர்தினால் ரஞ்சித் மல்கம் ஆண்டகை இன்றைய அரசியல்வாதிகள்பற்றிக் குறிப்பிட்ட கூற்று இது.

கர்தினால் ரஞ்சித் மல்கம் ஆண்டகையை சந்திக்க வந்த ஒரு அரசியல்வாதி நான் அரசியலுக்கு வந்து தேவைக்கு அதிகமாகவே உழைத்துவிட்டேன். இது போதும் இனி நான் அரசியலில் இருந்து ஓய்வு பெறப் போகின்றேன்" என்று கூறியதாகக் குறிப்பிட்டார்.

பெரும்பாலான அரசியல்வாதிகள் எவ்வாறு மக்களையும் நாட்டையும் உறுஞ்சிக் கொண்டிருக்கின்றனர் என்பதற்கு இது தக்க சான்று.

அரசியல் அதிகார மட்டத்தில் மேல் இருந்து கீழ் நோக்கி படிமுறையாக அமைந்துள்ள இந்த ஊழல் மோசடிகள் பொதுச் சொத்துக்களைக் கொள்ளையடித்தல் என்பன அளவில் வேறுபடுகின்றன. ஆனால் இந்த படிமுறைத் தட்டில் உள்ளவர்களது கொள்ளை ஊழல் மோசடிகள் மேல் இருந்து கீழ் நோக்கிய சங்கிலித் தொடராக இறுகப் பிணைக்கப்பட்டுள்ளன.

இந்த ஊழல் மோசடிக்குள் அரச அதிகாரிகளுக்குள்ளும் வியாபித்து அவர்களையும் உள்வாங்கியதாக உள்ளது.

மொத்தத்தில் அரசியல்வாதிகள் அரசியலையும் அரசியல் கட்டமைப்பையும் அரச இயந்திரத்தையும் தமது ஊழல் மோசடிகளுக்கேற்றவகையில் வடிவமைத்துக் கொண்டுள்ளனர்.

அண்மைக் காலமாக அமைச்சர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் "கோடிகளில்" புரண்டதை நாடே அறியும். அந்தளவுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் விலை போகின்றனர். குறிப்பாக தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் இதற்குச் சளைத்தவர்கள் அல்ல. அவர்கள் இதனை வழக்கமான அரசியல் நடைமுறையாக எந்தவித கூச்சமும் இன்றி பின்பற்றுகின்றனர். அவர்கள் சார்ந்த கட்சிகளும் கண்டும் காணாததுபோல் இருந்துவிடுகின்றன. அல்லது விசாரணை செய்கின்றோம் என அறிக்கைவிடுவதுடன் கிடப்பில் போட்டுவிடுகின்றனர்.

இதற்கெதிரான மக்கள் எழுச்சியே காலிமுகத்திடலில் நூறு நாட்களைக் கடந்து வெற்றியை நோக்கிப் பயணித்தது. இதற்கு ஆதரவாக சமாந்தரமாக தென்னிலங்கை முழுவதும் மக்கள் போராட்டமாக வியாபித்தது.

இந்த மக்கள் எழுச்சி என்பது இலங்கையின் அரசியல்வாதிகள் தமக்காக மக்களின் ஆணை மீது கட்டி எழுப்பிக் கொண்ட பிரகடனப்படுத்தப்படாத கட்டமைப்புக்கு எதிரானதாகும்.

இலங்கை அரசியலில் 74 வருடங்களாக அரசியல்வாதிகளினால் கட்டிக்காத்த எழுதப்படாத அரசியல் மரபுக்கு எதிராகவே சிங்கள இளைஞர்கள் ஆயுதமேந்திய கிளர்ச்சியில் ஈடுபட்டனர்.

இந்தக் கிளர்ச்சிகளை இலங்கையின் ஆளும் வர்க்கம் வெற்றிகரமாக முறியடித்து தமது இருப்பையும் அரசியல் நலன்களையும் தக்க வைத்துக் கொண்டன.

இதற்கும் அப்பால் காலத்துக்குக் காலம் தென்னிலங்கை மக்கள் தேர்தல் மூலம் முகங்களையும் நிறங்களையும் மாற்றி மாற்றி அமைத்துப் பார்த்தனர். அப்பொழுதும் அரசியல்வாதிகளே வென்றனர்.

அதாவது தென்னிலங்கை அரசியல் சக்திகள் பிரிந்து நின்று தேர்தல் மூலம் ஆட்சி அதிகாரத்திற்காகப் போராடி வென்றவர்கள் ஆட்சிபீடத்திலும் தோற்றவர்கள் எதிர்க் கட்சி வரிசையிலும் அமர்ந்தனர்.

மொத்தத்தில் கூறப்போனால் மக்களே ஊழல் பேர்வழிகள் மோசடிக்காரர்கள் கொள்ளையர்களை மாறி மாறி ஆட்சிபீடத்தில் அமர்த்தி தொடர் தோல்விகளைச் சந்தித்தனர். போதாக்குறைக்கு கடந்த இரண்டரை வருடங்களாக நாட்டின் கஜானாவே காலியாகும் நிலைக்குப் போய் நாடு வங்குரோத்து நிலைக்குள் தள்ளப்பட்டதுடன் நாட்டு மக்கள் உயிர்வாழ்வதே கேள்விக்குறியாகியது.

இந்த ஒரு நிலையில்தான் அரசியல் கட்டமைப்பில் மாற்றம் குறித்த சிந்தனை தென்னிலங்கை இளைஞர் யுவதிகளிடையேக் கருக் கொண்டது. இந்தச் சிந்தனைக் கரு தென்னிலங்கையின் பெரும்பாலான மக்களின் சிந்தனையிலும் ஆழப்பதியவே அது அகிம்சை வழிப் போராட்டமாக பீறிட்டுக் கிளம்பியது. நூறு நாட்களைக் கடந்த அந்தக் கரு குழந்தையாகப் பிரசவிப்பதற்கு முன்பே கரு கலைப்பு செய்யப்பட்டுவிட்டது.

இதுபற்றி நண்பர் ஒருவர் கூறுகையில் இது ஒரு முன்னுதாரணமாக இருந்துவிடக் கூடாது என்பதில் தென்னிலங்கை அரசியல் சக்திகள் மிகக் கவனமாக இருக்கின்றன என்று குறிப்பிட்டார்.

அதேவேளையில் தென்னிலங்கை இளைஞர் யுவதிகள் மற்றும் மக்கள் எதிர்பார்க்கும் System Change என்பது ஒட்டு மொத்த அரசியல்வாதிகளின் இருப்புக்கு ஆபத்தாக முடியும் என தென்னிலங்கை அரசியல் சக்திகள் கணக்கிட்டுள்ளன என்பதே உண்மையாகும்.

எனவேதான் தென்னிலங்கை எதிர்பார்த்து நின்ற System Change க்கு பயங்கரவாதம் என்றும் ஜனநாயகத்தை சீர்குலைக்க மேற் கொள்ளப்படும் சதித் திடடம் என்றும் தேசத்துரோகச் செயல் என்றும் ஆட்சியாளர்கள் முத்திரைகுத்தி பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் வேட்டையாடுகின்றனர்.

ஆனால் தென்னிலங்கை மக்கள் எதிர்பார்த்த அரசியல் முறையில் மாற்றம் கொண்டுவருவதுபற்றி பேசவில்லை.

ஊழல் அற்ற அரசியல் குறித்து பேசப்படவில்லை.

கொள்ளையடித்த பணத்தை நாட்டுக்குக் கொண்டு வருவதுபற்றி பேசப்படவில்லை.

ஊழல்வாதிகளையும் கொள்ளையர்களையும் சட்டத்தின் முன் நிறுத்துவதுபற்றி பேசவில்லை.

ஆனால் ஜனாதிபதியின் வீட்டில் மதுப் போத்தலை தீருடியவர் என்று கூறப்படும் நபர்களில் இருந்து பலர் தொடராக சந்தேகத்தின்பேரில் கைது செய்யப்படுகின்றனர்.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளிடம் மக்கள் ஆணைபெற்றவர்களிடம் வாக்களித்த மக்களாக இருந்தாலும் கேள்வி கேட்க இயலாது என்பதுதான் ஆட்சியாளர்களின் வாதமாக சித்தாந்தமாக உள்ளது. அதனை மீறி கேள்வி கேட்பின் அது பயங்கரவாதமாகும் தேசத் துரோக குற்றச்சாட்டுக்கு ஒப்பானதாகும். ஆட்சியைக் கவிழ்க்கும் சதிக்கு ஒப்பானதாகும்.

மக்கள் ஆணை பெற்றவர்களிடம் "மாற்றத்தை" மக்கள் எதிர் பார்க்க முடியாது எனில் நாட்டில் நடைபெறுவது எந்த ஆட்சி?

மக்கள் ஆணை வழங்கியது நாட்டைக் கொள்ளையடிப்பதற்கோ அல்லது நாட்டை சூறையாடுவதற்கோ வழங்கப்பட்ட "லைசன்" அல்ல என்பதை மக்கள் நிரூபிப்பர்.

Email : vathevaraj@gmail.com

TRADITIONAL CHINESE
ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Achos, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine
Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9



உதயனின் பிரத்தியேகச் செய்தி

# இலங்கை நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் சிறார்கள்– இரண்டாம் பகுதி

**சிவா பரமேஸ்வரன் மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்**



*எச்சரிக்கை:*
*1. பலவீனமானவர்கள் வாசிப்பதைத் தவிர்க்கவும்.*
*2. பெயர்கள் மற்றும் வாழ்விடங்கள் அவர்களின் பாதுகாப்பு கருதி மாற்றப்பட்டுள்ளன.*

"இலங்கையில் ஏழ்மையில் உழலும் இலட்சக்கணக்கானவர்களால் இனியும் போதிய உணவைப் பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளனர், மேலும் இனி வரும் வாரங்களில் மேலும் மோசமடையலாம்" உலக உணவுத் திட்டத்தின் ஆசிய பசிபிக் பிராந்தியத்தின் பணிப்பாளர் இந்த வாரம் கொழும்பில் தெரிவித்த கருத்து இது.

அதுமட்டுமல்ல, உணவுப் பொருட்களின் கடுமையான விலை உயர்வு காரணமாக, இலங்கையில் ஐந்தில் நான்கு வீடுகள் தமது உணவைக் குறைத்துக்கொண்டுள்ளன மேலும் பொருளாதார நெருக்கடி காரணமாக உணவைத் தவிர்க்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்று அவர் கூறியுள்ளார். நீண்டகால அடிப்படையில் அதன் தாக்கம் மோசமாக இருக்கக் கூடும். அதிலும் மிகவும் வறிய நிலையிலுள்ளவர்கள் அண்மைய பொருளாதார நெருக்கடி காரணமாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். சொல்லொணா துன்பங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இளவயதில் உணவில்லாமல் இருப்பது, உடல் மற்றும் மனரீதியாக மிகவும் கடுமையான விளைவுகளை ஏற்படுத்தும் என்பது உலகின் பல பல்கலைக்கழக ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. குறிப்பாக குழந்தைகளுக்கு இளவயதில் ஏற்படும் ஊட்டச்சத்துக் குறைபாடு மூளை வளர்ச்சியை பாதிக்கக்கூடும், உடலுறுப்புகளின் வளர்ச்சியை பாதித்து உடலின் இயக்கத்தில் தடைகளை ஏற்படுத்தும். பன்னாட்டு ஆய்வு முடிவுகளின்படி பெண்களிடையே ஊட்டச்சத்துக் குறைபாடு பூப்படையும் வயதில் மாற்றத்தை ஏற்படுத்தி, கருவுறுதலில் சிக்கல்களை ஏற்படுத்தி பேறுகாலத்தில் தாய் மற்றும் சேயின் உயிருக்கு ஆபத்துக்களை ஏற்படுத்தலாம் என்கிற கவலைகள் உலகெங்கும் உள்ளன.

இதற்கு மிகச்சிறந்த உதாரணமாக உள்நாட்டுப் போர் மற்றும் அதன் தாக்கமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிகளினால் மிகவும் பாதிக்கப்பட்ட சோமாலியாவையும், தெற்கு சூடானையும் உதாரணமாகக் கூற முடியும்.

ஆனால் இலங்கை அமைச்சர்களும் அதிகாரிகளும் பொய் சொல்வது மற்றும் தரவுகளை திரிபு படுத்தி மாயத்தோற்றத்தை ஏற்படுத்துவதில் கலாநிதிப் பட்டத்தைப் பெற்றவர்கள் என்கிற விமர்சனம் உள்ளது. ஐ நாவின் உலக உணவுத் திட்டத்தின் பிராந்தியப் பணிப்பாளர் கூறியதையும், கடந்த வாரம் யுனிசெ.்.ப் அமைப்பின் பிராந்திய பொறுப்பாளர் கூறியதையும் அமைச்சர்கள் ரமேஷ் பதிரண மற்றும் சுசில் பிரேமஜெயந்த மறுத்துள்ளனர். அவர்கள் கூறியுள்ள கருத்துக்கள் வாதத்திற்குக் கூட ஏற்க இயலாத ஒன்று.

உலகளவில் ஊட்டச்சத்துக் குறைபாடுள்ள நாடுகள் பட்டியலில் இலங்கை ஆறாவது இடத்திலுள்ளது என்று தரவுகள் மற்றும் ஆதாரத்துடன் கூறும் யுனிசெ.்.ப் நிறுவனத்தின் அறிக்கையை நிராகரிக்கும் அதேவேளை, அமைச்சர் சுசில் பிரேமஜெயந்த, "நாடு இருந்த நிலையில் 2021 ஆம் ஆண்டு சிறார்களிடையே போஷாக்கின்மை மற்றும் ஊட்டச்சத்துக் குறைபாடு இருக்கலாம்" என்கிறார். இதையேதான் ஐ நா அறிக்கையும் கூறுகிறது என்பதை அவர் சிந்திக்கவில்லை என்றே தெரிகிறது.

அதுமட்டுமின்றி, "சுகாதார அமைச்சின் குடும்பநல திணைக்களங்கள் பாடசாலை சிறார்களிடையே 2016 ஆம் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்பை ஒப்பிடும் போது, 2020 ஆம் ஆண்டு அந்த சிறார்களிடையே மோசமான போஷாக்கின்மை அதிகரித்துள்ளது என்று தெரியவந்துள்ளது" என்றும் அவர் கூறுகிறார். நாட்டிலுள்ள சுமார் 1.8 மில்லியன் பாடசாலை மாணவர்களில், 25 வீதம் மாணவர்களுக்கு பாடசாலைகளில் வழங்கப்படும் மதிய உணவுத் திட்டத்தின் மூலம் உணவளிக்கப்படுகிறது என்கிறார் அமைச்சர். அப்போது இயற்கையாக எழும் அடுத்த கேள்வி என்பது எஞ்சியுள்ள 75% அதாவது 1.35 மில்லியன் குழந்தைகளின் நிலை என்ன என்கிற கேள்வி நாட்டில் எழுப்பப்படவும் இல்லை, எழுப்பினாலும் பதில் கிடைக்கப்போவதில்லை.



ஆக மொத்தம், இன்று சிறார்களிடையே கடுமையான ஊட்டச்சத்துக் குறைபாடு, அதிலும் குறிப்பாக வடக்கு-கிழக்குப் பகுதியிலும், மலையகத்திலும் இது மிகவும் மோசமாக உள்ளது என்பது மறுக்க முடியாத உண்மை.

அமைச்சர் கலாநிதி ரமேஷ் பதிரண இன்னும் ஒருபடி மேலே சென்றுள்ள தலை சுற்றவைக்கும் ஒரு கருத்தைத் தெரிவித்துள்ளார். ஐ நா, உலக உணவுத் திட்டம், உலக வங்கி, சொந்த நாட்டின் சுகாதார அமைச்சு, சிறப்பு வாய்ந்த வல்லுநர்கள் ஆகியோரின் கருத்துக்களை பொய்யாக்கும் வகையில் அமைச்சர் கூறிய கருத்து உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் எப்படி பார்க்கப்படும் என்பதை அவர் உணர்ந்தாரா என்பதை காட்டுவதாக இருக்கிறது.

இலங்கையில் நிலவும் நெருக்கடி குறித்து சோமாலியா போன்று ஆகிறதா இலங்கை? கடந்த ஜீன் மாதமே உதயனில் கட்டுரை வெளியானது.

ஊட்டச்சத்துக் குறைபாடு தொடர்பில் யுனிசெ.்.ப் அறிக்கை மறுதலிக்கும் அமைச்சர், அண்மைய தரவுகளின் அடிப்படையில், கடந்த இருபது ஆண்டுகளில் இலங்கையில் சிறாரின் ஊட்டசத்து அளவு அதிகரித்து வருகிறது என்று கூறுகிறார். கடந்த 2009 ஆண்டில் சிறார்களிடையேயான 27.4 வீதமாக இருந்த ஊட்டச்சத்துக் குறைபாடு, 2021 ஆம் ஆண்டில் 12.2 வீதமாகக் குறைந்துள்ளது என்று நாடாளுமன்றத்தில் கூறுகிறார். இது அவரது சக அமைச்சர் சுசில் பிரேமஜெய்ந்த கூறியதிலிருந்து முற்றிலும் மாறுபடுகிறது.

ஆனால், உண்மையில் களநிலைமை என்ன என்பதை ஆராய கனடா உதயன் நாட்டின் வடக்கு கிழக்கு மற்றும் கொழும்பிலுள்ள நான்கு பெண் தலைமைத்துவ குடும்பங்களை தொடர்புகொண்டு நாட்டின் பொருளாதார நிலை, குடும்பத்தை நடத்திச் செல்வதிலுள்ள சிக்கல், பிள்ளைகளிடையே போஷாக்கின்மை, பொலிஸ் மற்றும் இராணுவத்திடமிருந்து அவர்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகள் ஆகியவை குறித்துப் பேசியது.



சரோஜினி, சல்மா, சகாயமேரி, சலோ-மி ஆகியோருக்கு இடையே ஒற்றுமை ஒன்று உள்ளது. இவர்கள் அனைவருமே போரினால் பாதிக்கப்பட்டவர்கள். உழைத்து தமது பிள்ளைகளை காப்பாற்ற வேண்டிய கடமையுடையவர்கள். இதில் சரோஜினி நாட்டின் வடக்கு மாகாணத்திலும், சலோமி நீர்கொழும்பிற்கு அருகிலும் வாழ்பவர்கள். சகாயமேரி புத்தளத்திலும், சல்மா அம்பாறையிலும் வாழ்பவர்கள்.

சரோஜினி மற்றும் சலோமியின் குடும்பம் பாரம்பரியமாக மீன்பிடியில் ஈடுபடுபவர்கள். இருவரது கணவரும் போர்க்காலத்தில் இடம்பெற்ற இரு தாக்குதல் சம்பவங்களில் உயிரிழந்தவர்கள். ஆனால் சலோமிக்கு அரசு மற்றும் சமூகத்திடமிருந்து கிடைத்த ஆதரவு சரோஜினிக்கு கிடைக்கவில்லை. எனினும் கடந்த சில ஆண்டுகளாக அவர்களின் குடும்பச் சூழலில் உங்கள் குழந்தைகளுக்கு அவர்களால் போதியளவில் உணவை அளிக்க முடியவில்லை என்றனர். அவர்கள் இருவரும் கூறியதன் அடிப்படையில் இருந்த ஒரு விஷயம் "எரிபொருள் இல்லை அதனால் எமக்கு எதிர்காலம் இல்லை".

"கடந்த சுமார் ஓராண்டாகவே மீன்பிடி தொழிலுக்கு மிகவும் அவசியமான மண்ணெண்ணெய் கிடைப்பத்தில் கடும் தட்டுப்பாடு நிலவியது. மேலும் எங்களுக்கு தொழிலுக்காக உள்ளூரில் கடன் கொடுத்தவர்கள், உடனடியாகப் பணத்தை திருப்பித்தர அழுத்தமும் அச்சுறுத்தலும் விடுத்தனர். இதனால் சந்தையில் என்னால் மீன் விற்பனையைச் செய்ய முடியவில்லை. எங்கள் கடன் காரணமாக எமது குடும்பத்திலிருந்த படகை கடன் கொடுத்தவர்கள் எடுத்துச் சென்றுவிட்டனர். வருமானம் இல்லாததால் எனது பிள்ளைகளுக்குத் தேவையான உணவு மற்றும் பால் மாவை பெற்றுக்கொள்ள முடியவில்லை. இதனால் அவர்கள் அடிக்கடி சுகயீனை அடைகின்றனர், மருத்துவச் செலவிற்கும் பணமில்லை" என்று கூறினார் சலோமி. தமது குடும்பத்தாரால் இப்போது ஒருவேளை உணவு மட்டுமே சாப்பிட முடிகிறது, இருவேளை உணவு என்பதை எண்ணிப்பார்க்க முடியாது என்று சலோமி கூறியபோது அவரால் தனது அழுகையை அடக்க முடியவில்லை.

சரோஜினியின் குடும்பத்தில் அவரது கணவர் உட்பட இருவர் மாவீரர்கள். போரின் காரணமாக இவர் சிறிது அங்கவீனம் அடைந்துள்ளார். சலோமிக்கும் இவருக்கும் பிரச்சனைகள் ஒரே மாதிரியிருந்தாலும், இவரது குடும்பத்திற்குச் சொந்தமான காணிகள் இன்னும் விடுவிக்கப்படவில்லை. அவரது இரண்டு பிள்ளைகளின் கற்றல் செயல்பாடுகள் கடந்த இரண்டு ஆண்டுகளிற்கும் மேலாகப் பாதிக்கப்பட்டுள்ளன. அதிலும் போதிய உணவின்றி இரு பிள்ளைகளும் அடிக்கடி சுகயீனம் அடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெறவேண்டியதாயிற்று. அதிலும் பெண்பிள்ளை போதிய உணவின்றி ஊட்டச்சத்து இல்லாமல் இருப்பது தனக்கு மிகுந்த கவலையளிக்கிறது என்று அவர் வருந்தினார்.

"இந்த பெண் பிள்ளைக்கு என்னால் போதிய உணவை அளிக்க முடியவில்லை. தொடர்ச்சியாக போதிய உணவும் ஊட்டச்சத்தும் இல்லாமல் இருந்தால், அவள் பருவ வயதை அடையும் போது சில சிக்கல்கள் எழக்கூடும் என்று மருத்துவர் கூறுகிறார். இது எனக்கு மிகவும் கவலையை ஏற்படுத்தியுள்ளது".



கடந்த பல ஆண்டுகளாகவே இந்திய மீனவர்களின் வருகை, அரசின் தவறான கொள்கைகள் காரணமாகத் தொடர்ச்சியாக தங்களால் மீன்பிடிக்கச் செல்ல முடியவில்லை என்றும், அப்படியேச் சென்றாலும் முதலீட்டிற்கு ஏற்ற வருமானம் இல்லை என்பதால், கடந்த பல ஆண்டுகளாகவே "ஒருவேளை உணவு" என்பதே வழக்கமாகிவிட்டது என்றார்.

இந்த இரு குடும்பத்தைப் போன்று இலங்கையில் லட்சக்கணக்கான குடும்பங்களின் அன்றாட வாழ்விற்கு மண்ணெண்ணெய் என்பது அத்தியாவசியமானது. ஆனால் அதைச் சீராக அரசால் விநியோகிக்க முடியவில்லை. நாட்டின் நிலவும் உணவு நெருக்கடி மற்றும் ஊட்டச்சத்து குறைபாட்டால் மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதை அரசு ஏற்க மறுக்கிறது அல்லது மறைக்கிறது என்பதில் மாற்றுக்கருத்து இருக்க முடியாது.

சகாயமேரியின் குடும்பமும் போரினால் பாதிக்கப்பட்டு உடைமைகளை இழந்த நிலையில் இடம்பெற வேண்டியதாயிற்று. அவரது கணவர் முச்சகர வாகனம் ஒன்றின் சாரதியாக இருந்தவர். மன்னார் பகுதியில் தொழில் செய்வதிலிருந்த சிக்கல்கள் காரணமாக புத்தளம் மாவட்டத்திற்கு இடம்பெயர்ந்தனர். எனினும் இரு மாவட்டங்களுக்கு இடையே வாகனம் ஓட்டிக்கொண்டிருந்தார். ஆனால் கடந்த பல ஆண்டுகளாக தொடர்ச்சியாகப் பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்ட நிலையில், கடுமையான மன உளைச்சலுக்கு ஆளாகி சில ஆண்டுகளுக்கு முன் காலமானார். கணவரின் உயிரிழப்பால் குடும்பத்தை முன்னெடுக்க முடியாமல் திணறிகொண்டிருந்தச் சூழலில், கொரோனா பெருந்தொற்றும் பொருளாதார நெருக்கடியும் சேர்ந்து தற்கொலை செய்துகொள்ளும் மனநிலைக்குத் தள்ளியது என்றும், பிள்ளைகளின் நலன் கருதி அதைக் கைவிட்டதாகவும் கூறுகிறார்.

"எந்த பிள்ளைகளின் நலனிற்காக வாழ நினைத்தேனோ, அவர்களுக்கு போதிய உணவை அளிக்க முடியவில்லை, ஒரு தாய் என்ற வகையில் மிகவும் துன்பமடைகிறேன். அவர்களின் எதிர்காலம் குறித்து மிகவும் கவலையாக இருக்கிறேன்".

அம்பாறை மாவட்டத்தில் சிறிய தள்ளுவண்டியில் வியாபாரம் செய்து வந்தவர் சல்மாவின் கணவர். பொருளாதார நெருக்கடியால் வியாபாரம் படுத்துவிட்டது. உடல்நல பாதிப்பால் அண்மையில் மரணமடைந்தார். வீட்டையும் கவனித்துக் கொண்டு வெளியே வியாபாரத்தையும் சல்மாவால் கவனிக்க முடியவில்லை. அரச உதவிகளும் போதியளவில் கிடைக்காத நிலையில், தனது பிள்ளைகளுக்கு உணவளிக்க குடும்பத்தாரைச் சார்ந்திருக்க வேண்டிய நிலையில், வெளியில் சொல்ல முடியாத தர்ம சங்கடங்களை தான் எதிர்கொள்வதாகக் கூறினார்.

"தன்னார்வ அமைப்புகள் அளிக்கும் உணவு மற்றும் உதவிகள் மூலமே வாழ்ந்து வருகிறோம். இன்னும் எவ்வளவு காலம் இது செல்லும் என்று தெரியவில்லை. போதிய உணவின்றி பிள்ளைகள் அடிக்கடி சுகயீனம் அடைகிறார்கள். தொடர்ச்சியாக அவர்கள் சுகயீனம் அடைவதால் எனது உடல்நிலையும் பாதிக்கப்பட்டுள்ளது. நான் மரணமடைந்தால் எனது பிள்ளைகள் நிலை என்னவாகும்?".

ஆரோக்கியமில்லாத ஒரு நாடு அழிவை நோக்கிப் பயணிக்கிறது என்பது முதுமக்கள் சொல்லாகும்.

# அருள்மிகு கனடா ஸ்ரீ சண்முகநாத சுவாமி கோவில்

புனராவர்த்தன நிரந்தர ஆலய பஞ்சகுண்ட பக்ஷ

## பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம்

[illegible]



**11.09.2022 ஞாயிற்றுக்கிழமை**

காலை : 07 மணி 30 நிமிடம் முதல் 9.00 மணி வரை

Location :
2761 Markham Rd Unit 30, Scarborough, ON M1X 0A4
**Suncity Plaza : 416.613.1883**

கும்பாபிஷேக பிரதிஷ்டா சிவாச்சார்யர்
சிவாச்சார்ய மணி
**சிவஸ்ரீ. ரகுநாத கமலநாதக் குருக்கள்**

சர்வ போதகர் : [illegible]
[illegible]
**சிவஸ்ரீ. விஸ்வநாத ரெங்கநாத குருக்கள்**

சர்வ சாதகம்
யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர்
[illegible]
**பிரம்மஸ்ரீ. சிவானந்தசர்மா B.A.(HONS)**

ஆலய நிர்மாணம்
[illegible]
**விஸ்வப்பிரம்மஸ்ரீ. சரவணமுத்து ஜெயராஜா**
[illegible]

மங்கள இசை :
**திரு. பி. சண்முகசுந்தரம் குழுவினர்**
[illegible]

| | |
|---|---|
| 09.09.2022 வெள்ளிக்கிழமை | திருவிளக்குப் பூஜை 11.00 AM |
| 10.09.2022 சனிக்கிழமை | எண்ணெய்க் காப்பு 7.00AM - 5.00PM |
| 11.09.2022 ஞாயிற்றுக்கிழமை | கும்பாபிஷேகம் 7.30 AM - 9.00 PM |

அனைவரும் வருக ! ஆறுமுகன் அருள் பெறுக !!
சரணம் சரணம் சண்முகா சரணம்!

[illegible]

தொடர்புகளுக்கு : சண்முகப் பித்தன், திரு. பொன். மதியழகன்
[illegible] 647.762.5804

புனராவர்த்தன நிரந்தர ஆலய பஞ்சகுண்ட பக்ஷ

## மகா கும்பாபிஷேகம்



குவலயேசச் செல்வர்களே !

அனைத்து வளங்களும் நிறைந்து கல்வி, செல்வம், பக்தி போன்றவை பூரணமாக விளங்கும் கனடா தேசத்தில், ஒன்ராறியோ, ஸ்காபரோவில் புனராவர்த்தனம் செய்யப்பட்டு அழகு மிகுந்த ஆலயமாக விளங்குகின்ற ஆலயத்திலே,

நிகழும் மங்களகரமான சுபகிருது வருடம் ஆவணி மாதம் 26ம் நாள் (11.09.2022) ஞாயிற்றுக்கிழமை துவிதியை திதியும், உத்திரட்டாதி நட்சத்திரமும், அமிர்தயோகமும் கூடிய காலை 07 மணி 30 நிமிடம் முதல் காலை 09.00 மணி வரையுள்ள கன்னி லக்ன சுபமுகூர்த்த வேளையில், சித்திமகாகணபதிக்கும், மூலமூர்த்தியாகிய வள்ளிதேவசேனா, சமேத ஸ்ரீ சண்முகநாதசுவாமிக்கும் மற்றும் ஏனைய பரிவார மூர்த்திகளுக்கும், உற்சவ மூர்த்திகளுக்கும் மஹா கும்பாபிஷேகம் செய்ய ஸ்ரீ சண்முக பெருமான் அருள்பாலித்துள்ளார். அத்தருணம் அடியார்கள் அனைவரும் குடும்ப சமேதராக ஆலயம் வந்து வணங்கி ஆனந்த பெருவாழ்வு வாழ அன்புடன் அழைக்கின்றோம்.

## கிரியா கால விபரம்

| | |
|---|---|
| 09.09.2022 வெள்ளிக்கிழமை | [illegible] |
| திரு விளக்குப் பூஜை 11.00 AM | பகல் 11 மணி [illegible] |
| | பகல் 11 மணி 15 நிமிடத்தில் [illegible] |
| | பகல் 01 மணி 30 நிமிடத்தில் [illegible] |
| | மாலை 4.00 மணிமுதல் [illegible] – யாகபூஜை காலம் 01 |
| 10.09.2022 சனிக்கிழமை | காலை 07 மணிமுதல் மாலை 05 மணிவரை – பக்தர்கள் எண்ணெய் காப்பு |
| பக்தர்கள் எண்ணெய் காப்பு 7.00 AM - 5.00PM | காலை 9.00 மணிமுதல் [illegible] – யாகபூஜை காலம் 02 |
| | மாலை 5 மணிமுதல் [illegible] – யாகபூஜை காலம் 03 |
| 11.09.2022 ஞாயிற்றுக்கிழமை | காலை 5 மணிமுதல் [illegible] |
| மஹா கும்பாபிஷேகம் 7.30 AM - 9.00AM | காலை 7 மணி 30 நிமிடத்தில் [illegible] |
| | காலை 8 மணி 15 நிமிடத்தில் [illegible] |
| | மாலை 6.00 மணி [illegible] |
| | மாலை 7.00 மணி [illegible] |

[illegible]

# UTHAYAN INTERNATIONAL AWARDS FESTIVAL-2022

**Powered by**

MAHAANS
5635 Finch Ave E
Unit# 5, Toronto, ON
M1B 5K9, Canada
+1 (647) 704-4597
பாரம்பரிய முறைப்படி மரசெக்கில்
தயாரிக்கப்பட்ட நல்லெண்ணை, தேங்காய்
எண்ணை, கடலை எண்ணை இங்கு கிடைக்கும்.

**16 வது ஆண்டில்**

உதயன் விருது UTHAYAN AWARD Uthayan International Awards 2022

# கனடா உதயன் சர்வதேச விருது விழா

**Presented by**

VIBRANT HOSPITALITY GROUP
விழா சிறப்புற நடைபெற
எமது நல்வாழ்த்துக்கள்
Managing and Developing Hospitality
Sector for More than 25 Years
Shankar Nallathamby, CHA (Director)
416 270 4343 - shankar@vhgcanada.com

உலகெங்கும் பேசப்படும் இவ்வருட விழாவில் வழங்கப் பெறவுள்ள

## உதயன் விருதுகளின் பட்டியல்

- UTHAYAN LITERARY AND ARTISTIC EXUBERANCE AWARD
- UTHAYAN INTER-COMMUNAL RELATIONSHIP AWARD
- UTHAYAN BUSINESS ENTREPRENEUR AWARD - ONTARIO
- UTHAYAN BUSINESS ENTREPRENEUR AWARD - QUEBEC
- UTHAYAN LEADERSHIP AWARD
- UTHAYAN YOUTH ICON AWARD
- UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD - SRI LANKA
- UTHAYAN LIFETIME ACHIEVEMENT AWARD - TAMIL NADU


**Saturday October 15th, 2022 at 6.00 pm**

விருது வழங்கலும் இராசப்போசன
விருந்தும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்
இவ்விழா நடைபெறும் மண்டபம்

**Kennedy Convention Centre**

1199 Kennedy Rd, Scarborough, ON M1P 2L2
(Kennedy & Lawrence Inter-section)

**For More Information,**
**call 416 732 1608 or 647 762 9512**


தாளம்
FM 88.9 HD3
உங்கள் வாகனங்களில் கேளுங்கள் தாளம், குதூகலம் ஏராளம்
GTA
தாண்டியும்
துல்லியமாக
ஒலிக்கும்
24 மணி நேர
தமிழ் வானொலி
88.9 HD3
thaalamfmhd
416-441-4100
Thaalam FM
www.thaalam.fm


LOOKING FOR YOUR
Dream House?
Call SEYON CHANDRAKUMAR
647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
RE/MAX
ROYAL PROPERTIES
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
BUYING | SELLING | INVESTING


Carefirst Family Health Team
புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்
தமிழ் பேசும் வைத்தியர்கள்
ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
நீரிழிவு கல்வி திட்டம்
Ontario
ACCREDITED WITH COMMENDATION
ACCREDITATION AGRÉMENT CANADA
Clinic Location:
Carefirst One-Stop Multi Services Centre
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com
Steeles
McNicoll
Silver Star
Kennedy
Midland
Finch
N

ஓம் சக்தி

# மேல்மருவத்தூர் ஆதிபராசக்தி குருமன்றம்

கனடாவின் தாய் மன்றம் - வழிபாட்டு மன்றம் (எண் 3181)

80(E), Nashdene Road, Unit #99, Scarborough. Tel : 647-436-9647

## நவராத்திரி பூசை





25-09-2022 ஞாயிற்றுக்கிழமை அமாவாசை பூசை காலையில் நடைபெறும்.

26-09-2022 திங்கட்கிழமை தொடக்கம் 04-10-2022 செவ்வாய்கிழமை வரை நவராத்திரி பூசையும், நடன மற்றும் சொற்பொழிவுகளும், சிறப்பு நிகழ்ச்சிகளும் நடைபெறும்.

நவராத்திரி விழா என்பது....

சக்தி வழிபாடு எல்லா மதங்களில் ஒன்றே
ஆதிபாசக்தியே! மலைமகளாம் பார்வதி தேவியாகவும், அலைமகள்! லஷ்மி தேவியாகவும், கலைமகள்! சரஸ்வதிதேவியாகவும் அவதாரம் எடுத்தார்கள். சக்திகள் மூன்று அவை இச்சாசக்தி, கிரியாசக்தி. ஞானாசக்தி ஆகியவை. இச்சாசக்தியாகிய பார்வதிதேவிக்குரிய துர்க்கையின் மூன்ற நாட்கள், கிரியா சக்திக்குரிய லக்சுமிக்கு மூன்று நாட்கள். ஞானாசக்தியாகிய சரஸ்வதிக்கு மூன்று நாட்கள் என ஒன்பது நாட்கள் கொண்டாடப்பட்டு 10ம் நாள் விஜயதசமி என்று சொல்லப்பட்டு கொண்டாடப்படுகின்றது.
பெண்களால் பெண்கள் நலத்திற்காகவும், பெண் தெய்வங்களாகிய துர்க்கா, மகாலஷ்மி. சரஸ்வதி அகிய முப்பெரும் தேவியரை வழிபாடு செய்யும் விழாவே நவராத்திரி விழாவாக கொண்டாடப்படுகிறது.
திருமணமாகாத பெண்கள், மழலைச்செல்வம் இல்லாத பெண்கள் இந்த ஒன்பது நாளும் நம்பிக்கையோடும், நல்ல சிந்தனையோடும் இருந்து வழிபட்டால் நினைத்ததைப் பெறலாம். நவராத்திரி பூசையில் அதிபராசக்தி! மகேஸ்வரி, கௌமாரி, வராகி, லக்சமி. வைணவி, இந்திராணி, சரஸ்வதி, நரசுமி, சாமுண்டி என ஒன்பது வடிவத்தில் காட்சி தருகிறார்கள். நவராத்திரி தினத்தில் அன்னை அதிபராசக்தியை வழிபட்டால் அனைத்து நன்மைகளையும் பெறலாம்.

அனைத்து சக்திகளும் வந்து அன்னையின் தொண்டுகளில் பங்கு பற்றி அன்னையில் அருளைப்பெற்றுய்யுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

- மன்றத்து சக்திகள் -



Tasty தமிழா ™

# தமிழ் மண்ணிலிருந்து நேரடியாக உலகெங்கும்...


பனை வெல்லம்



தேன் நெல்லி
மரச்செக்கு எண்ணெய்கள்


சுக்கு மல்லி காபி தூள்
யாழ். கறித்தூள்

இலங்கை மற்றும் தென்னிந்திய மசாலா பொருட்கள் பாரம்பரிய உணவு வகைகள்..

கனடாவில்

Tasty தமிழா தயாரிப்புகள் இங்கு கிடைக்கும்..

MAHAANS PICK & PRESS OIL MILL INC
Organic Bulk Store & Water Filling Station
5635 Finch Ave East,
Unit 5, Scarborough M1B 5K9.

Call: 416 293 4010

MAHAANS
PICK & PRESS OIL MILL INC

# யாழ் – திருநெல்வேலியில் இடம்பெற்ற கனடா உதயன் இலங்கைச் சிறப்பிதழ் அறிமுக நிகழ்வு




## "கனடா உதயனின் கதிரொளி தாயகத்தின் மீது வெளிச்சம் பாய்ச்சுகிறது" பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தெரிவிப்பு

## காலத்தின் கட்டளையாக கனடா உதயன் பத்திரிகை உதயமானது சிரேஷ்ட ஊடகவியலாளர் இ. பாரதி தெரிவிப்பு

அண்மையில் கனடா உதயன் பத்திரிகை வெளியிட்டுள்ள இலங்கைச் சிறப்பிதழ் யாழ்ப்பாணத்தில் அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிமுக நிகழ்வு திருநெல்வேலி காளிகோவிலடி சனசமூக நிலையத்தின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை (05.09.2022) நடைபெற்றுள்ளது. தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் கலாநிதி நா. சண்முகலிங்கன், சிரேஸ்ட ஊடகவியலாளர் இ. பாரதி, ஓய்வுநிலை உதவிக்கல்விப் பணிப்பாளர் கௌரி முகுந்தன், வலிகிழக்கு பிரதேசசபைத் தலைவர் தி. நிரோஸ் ஆகியோர் கலந்துகொண்டு இலங்கைச் சிறப்பிதழ் பற்றியும் உதயன் ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களின் சமூக, இலக்கிய, ஊடகப் பணிகள் குறித்தும் உரையாற்றியிருந்தார்கள்.

வெளிநாடு ஒன்றிலிருந்து தாய் நாட்டை மறவாமல் இலங்கைச் சிறப்பிதழை வெளியிட்ட பத்திரிகையின் ஆசிரியருக்கும் அவரது குழுவினருக்கும் அங்கு உரையாற்றிய அனைத்து பேச்சாளர்களாலும் பாராட்டுக்கள் தெரிவிக்கப்பெற்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்ச்சியில் கனடாவில் இருந்து சென்றிருந்த வீணை மைந்தன் கே.ரி. சண்முகராஜா உதயன் பத்திரிகையின் பிரதிநிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றியிருந்தார். நிகழ்ச்சியின் இறுதியில் திருநெல்வேலி மற்றும் அதன் அயற் கிராமங்களில் உள்ள சனசமூக நிலையங்களுக்கு இலங்கைச் சிறப்பிதழின் பிரதிகள் வழங்கப்பட்டன. இலங்கைச் சிறப்பிதழ் அறிமுக நிகழ்ச்சியில் ஆர்வத்தோடு ஏராளமானவர்கள் கலந்துகொண்டிருந்தார்கள்.

ஒரு பத்திரிகையின் கொள்கைப் பிரகடனமாக அதன் ஆசிரியத் தலையங்கமே அமைகிறது. ஒரு பத்திரிகை பல்வேறு தரப்பட்ட செய்திகளைப் பிரசுரித்தாலும், பல்வேறு தரப்பினரின் ஆக்கங்களைத் தாங்கி வந்தாலும் ஊடக நிறுவனத்தின் அல்லது ஆசிரிய பீடத்தின் கருத்து நிலையைப் பறைசாற்றுவதாக எப்போதுமே ஆசிரியத் தலையங்கமே விளங்குகிறது. அந்தவகையில், உதயனின் "கதிரோட்டம்" என்ற ஆசிரியத் தலையங்கம் பிசிறில்லாமல் தமிழ்த்தேசிய இனத்தின் குரலாகவே ஒலித்துக் கொண்டிருக்கிறது. ஈழத்தமிழினத்தின் பிரச்சினைகளை ஆணித்தரமாக எடுத்துரைப்பதன் மூலம் அதன் கதிரொளி தாயகத்தின் மீது வெளிச்சம் பாய்ச்சுகிறது என்று தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தனது தலைமை உரையில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "உதயன் இலங்கைச் சிறப்பிதழ் என்று இப்போது தனியாக ஒரு சிறப்பிதழை வெளியிட்டாலும் எல்லா இதழ்களுமே இலங்கைச் சிறப்பிதழ்கள்தான். அதன் இதழ்களில் அரசியல், கலை, இலக்கியம், ஆன்மீகம் என்று பல துறைகளிலும் இலங்கையின் பிரசித்தமான பலர் எழுதி வருகிறார்கள். இலங்கை பற்றிய செய்திகளைத் தாங்கி வராத உதயன் இதழ்களே இல்லை எனலாம். வேறு செய்தி மூலங்களில் இருந்து பிரதியெடுத்துப் பிரசுரிக்காமல் உதயன் தனக்கென இலங்கையில் செய்தியாளர்களை வைத்து நம்பகமான செய்திகளையும் கட்டுரைகளையும் தந்துகொண்டிருக்கிறது.

உதயன் ஆசிரியத் தலையங்கத்தினாலோ அல்லது அரசியல் கட்டுரைகளினாலோ மாத்திரம் தமிழர் தாயகத்தின் மீது வெளிச்சம் பாய்ச்சவில்லை. செய்தி இருளை மாத்திரமல்ல மானுடத்தின் அவலங்களையும் இன்னல்களையும் விரட்டுகின்ற எல்லாமே வெளிச்சம் தான். அந்தவகையிலும், உதயன் தாயகத்தின் மீது தன் வெளிச்சத்தைத் தந்துகொண்டிருக்கிறது. உதயன் ஊடகப்பணி மூலம் தேடிக்கொண்ட உறவுகளைப் பயன்படுத்தி, ரொறன்ரோவின் மனிதநேயக் குரல் என்னும் அமைப்பின் மூலம் போரால் பாதிக்கப்பட்ட வடக்குக்கிழக்கில் மக்களின் இன்னல்களைப் போக்கும் ஏராளமான அறப்பணிகளைச் செய்துகொண்டிருக்கிறது.

கனடாவின் அரசியலில் செல்வாக்குச் செலுத்துகின்ற ஒரு பலமிக்க சமூகமாக அங்கு வாழும் ஈழத்தமிழர்கள் வளர்ந்து வருகிறார்கள். இதனால் கனேடிய அரசியல்வாதிகளும் ஈழத்தமிழர்களின்பால் கவனமும் கரிசனமும் கொள்ள ஆரம்பித்திருக்கிறார்கள். இந்த இரண்டு தரப்பினரையும் இணைக்கின்ற ஆரோக்கியமான ஒரு பாலமாகவும் உதயன் பணியாற்றி வருகிறது. இதன்மூலம் ஈழத்தமிழர்களின் இனப்பிரச்சினை தொடர்பாகக் கனேடியர்களுக்கும் தெளிவூட்டுகின்ற ஒரு பணியை உதயன் செவ்வனே செய்துகொண்டிருக்கிறது" என்றும் தெரிவித்தார்.





அடுத்து உரையாற்றிய ஈழத்தின் சிரேஸ்ட ஊடகவியலாளரும் "தினக்குரல்" பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியருமான இ. புாரதி தனது உரையில் "இலங்கைக்கு அடுத்ததாக ஈழத்தமிழர்கள் அதிகளவுக்கு வசிக்கும் நாடாகக் கனடா உள்ளது. அதனால்தான் கனடாவை இரண்டாவது தாயகம் என நாம் கருதுகின்றோம். 1980களில் ஈழத்தமிழர்கள் அதிகளவுக்குப் புலம்பெயரத் தொடங்கியபோது பெரும்பாலானவர்கள் கனடாவைத் தெரிவு செய்தமைக்குப் பல காரணங்கள் இருந்தன. இவ்வாறு அதிக தமிழர்கள் கனடாவுக்குப் புலம்பெயர்ந்து வந்த காலகட்டத்தில் அவர்களுக்கிடையேயான தொடர்பாடலுக்கும், தாயகச் செய்திகளை அறிந்துகொள்ளவும் ஊடகங்கள் எதுவும் இருக்கவில்லை. இன்று போல இணையத்தளங்களோ, சமூக ஊடகங்களோ அப்போது இல்லை. அந்த நிலையில்தான் காலத்தின் கட்டளையாக "உதயன்" பத்திரிகை உதயமானது" என்று தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து சென்ற ஆர்.என். லோகேந்திரலிங்கம் அவர்கள் 25 வருடங்களுக்கு முன்னால் காலத்தின் கட்டளையை ஏற்று தனது சமூகக் கடமையாக உதயன் பத்திரிகையை ஆரம்பித்தார். புகலிட நாடுகளில் ஏராளமான தமிழ்ப் பத்திரிகைகள் வெளிவர ஆரம்பித்தபோதும் இவற்றுள் பெரும்பாலானவை நீண்ட ஆயுளைக் கொண்டிருக்கவில்லை. ஒரு சில வருடங்களிலேயே முடங்கிப் போய்விட்டன. ஆனால், இரண்டரை தசாப்தங்களுக்கும் மேலாகப் பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்கள் வெற்றிகரமாக உதயன் பத்திரிகையை நடாத்தி வருகிறார்.





ஆரம்பத்தில் தாயகச் செய்திகளை அறிவதற்கே புலம்பெயர்ந்த மக்களுக்கு ஊடகங்கள் தேவையாக இருந்தன. காலப்போக்கில் அந்தந்த நாட்டுச் செய்திகளுக்கும் முக்கியத்துவம் கிடைத்தன. தமிழர்களின் வர்த்தக முயற்சிகளுக்கும் களம் அமைக்கப்பட்டது. கலை, கலாசார, மத நிகழ்வுகளும் இந்த ஊடகங்களில் இடம்பிடித்துக்கொண்டன. மின்னியல் ஊடகங்கள் பெருகியுள்ள நிலையிலும், காலத்துக்கேற்ற மாற்றங்களுடன் "உதயன்" பத்திரிகை வெளிவருவதால்தான் சவால்களை எதிர்கொண்டு அதனால் வெற்றிகரமாக முன்னேறிச்செல்ல முடிகின்றது.

உதயன் கனடாவில் வாழுகின்ற தமிழ் மக்களுக்கான பத்திரிகை மாத்திரமல்ல. அது இன்று தமிழ்கூறும் நல்லுலகெங்கும் இணையவழி சென்றடைகின்றது. தமிழகச் சிறப்பிதழ், மலேசியச் சிறப்பிதழ், இலங்கைச் சிறப்பிதழ் என்று தன் ஊடகப் பணியை விரிவாக்கிச் செல்கிறது. இதற்கு உதயனின் ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்களின் இலக்கியப் பின்புலமும் ஓர் காரணமாகும். அவர் ஒரு ஊடகவியலாளர் மாத்திரமல்ல் இலக்கிய வாதியும்கூட. தாயகத்தில் இலக்கிய உலகில் மலையன்பன் என்ற பெயரில் பரவலாக அறியப்பட்டவர். அவரின் இந்தப் பன்முக ஆளுமை கனடா உதயனுக்குப் புகலிட தமிழ் ஊடகப் பரப்பில் தனித்துவமான அடையாளத்தை வழங்கியுள்ளது என்றும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் உதயன் வார இதழின் தொடர் எழுத்தாளரும் - திருநெல்வேலி சமூகத்தில் நன்கு அறிமுகமானவருமாகிய திரு. வீணைமைந்தன் தனது உரையில் புகழ்பெற்ற மூத்த எழுத்தாளர், தெய்வத்திரு. இராசநாயகம் அவர்களது வாரிசு ஊடகத்துறை சார்ந்த திரு. பாரதி ஆகியோர் உதயன் ஆசிரியர் மாணவப் பருவத்திலிருந்தே நன்கு அறிந்தவர்கள் என்பதை கேள்வியுற்றபோது நாம் மகிழ்வுற்றேன். எழுத்துத்துறையில் ஆர்வம் கொண்டு புதுவை இரத்தினதுரை, சிற்பி போன்ற பல மூத்த இலக்கிய வாதிகளுடன் அறிமுகமாகி கவியரங்குகளிலும், சமூக முன்னேற்றச் செயல்பாடுகளிலும், அவர் ஈடுபட்டு வந்ததையும், அதன் நீட்சியாகக் கனடாவில் வாழ்ந்தாலும் தான் பிறந்த மண்ணுக்கும் - தாயகத்தின் பிற பகுதிகளின் வளர்ச்சி, மாணவ சமூகத்தினருக்குத் தேவையான உதவிகளை அமைப்பு ரீதியாக உதவி வருவதையும், ஈழத்து எழுத்தாளர்களை உலகலாளவிய ரீதியில் அறிமுகப்படுத்தி, அவர்களது எழுத்தாற்றலை வெளிப்படுத்தி வரும் உன்னதமான இன - மொழிப் பற்றையும் தான் நேரடியாக கனடாவில் நெருக்கமாக இருந்து அவதானித்து வருகின்றேன்" என்றார்.






Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற
கனகாம்பிகை
தங்கநகை அடகுமாடம்
KANAGAAMBIKAI
PAWN BROKERS
25
வருடங்கள்
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
கனகாம்பிகை
பவுண் வங்கி
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...
2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2
416 269 7198



# தமிழா விழித்தெழு!

- வி.தேவராஜ்
மூத்த ஊடகவியலாளர்

- **த**மிழ் மக்கள் விழித்துக் கொள்ளாவிடில் "தமிழ்த் தேசிய வியாபாரிகள்" தமிழ்த் தேசியத்திற்கு சமாதி கட்டிவிடுவர்.

- தமிழர் விவகாரத்தை வைத்து "குரங்கு வித்தை காட்டும்" சாவதேச "குரங்காட்டிக்காரர்களின்" மொழியில் அறிக்கை.

ஜநா மனித உரிமை பேரவையின் ஆணையாளரின் அறிக்கை வெளிவந்துள்ளது. வழமைபோல் தமிழர்களுக்கு சாதகமான அம்சங்களும் இடம்பெற்றுள்ளன. இந்த அறிவிப்புகள் ஒன்றும் தமிழ் மக்கள் மீதான அக்கறையில் அனுதாபத்தில் பிறக்கவில்லை. தமிழ் மக்களை தமிழர் விவகாரத்தை வைத்து "குரங்கு வித்தை காட்டும்" சாவதேச சக்திகளான "குரங்காட்டிக்காரர்களின்" மொழியில் பிறந்த கதையாகும்.

இதனை அடுத்து ஜநா மனித உரிமை பேரவையின் முழுமையான அறிக்கை வரும். அதற்கு எதிராக சீனா பாகிஸ்தான் ரஸ்யா என இலங்கைக்கு ஆதரவான நாடுகள் அணிவகுத்து நிற்கும். வழமைபோல் இந்தியா ஒரு அறிக்கையுடன் "நடு நிலை" வகிக்கும்.

அடுத்த கூட்டத் தொடர்வரை தமிழர் தரப்பு இதுபற்றி பேசிக் கொண்டிருக்கும். அதற்குள் தமிழ்த் தலைமைகளும் புலம்பெயர் அமைப்புக்களும் மனித உரிமைப் பேரவையின் "கடும் போக்கு" அல்லது கனதியான அறிக்கைக்கு தாமே காரணமென தமிழ் மக்களுக்குப் "பூச் சுற்றி" திரிவர். அடுத்த மனித உரிமை பேரவை கூட்டத் தொடர்வரை இத தொடரும்.

2009 இல் போர் மௌனிக்கப்பட்டதில் இருந்து இதுதான் நடைபெற்று வருகின்றது. தமிழர் விவகாரத்தில் "தமிழ்த் தலைமைத்துவங்களினாலோ நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்தினாலோ புலம் பெயர் அமைப்புக்களினாலோ ஏன் வருடாவருடம் ஜெனிவாவில் கூடி தீர்மானம் நிறைவேற்றும் மனித உரிமைப் பேரவையினாலோ இலங்கையில் மாறி மாறி ஆட்சிபீடம் ஏறும் அரசாங்கங்களின் போக்கினைத் தடுத்து நிறுத்த முடியவில்லை.

இன்றைய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவாக இருக்கட்டும் அல்லது முன்னாள் ஜனாதிபதிகளான கோதாபய ராஜபக்ஷ மஹிந்த ராஜபக்ஷவாகட்டும் அல்லது இவர்களுக்கு முந்தைய ஜனாதிபதிகளாகட்டும் பிரதம மந்திரிகளாகட்டும் எல்லோரும் தமிழர் விவகாரத்தில் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளாகத்தான் உள்ளனர். உனக்கு நான் சளைத்தவன் அல்ல என்ற போக்கில் இவர்கள் ஒவ்வொருவரும் தமிழர் விவகாரத்தில் கடும் போக்காளர்களாகவே செயற்பட்டு வருகின்றனர். இந்தக் கடும் போக்கினைத் தடுத்து நிறுத்தும் சக்தி இதமிழ் தலைமைகளிடமோ" அல்லது புலம் பெயர் தமிழ் அமைப்புக்களிடமோ அல்லது நாடு கடந்த தமிழீழ அரசாங்கத்திடமோ இல்லை. ஏன் சர்வதேசத்திடமும் இல்லை. ஆனால் இந்தச் சக்திகள் நேரடியாகவும் மறைமுகமாகவும் தமிழ் மக்களை அழிப்பதற்கு இலங்கையுடன் கைகோர்த்து துணை நிற்கின்றனர்.

எனவேதான் "நாங்கள் அரசியல் அநாதைகள்" என்ற வார்த்தை தமிழ் மக்களிடையே இன்று பரவலாக பேசப்படுகின்றது. தமிழ் மக்களுக்கு தலைமைதாங்கும் நிலையில் நிலத்திலும் எவரும் இல்லை. புலத்திலும் யாரும் ,ல்லை என்பதுதான் உண்மை.

நிலத்தில் அதாவது தாயகத்தில் தமிழ்த் தலைமைகளை ஒன்றிணைத்துவிட வேண்டுமென்பதில் பல்கலைக்கழக சமூகம் சமூக நலன் விரும்பிகள் புத்திஜீவிகள் சமூக ஆர்வலர்கள் மற்றும் பலதரப்பட்ட சமூக அமைப்புக்களும் காலத்துக்குக் காலம் பகீரதப் பிரயத்தனங்களை மேற்கொண்டபோதும் அந்த அணைத்து முயற்சிகளையும் "தமிழ்த் தலைமைகள்" வெற்றிகரமாக முறியடித்துவிட்டன.

இந்தத் தமிழ் தலைமைத்துவங்கள் தமக்குள்ளும் முரண்பட்டு நிற்கின்றன. தமிழீழ விடுதலைப் புலிகளின் பின்னரான தமிழர் அரசியலில் தமிழ் மக்களின் அரசியல் விடி வெள்ளியாகத் தெரிந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இத்தகைய முரண்பாடு காரணமாவே காலத்துக்குக் காலம் கூட்டமைப்பில் இணைந்திருந்த கட்சிகள் பல வெளியேறக் காரணமாக இருந்தது. தமிரசுக் கட்சி தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் பெயரில் அரசியலை முன்னெடுத்தமையினாலேயே இந்தப் பிளவுகளுக்கு வழி வகுத்தன. தற்போது தமிழரசுக் கட்சிக்குள்ளேயே மாவை அணி சுமந்திரன் அணி என இரு அணிகள் உருவாகி பனிப் போர் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

தாயகத்தில் இந்த நிலையெனில் புலம்பெயர்ந்தோர் மத்தியிலும் இதேநிலைதான். ஆளுக்கொரு பக்கமாக நிற்கின்றனர். இலங்கை அரசாங்கம் அடிக்கடி புலம்பெயர் தமிழ் அமைப்புக்களை தடை செய்வதும் பின்னர் அவர்களில் ஒருபகுதியினர் மீதான தடையை நீக்குவதும் பின்னர் தடைவிதிப்பதுமாக சிங்கள மக்களின் உணர்வுகளை கொதிநிலையில் வைத்திருப்பதற்கான நாடகத்தை மாறி மாறி ஆட்சிபீடமேறும் அரசாங்கங்கள் அரங்கேற்றி வருகின்றன.

2009 மே மாதம் விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் முடிவடைந்த பின்னர் இந்த அமைப்புகளில் பல மாறி மாறி பயங்கரவாத அமைப்புகளாக அறிவிக்கப்பட்டு மீண்டும் பலமுறை பட்டியலிலிருந்து நீக்கப்பட்டன. யுத்தம் முடிவடைந்து ஐந்து வருடங்களின் பின்னர் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 1 ஆம் திகதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் 16 அமைப்புகளையும் 424 நபர்களையும் தடை செய்தது.

நவம்பர் 20 அன்று நல்லாட்சி அரசாங்கம் எட்டு அமைப்புகள் மற்றும் அவற்றில் அங்கம் வகித்த 267 தனிநபர்கள் மீதான தடையை நீக்கியது. பின்னர் மீண்டும் கோட்டாபய ராஜபக்ச அரசாங்கம் கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் 25 ஆம் திகதி ஏழு அமைப்புகளையும் 389 நபர்களையும் தடைப் பட்டியலில் சேர்த்தது.

தற்போது 6 அமைப்புகளும் 316 நபர்களும் மீண்டும் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். இது எதனைக் காட்டுகின்றது. புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியிலும் ஒற்றுமையில்லை என்பதையே காட்டுகின்றது.

நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் நாடு கடந்த நிலையில் அரசாங்கத்தை நடத்தி வருகின்றது.

அப்படியானால் தமிழ்மக்களை ஒரு குடையின்கீழ் கொண்டுவரக் கூடிய தலைவன் அல்லது அமைப்பு இன்று இல்லை என்பதைத்தானே காட்டுகின்றது.

எத்தனை அழிவுகள் பின்னடைவுகள் காட்டிக் கொடுப்புகள் இன்றும் தாயக நிலத்தில் வீசும் காற்றுடன் நிரந்தரமாகக் கலந்துள்ள மரண ஓலங்கள் போன்றவற்றை உணர்ந்த பிறகும் அனுபவித்த பிறகும் பிரிவுகள் பிளவுகள் முரண்பாடுகள் தமிழ் இனத்திற்கு வேண்டுமா என்று கேட்கத் தோன்றுகின்றது. துரதிஷ்டவசமாக பிரிந்தும் பிளவுபட்டும் நிற்கும் சக்திகள் இதனை உணரத் தவறுவது ஏனோ?

2004 ஆம் ஆண்டு கருணா தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்து பிரிந்தபோது "தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வே.பிரபாகரனை பலவீனப்படுத்துவது என்பது தமிழ் மக்களை வேருடன் பிடுங்கிச் சாய்ப்பதற்குச் சமன்" என்று அன்று நான் பணியாற்றிய வீரகேசரி வாரவெளியீட்டில் எழுதிய பத்தியில் குறிப்பிட்டிருந்தேன். அதனை வரலாறு இன்று நிரூபித்துள்ளது. இது தமிழ்த் தலைமைத்துவங்கள் அறியாத விடயமல்ல. அவ்வாறாயின் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் தமிழ் மக்களுக்கான விடுதலை விமோசனம் என்ற பெயரில் இத்தனை அமைப்புகள் எதற்கு?

ஒன்றில் பிரிந்து நின்றால் பரவாயில்லை. ஒரு பொது வேலைத்திட்டத்தின் கீழ் பணியாற்ற முன்வரவேண்டும். இல்லையேல் அணைத்து அமைப்புகளையும் கலைத்துவிட்டு ஒரு அமைப்பாக இயங்க முன்வர வேண்டும்.

தாயகத்தில் தமிழ்த் தலைமைகளிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதில் முன் நின்றவர்களில் ஒருவரான அரசியல் விமர்சகர் நிலாந்தன் கூறுகையில் தமிழ்த் தலைமைத்துவங்களை ஒன்றிணைத்துவிட வேண்டும் என்ற முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டவர்களில் நானும் ஒருவன். ஆனால் அது சாத்தியமாகாமல் போய்விட்டது." என்று குறிப்பிடுகின்றார்.

பிரிந்து நிற்பவர்களை ஒன்றிணைப்பது இயலாத விடயமாக உள்ளது. எனவே "வேற்றுமையில் ஒற்றுமை காணுங்கள்" என்று தமிழ்த் தலைமைகளிடம் பிரான்ஸ் மனித உரிமை மையத்தின் செயலாளரும் அரசியல் விமர்சகருமான ச.கிருபாகரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்கு தாயகத்தில் உள்ள தமிழ்த் தலைமைகள் கூறப்போகும் பதில் என்ன?.

புலம் பெயர் தமிழ் அமைப்புகள் கூறப் போகும் பதில் என்ன?

தாயக தமிழ் மக்கள் தமிழ்த் தலைமைகளின் இத்தகைய போக்கு குறித்து என்ன கூற வருகின்றனர்?

புலம் பெயர் தமிழ் அமைப்புக்களின் போக்கு குறித்து புலம்பெயர் தமிழர்கள் கூற வருவது என்ன?

மொத்தத்தில் தாயகத்தில் உள்ள தமிழ் அமைப்புகளும் புலம்பெயர் தேசங்களில் உள்ள தமிழ் அமைப்புக்களும் வேற்றுமைக்குள் ஒன்றுபட்டு பொது வேலைத்திட்டத்தின் கீழ் பணியாற்ற முன்வராதுவிடில் ஒட்டு மொத்த தமிழ் மக்களும் இவர்களை நிராகரித்து தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களையும் ஒன்றிணைத்ததான பொது அமைப்பை நோக்கி தமிழ் மக்கள் நகர்ந்தாக வேண்டும்.

தமிழ் மக்கள் இத்தகைய அமைப்புக்களுக்கு எதிராக கிளர்ந்து எழுவதன் மூலமே தமக்கான பாதையை தாமே வெட்டிக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

இல்லையேல் தமிழ்த் தேசியத்தை எழுத்தில்மட்டுமே பார்க்கக் கூடியதாக இருக்கும். தமிழ் இனத்தை வரலாற்று ஆவணங்களில் மாத்திரமே தேட வேண்டி வரும்.

வடக்கிலும் கிழக்கிலும் தமிழ்த் தேசியத்தை "நலமடித்துவிடும்" முயற்சியில் தமிழர் தரப்பில் இருந்தே சக்திகள் களம் இறங்க்கப்பட்டு காய்கள் வெற்றிகரமாக நகர்த்தப்படுகின்றன.

வடக்கும் கிழக்கும் நிலத்தால் நிர்வாக ரீதியில் பிரிக்கப்பட்ட போதும் தமிழ்த் தேசிய உணர்வால் மக்கள் இறுகப் பிணைக்கப்பட்டிருந்தனர். கிழக்கில் இந்த உணர்வு ரீதியிலான பிணைப்பை நிர்மூலமாக்கிவிட சக்திகள் களம் இறக்கப்பட்டுள்ளன. இந்தச் சக்திகள் வெற்றி பெற்றால் தமிழ்த் தேசியம் வடக்குடன் மட்டுப்படுத்தப்பட்டுவிடும். இதற்கான பொறுப்பை "தமிழ்த் தலமகளே" ஏற்க வேண்டும்.

அதேவேளையில் இந்த "தமிழ்த் தலைமைகளிடம்" அது தாயகத்திலாகட்டும் புலம்பெயர்ந்தோர் மத்தியிலாகட்டும் தமிழர் விவகாரத்திற்கான தீர்வு குறித்து அவர்கள் முன் வைக்கும் தீர்வு யோசனை என்ன? அதற்கான பதில் தீர்வு யோசனைகுறித்த திட்டவட்டமான பொதி எதுவும் இன்றியே காலத்தைக் கடத்தி வருகின்றனர் என்பதைத்தவிற வேறு ஒன்றும் இல்லை.

தாயக மண்ணைப் பொறுத்து தமிழ்த் தலைமைகள் நாடாளுமன்ற மாகாண சபைகளுக்கானக்கான தேர்தலில் தமிழர் பிரதேசத்தில் கைப்பற்றக் கூடிய நாற்காலிகளுக்கான சண்டையாகவே இருக்கின்றது. எனவேதான் தமிழர் விவகாரத்துக்கான தீர்வு ஒரு அங்குலம்தானும் நகர முடியாதுள்ளது.

புலம்பெயர் தமிழர்களைப் பொறுத்து அவர்களும் தீர்வை நோக்கி நகர முடியாது "குண்டுச் சட்டிக்குள் குதிரை ஓடிக் கொண்டிருக்கின்றனர்".

இந்தப் போக்கில் மாற்றம் கண்டாக வேண்டும்.

ஒட்டு மொத்த தமிழ் மக்களும் விழித்துக் கொள்ளாவிடில் "தமிழ்த் தேசிய வியாபாரிகள்" தமிழ்த் தேசியத்திற்கு மாத்திரம் அல்ல தமிழ் இனத்திற்கும் சமாதி கட்டிவிடுவர்.

தமிழா விழித்தெழு!

Email : vathevaraj@gmail.com

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# உடல்நலம் பாதிக்கப்பட்டிருப்பதால் மருத்துவ சிகிச்சைக்காக இலங்கையிடம் அடைக்கலம் கோரும் சுவாமி நித்யானந்தா?

உடல்நிலை பாதிக்கப்பட்டுள்ள சுவாமி நித்யானந்தா (44) சிகிச்சைக்காக இலங்கை அரசிடம் அடைக்கலம் கோரியிருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. தமிழகத்தின் திருவண்ணாமலையைச் சேர்ந்த சுவாமி நித்யானந்தா, கர்நாடக தலைநகர் பெங்களூரு அருகே பிடதியில் ஆசிரமம் நடத்திவந்தார். நாட்டின் பல்வேறு பகுதிகளில் கிளை ஆசிரமங்களையும் நடத்தி வந்தார். கடந்த 2010-ம் ஆண்டு அவர் மீது பாலியல் வழக்கு தொடரப்பட்டது. மேலும் குஜராத்தின் அகமதாபாத்தில் உள்ள நித்யானந்தாவின் ஆசிரமத்தில் சிறுமிகளை சட்டவிரோதமாக அடைத்து வைத்திருந்ததாக அந்த மாநில போலீஸார் கடந்த 2019-ம் ஆண்டில் வழக்கு பதிவு செய்தனர். இரு வழக்குகளிலும் அவரை கைது செய்ய குஜராத், கர்நாடக நீதிமன்றங்கள் உத்தரவிட்டன.

இந்த சூழலில் கடந்த 2019-ம் ஆண்டு நவம்பரில் நித்யானந்தா நாட்டை விட்டு வெளியேறினார். புதிதாக குடியேறிய தீவுக்கு கைலாசா என்று பெயரிட்டுள்ளார். ஆனால் கைலாசா எங்கிருக்கிறது என்பது யாருக்கும் தெரியவில்லை.

கடந்த சில மாதங்களுக்கு முன்பு நித்யானந்தாவுக்கு உடல்நலக்குறைவு ஏற்பட்டு மரணம் அடைந்ததாக தகவல் பரவியது. அதற்கு சமூக வலைதளம் வாயிலாக மறுப்பு தெரிவித்தார். அண்மைக் காலமாக சிறுநீரக பிரச்சினையால் நித்யானந்தா அவதியுற்று வருவதாகக் கூறப்படுகிறது. இந்த சூழலில் கைலாசாவின் வெளியுறவு அமைச்சர் என்ற பெயரில் நித்யபிரேமாத்ம ஆனந்த சுவாமி என்பவர் இலங்கை அதிபர் ரணில் விக்ரமசிங்கவுக்கு சில நாட்களுக்கு முன்பு ஒரு கடிதம் அனுப்பினார். அதில் கூறியிருப்பதாவது:



நித்யானந்தாவின் உடல்நிலை மிகவும் மோசமாக உள்ளது. அவருக்கு உடனடியாக மருத்துவ சிக்சை அளிக்க வேண்டி உள்ளது. கைலாசாவில் போதிய மருத்துவ வசதிகள் இல்லை. அவரது உடல்நிலையை கருத்தில் கொண்டு மருத்துவ சிகிச்சைக்காக இலங்கையில் அடைக்கலம் அளிக்க வேண்டுகிறோம். விமான ஆம்புலன்ஸ் மூலம் அவரை இலங்கைக்கு அழைத்துவர தயாராக உள்ளோம். அவரது சிகிச்சைக்கு தேவையான அனைத்து செலவுகளையும், மருத்துவ உபகரணங்களுக்கான செலவுகளையும் கைலாசா முழுமையாக ஏற்றுக் கொள்ளும். இவ்வாறு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் ஊடகப் பிரிவு அதிகாரி ஒருவர் கூறும்போது, "நித்யானந்தாவிடம் இருந்து இலங்கை அரசுக்கு எந்த கடிதமும் வரவில்லை. ஒரு நாட்டில் அடைக்கலம் கோர வேண்டும் என்றால் அந்த நாட்டின் ஐ.நா. சபை அலுவலகம் வாயிலாகவே தொடர்பு கொள்ள வேண்டும்" என்றார். இதுகுறித்து இலங்கை அரசு சார்பில் அதிகாரபூர்வமாக எவ்வித தகவலும் வெளியிடப்படவில்லை.




# கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தை அண்டிய பகுதிகளில் சிரமதானம் முன்னெடுப்பு

கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தை அண்டிய பல பகுதிகள் இன்று சிரமதானம் செய்யப்பட்டன.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தை அண்டிய பல பகுதிகளை கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி. எம். எல். புத்திக மேற்பார்வையில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் வழிகாட்டலினூடாக கல்முனை பொலிஸ் நிலையத்தின் பிரதம பொலிஸ் பரிசோதகரும் சமூக பொலிஸ் பிரிவு பொறுப்பதிகாரியுமான ஏ.எல்.ஏ.வாஹிட் நெறிப்படுத்தலில் இச் சிரமதான பணியினை பொலிஸார் முன்னெடுத்தனர்.

சுற்றுச்சூழலை பாதுகாக்கும் நோக்குடனும் டெங்கு நோயின் தாக்கத்தை இப்பிரதேசத்தில் கட்டுப்படுத்தும் முகமாகவும் பொலிஸ் நிலையத்தை அண்டிய பகுதிகளில் உள்ள குப்பைகூழங்கள் காடுமண்டிய இடங்கள் யாவும் துப்பரவு செய்யப்பட்டன.

இதன்போது கல்முனை பேரூந்து நிலையம் மாநகர சபை அலுவலகப் பகுதி உட்பட வீதியோரங்களில் தேங்கிக் காணப்பட்ட கழிவுகளை பொலிஸார் அவ்விடத்தில் இருந்து அகற்றி சுத்தப்படுத்தி சூழலை அழகுபடுத்தியமை குறிப்பிடத்தக்கது.

மேற்படி நடவடிக்கையின் போது கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய சமூக சேவை பொலிஸ் பிரிவு சுற்றுச்சூழல் பொலிஸ் பிரிவு போக்குவரத்து பிரிவு சிறு குற்றத்தடுப்பு பிரிவு இபெருங் குற்றத்தடுப்பு பிரிவு சிறுவர் பெண்கள் விசாரணைப் பிரிவு என்பன பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.



இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 156 வது ஆண்டு நிறைவு செப்டம்பர் மாதம் 3 ஆந் திகதி முதல் 10 ஆம் திகதி வரை நாடு பூராகவும் பல சமூக நலப்பணிகளும் சமய நிகழ்வுகளுடனும் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# ஒற்றுமை பயணம் தொடங்கினார் ராகுல் குமரியில் முதல் நாள் 'ஹைலைட்ஸ்'

கன்னியாகுமரியில் இருந்து காஷ்மீருக்கு இந்திய ஒற்றுமை நடைபயணத்தை காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி நேற்று தொடங்கினார். முதல்வர் மு.க.ஸ்டாலின், ராகுலிடம் தேசியக் கொடியை வழங்கி நடைபயணத்தை தொடங்கி வைத்தார். காங்கிரஸ் கட்சியை பலப்படுத்தவும், கட்சியினரிடையே எழுச்சியை ஏற்படுத்தவும் 'பாரத் ஜோடோ யாத்ரா' என்னும் இந்திய ஒற்றுமை நடைபயணத்தை ராகுல் காந்தி எம்.பி. மேற்கொள்கிறார்.

இந்த நடைபயணத்தை கன்னியாகுமரியில் நேற்று தொடங்கினார். இதற்காக நேற்று முன்தினம் சென்னை வந்த அவர், நேற்று காலை ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ராஜீவ் காந்தி நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார்.பின்னர், சென்னையில் இருந்து விமானத்தில் திருவனந்தபுரம் வந்து, அங்கிருந்து ஹெலிகாப்டரில் மாலை 3 மணிக்கு கன்னியாகுமரி வந்தடைந்தார். மாலை 3.15 மணிக்கு தனிப்படகில் விவேகானந்தர் பாறைக்கு சென்றார். அங்குள்ள நினைவு மண்டபத்தில் விவேகானந்தர் சிலைக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். தியான மண்டபத்தில் அமர்ந்து சில நிமிடங்கள் தியானம் செய்தார். பின்னர், அங்குள்ள பகவதியம்மன் காலடிச்சுவடுக்கு மரியாதை செய்தார்.மீண்டும் படகில் பயணித்து திருவள்ளுவர் சிலைக்கு மரியாதை செலுத்தினார்.

4 மணி அளவில் கரை திரும்பிய ராகுல் காந்தி, காமராஜர் மணிமண்டபத்தில் உள்ள அவரது சிலைக்கும், காந்தி மண்டபத்தில் மகாத்மா காந்தியடிகளின் அஸ்தி கட்டத்திலும் மலர்தூவி மரியாதை செலுத்தினார். அவருடன் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின், ராஜஸ்தான் முதல்வர் அசோக் கெலாட், சத்தீஸ்கர் முதல்வர் பூபேஷ் பாகல் ஆகியோரும் காந்தி அஸ்தி கட்டத்தில் மரியாதை செலுத்தினர்.

பின்னர், காந்தி மண்டபம் வாயிலில் முதல்வர் ஸ்டாலின், தேசியக் கொடியை ராகுல் காந்தியிடம்



வழங்கி அவரது நடைபயணத்தை தொடங்கி வைத்தார். அங்கிருந்து கடற்கரை சாலையில் 600 மீட்டர் தூரம் நடைபயணம் மேற்கொண்ட ராகுல், தேசியக் கொடியை ஏந்தியவாறு பொதுக்கூட்ட மேடைக்கு வந்தார்.அவருடன் தமிழக காங்கிரஸ் தலைவர் கே.எஸ்.அழகிரி, முன்னாள் மத்திய அமைச்சர் ப.சிதம்பரம், சிறுபான்மை ஆணைய தலைவர் பீட்டர் அல்போன்ஸ், காங்கிரஸ் கட்சியின் டெல்லி மேலிட பார்வையாளர் தினேஷ் குண்டுராவ், தேசிய செயலாளர் ஸ்ரீவல்லபிரசாத், எம்.பி.க்கள் திருநாவுக்கரசர், செல்லகுமார், ஜோதிமணி, விஜய் வசந்த், கார்த்தி சிதம்பரம் மற்றும் ராஜேஷ்குமார் எம்எல்ஏ ஆகியோரும் வந்தனர்.

ராகுல் காந்தி மேடைக்கு வந்ததும் அங்கு கூடியிருந்த காங்கிரஸ் தொண்டர்கள் தேசியக் கொடியை அசைத்து மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். தொடர்ந்து ராகுல் பேசியதாவது: தேசியக் கொடியை சிலர் சாதாரணமாக நினைக்கிறார்கள். அது, நமக்கு எளிதாக கொடுக்கப்படவில்லை. இந்தியர்களால் அதுமீட்டெடுக்கப்பட்டது. இந்தக் கொடிஒரு நபருக்கானதல்ல, ஒவ்வொரு இந்தியனுக்குமானது. இது நமது அடையாளம். தற்போது அது பாஜக, ஆர்எஸ்எஸ்ஸால் பல்வேறு தாக்குதல்களுக்கு உள்ளாகியிருக்கிறது.அமலாக்கத் துறை, சிபிஐ,வருமான வரித்துறை போன்றவற்றால் எதிர்க்கட்சியினரை அச்சுறுத்துகின்றனர். இந்த அமைப்புகள் மூலம் எதிர்க்கட்சிகளின் எந்த தலைவர்களையும் முடக்கிவிட முடியாது.இந்தியாவை சாதி, மதம், மொழியால் பிரித்துவிட பாஜக நினைக்கிறது. அவர்களால் அவ்வாறு செய்ய முடியாது.

நாட்டு மக்கள் எப்போதும் ஒற்றுமையுடன் இருந்து பாஜகவின் செயல்பாடுகளை முறியடிப்பார்கள்.வரலாற்றில் இல்லாத அளவுக்கு நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கிறது. வேலைவாய்ப்பின்மை அதிகரித்து வருகிறது. நாட்டில் உள்ள முக்கிய தொழில்கள், சில தொழிலதிபர் களின் கைகளில் உள்ளன.சிறு, குறு தொழில்களையும், விவசாயத்தையும் பாஜக முடக்கிவிட்டது. இளைஞர்கள் வேலையில்லாமல் திண்டாடுகின்றனர். மோசமான காலகட்டத்தில் நாம் இருக்கிறோம். இந்த நிலையை மாற்றி இந்தியாவை ஒற்றுமைப்படுத்தும் தருணம் வந்துள்ளது. இதுதான் இந்த நடைபயணத்தின் நோக்கம்.

சகோதரர், தமிழக முதல்வர் ஸ்டாலின் இந்திய நடைபயணத்தை தொடங்கி வைத்து, சற்று தூரம் பங்கேற்றார். அவருக்கு வாழ்த்தும், நன்றியும் தெரிவித்துக் கொள்கிறேன்.இவ்வாறு அவர் பேசினார். இன்று காலை கொட்டாரம் வழியாக சுசீந்திரத்தை காலை 10 மணிக்கு அடைகிறார். அங்கிருந்து மாலை 4 மணிக்கு மீண்டும் நடைபயணம் மேற்கோண்டு நாகர்கோவில் ஸ்காட் கல்லூரியில் மாலை 7 மணி அளவில் நடைபயணத்தை முடிக்கிறார். தொடர்ந்து தக்கலை, மார்த்தாண்டம், படந்தாலுமூடு வழித்தடத்தில் நடைபயணம் மேற்கொண்டு கேரள எல்லையை 10ம் தேதி அடைகிறார். 11ம் தேதி முதல் கேரளத்தில் அவரது பயணம் தொடங்குகிறது.

# இலங்கை கடற்படையால் கைதான தமிழக மீனவர்கள், படகுகளை விடுவிக்க நடவடிக்கை அவசியம்: மத்திய அமைச்சருக்கு தமிழக முதல்வர் கடிதம்




இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள தமிழக மீனவர்களை விடுவிக்கவும், பறிமுதல் செய்யப்பட்டுள்ள அவர்களது படகுகளை மீட்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, மத்திய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார்.இந்தியஇலங்கை கடற்பகுதியில் மீன் பிடிக்கச் செல்லும் தமிழக மீனவர்களை, எல்லை தாண்டி மீன் பிடித்ததாகக் கூறி இலங்கை கடற்படையினர் கைது செய்வது தொடர்கிறது.

அதேபோல, தமிழக மீனவர்களின் படகுகளை பறிமுதல் செய்வது, அவர்களின் மீன்பிடி வலைகளைச் சேதப்படுத்துவது, மீனவர்கள் மீது தாக்குதல் நடத்துவது என இலங்கை கடற்படையினர் தொடர்ந்து அட்டகாசத்தில் ஈடுபடுவதாக தமிழக மீனவர்கள் புகார் தெரிவித்து வருகின்றனர்.மேலும், இலங்கை கடற்படையினரால் பறிமுதல் செய்யப்பட்ட 100க்கும் மேற்பட்ட விசைப் படகுகள் இலங்கையில் வைக்கப்பட்டுள்ளதாகவும், அவற்றை மீட்டுத் தந்து, தங்களது வாழ்வாதாரத்தைப் பாதுகாக்க வேண்டுமென்றும் தமிழக மீனவர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், கடந்த 6ம் தேதி தமிழக மீனவர்கள் சிலரை இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளனர். அவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்குமாறு, மத்திய அரசிடம் முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.இது தொடர்பாக வெளியுறவுத் துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்கு, தமிழக முதல்வர் ஸ்டாலின் நேற்று எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது:

கடந்த 9 மாதங்களில் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 150 தமிழக மீனவர்களை தூதரக நடவடிக்கைகள் மூலம் விடுவிக்க உதவியமைக்காக, எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.கடந்த செப். 6ம் தேதி புதுச்சேரியைச் சேர்ந்த மீனவரின் விசைப்படகில் சென்ற மயிலாடுதுறை மாவட்டத்தைச் சேர்ந்த 5 மீனவர்கள் உள்ளிட்ட 12 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். தற்போதைய நிலவரப்படி, இலங்கை அரசின் வசம் 23 மீனவர்கள் உள்ளனர்.

மேலும், 95 மீன்பிடிப் படகுகளும் உள்ளன. இலங்கை கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது படகுகளையும் விரைவில் விடுவிப்பதற்குத் தேவையான தூதரக நடவடிக்கைகளை மத்திய அரசும், வெளியுறவுத் துறையும் மேற்கொள்ள வேண்டும். இவ்வாறு கடிதத்தில் முதல்வர் ஸ்டாலின் வலியுறுத்தியுள்ளார்.

# வள்ளலாரின் 200வது அவதார ஆண்டு விழா நடத்த குழு : அரசாணைக்கு வேல்முருகன் வரவேற்பு





வள்ளலாரின் 200 வது அவதார ஆண்டு விழா நடத்த குழு படும் என்று தமிழக அரசின் அரசாணை வெளி யிட்டுள்ளது வரவேற்கதக்கது என்று தமிழக வாழ்வுரிமைக் கட்சித் தலைவர் வேல்முருகன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது: ''தமிழர் ஆன்மிகச் சிந்தனை தனித்துவமானது. மெய்யியல் வகையிலும், அறிவியல் முறையிலும் புதிய படிநிலைகளைத் தொட்டுக் காட்டுவது ஆகும்.

அதனால் தான், ஆரியத்திற்கும், இந்துத்துவாவிற்கும் எதிரானது தமிழர் ஆன்மீகம் என தமிழக வாழ்வுரிமைக் கட்சி தொடர்ந்து கூறி வருகிறது. நீண்ட நெடிய மரபுள்ள தமிழர் ஆன்மிகச் சிந்தனைத் தொடரில் வள்ளலார் ராமலிங்க அடிகளின் சமரச சுத்த சன்மார்க்கம் என்பது முக்கியமானது. அருளியலிலும், ஆன்மிகத்திலும் காலூன்றி நிற்கும் வள்ளலார் சிந்தனைகள் அறிவியல், அரசியல், மருத்துவம், உணவியல், வாழ்வியல் போன்ற பல துறைகள் சார்ந்து விரிந்து நிற்கின்றன.

ஆரியமும், இந்துத்துவாவும் தற்போது ஒன்றாக கைகோர்த்து, மனிதர்களிடையே மத ரீதியாக பிளவுப்படுத்தி வரும் இச்சூழலில், வள்ளலார் சிந்தனைகள் மனிதகுலத்திற்கு முன் எப்போதையும்விட இப்போது தேவை.

இச்சூழலில், வள்ளலார் பெருமானாரின் 200வது அவதார ஆண்டு முப்பெரும் விழா நடத்த சிறப்பு குழு அமைத்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிடப்பட்டிருப்பது வரவேற்கதக்கது.

அதே நேரத்தில், வள்ளலாரின் பல துறைச் சிந்தனைகளை ஆய்வு செய்து, பரப்புவதற்கு தமிழ்நாட்டின் அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் வள்ளலார் ராமலிங்க அடிகளார் உயராய்வு மையங்கள் அமைக்க தமிழ்நாடு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழக வாழ்வுரிமைக் கட்சி கேட்டுக்கொள்கிறது.'' இவ்வாறு வேல்முருகன் தெரிவித்துள்ளார்.




25

## நோயோடு போராடு

2020 ஆடி 14ஆம் திகதி. இராப்பொழுது. மறுநாள் காலையில் எனக்கு பரிசோதனைக்கும் சிகிச்சைக்குமான நேரம்.

ஆகவே அதற்கு முன்னேற்பாடான விடயங்களும் கவனிக்கப்பட்டன. அளவான தூக்கம் ஆரோக்கியத்துக்கு அவசியம் என்பது பொதுவாக எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்று. ஆனாலும் அதனைத் தெரிந்திருப்பதால் எல்லோருக்கும் தேவையான அளவுக்கு தூக்கம் வரும் என்பதும் இல்லை.

நான் பொதுவாகவே தூக்க மாத்திரைகளை எடுத்து தூக்கத்தை வரவழைப்பதில்லை. நாளை விடிந்தால் அஞ்சியோபிளாஸ்ட்டி (Angioplasty) செய்யவுள்ளார்கள் என்ற எண்ணம் தூக்கத்தை எட்டவிடவில்லை.

முன்னொரு பொழுதில் இத்தகைய பரிசோதனையைச் செய்த போது எனக்கு இதய வேகத்துடிப்பு பிரச்சினை (Arrhythmia) இருந்ததே இல்லை. இப்போது அது மிக அதிக அளவில் அடிக்கடி வந்து பயமுறுத்திக் கொண்டிருக்கிறது.

ஆகவே இந்த நிலையில் பரிசோதனைக்கு உட்படுவது என்பதில் ஒரு பயம் அடி நெஞ்சைக் குடைந்து கொண்டே இருந்ததால் தூக்கம் வரவில்லை. இதயமே, இப்படி பிரச்சினைகளுக்கு நீ உள்ளான நிலைமைகள் பற்றிய எண்ணங்கள் மனதில் விரிந்தன.

*உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்*
*வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுரவாசல்*
*தெள்ளத் தெளிந்தார்க்கு சீவன் சிவலிங்கம்*
*கள்ளப் புலன் ஐந்தும் காளா மணி விளக்கே*

என்ற திருமூலர் திருமந்திரம் நினைவுக்கு வந்தது.

'உடலினை உறுதி செய்' எனும் பாரதி வார்த்தையையும் இணைத்து சிந்தித்தேன். இன்றுவரை மதுப்பழக்கம், புகைபிடிக்கும் பழக்கங்களுக்கு நான் உள்ளாகாமல் இருப்பது இந்தளவுக்காவது நன்மை செய்திருக்கிறது.

எந்த மருத்துவரும் கேட்கும் முதல் கேள்விகளே 'இந்தப் பழக்கங்கள் உள்ளனவா' என்பதுதான். சாப்பாட்டு வகைகளில் இன்னும் கொஞ்சம் கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்திருக்கலாம்.

கொழுப்பு படிவதற்கு மாமிச உணவுகள் மட்டும் காரணமில்லை. வேறு வகையான காரணங்களும் இருக்கின்றன. ஏற்கனவே இதய நோய்க்காக தரப்பட்ட மருந்துகளைக் காலம் தவறாது உரிய முறையில் எடுத்து வருதல் என்பதும் முக்கியமானது.

இந்த மருந்துகளை எல்லாம் காலம் முழுதும் எடுப்பதில் உள்ள பக்கவிளைவுகள் பற்றிய பயம் எப்போதும் எனக்குண்டு. ஆனால் என்னைப்போன்ற இதய வருத்தங்களுக்கு உள்ளானோர் மருந்துகளை ஒழுங்காக எடுக்க வேண்டும் என்பது முக்கியமானது.

இதய வருத்தங்கள் ஏனைய வருத்தங்களைப் போல கருத முடியாதவை. உடற்பயிற்சியின் முக்கியத்துவத்தையும் நினைவில் கொண்டு செயற்பட்டிருக்க வேண்டும்..

பிரச்சினைகள் வருமுன் காப்பது என்பது முக்கியம். அதுபோல வந்த பின்னாலும் காப்பதும் முக்கியமே.

*ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச் (மகளை)*
*சான்றோன் எனக்கேட்ட தாய்*

எனும் குறளை நினைப்பூட்டும் விதத்தில் மருத்துவ நிலையத்தில் சங்கீதாவின் அப்பாவா? என்று மகளை பெருமைகளை தாதியரும், மருத்துவர்களும் சொன்னபோது தந்தையாகிய நான் பெருமை அடைந்தேன்.

"உமக்கென்ன உமது வீட்டில் ஒரு மருத்துவரும் (மகள் - சங்கீதா) உமது நெஞ்சில் இணைந்தபடி எந்த நேரமும் உமது இதயத்தைக் கவனிக்கும் ICD யும் இருக்கும்வரை பயப்பிட எதுவும் இல்லை" என்று எனது குடும்ப மருத்துவர் ரவி மூர்த்தி அவர்கள் சொன்னதும் நினைவுக்கு வந்தது.

இவற்றையெல்லாம் சிந்தித்தபடி தூங்கிவிட்டேன்...

### 2020 ஆடி 15 காலைப்பொழுது.

சத்திர சிகிச்சைக் கூடத்துக்கு சில்லுக்கதிரையில் கொண்டு செல்லப்பட்டேன். வழமைபோன்று சத்திரசிகிச்சைக்குரிய சகல முன்னாயத்தங்களும் செய்யப்பட்டன.

இது போன்ற ஆயத்தங்கள் முன்பும் பலமுறை நடந்தவைதான்... ஆனாலும்...

நிலாவைத் தொட்டுவிட்டு வருவதற்கான ஒரு பயணத்தின் தயாரிப்பாய் இப்போது இதனை உணர்ந்தேன்.

உள்ளாடை மட்டும் இருக்க மேலாடை அகற்றப்பட்டேன். ஒன்றரை அடி அகல ஒடுங்கிய படுக்கையில் வைக்கப்பட்டேன். இருகரங்களும் விலங்கிடப்பட்டன தனித்தனியாய் கால்களுக்கும் விடுதலை இல்லை. கட்டுக்கள் போடப்பட்டன.

மீண்டும் சிலுவையில் அறையுண்ட யேசுவானேன். ஆனால் இறப்பில்லை. இதுவொரு மோட்சத்துக்கான பயணம் எனத் தெரியத் தொடங்கியது.

தலைமை மருத்துவர் - சத்திரசிகிச்சை நிபுணர் எடுப்பாய் வந்தார்.

"யார் நீ? உமது பெயர் என்ன? எதற்காக வந்துள்ளீர்?"

அடுக்கடுக்காய் கேள்விகள் கேட்டார்.

'தெரிந்ததைத் தெரியாததுபோல் கேட்கிறாரே' என நினைத்துக் கொண்டு பதில்களைச் சொன்னேன். அதுவும் ஒரு சடங்குதான். சட்டத்துக்குள் அகப்பட்ட சடங்கு.

ஆள்மாறி இசக்கு பிசக்காய் நடக்கக் கூடாதுதானே... ஆளை மயக்கும் மாயக்காரரும் கேள்விகள் கேட்டார். வாக்குமூலம் மாறாமல் கொடுத்தேன்.


முகில்களில் மறைந்த நிலவுகள் போல தலையணி முகக் கவசங்கள் மூடி தாதியர் மூவர் அருகினில் நின்றனர். மானுட நேயம். மருத்துவ ஆற்றல்.

இதயமே, நல்லதே நடக்கும் நம்பிக்கையோடிருந்தேன். மயக்க வித்தை மருந்தாய் உட்புக வானத்தில் பறந்தேன். அரை குறை மயக்கத்தில் அரூபமாய் மிதந்தேன்.

வலது கையின் மணிக்கட்டுக்குக் கீழ் உள்ள இரத்தக் குழாயில் துளையிடப்பட்ட அந்த வழியே நிறமித்திரவம் (Dye) அனுப்பப்பட்டு இதயக் குழாயின் அடைப்பு துல்லியமாகக் கண்டறியப்பட்டது.

அதன்படி இதயமே, உனது குழாய் 98 வீதம் மூடப்பட்ட நிலையில் இருந்தது (98% Blockage) கண்டு பிடிக்கப்பட்டது என்பதைப் பின்னால் அறிந்தேன்.

மீண்டும் ஓர் உயிராபத்தான விளிம்பு நிலையில் நான் இருந் திருக்கிறேன்.



அதோடு முன்பு ஸ்டென்ட் (Stent) வைக்கப்பட்ட பகுதியிலும் அடைப்புக்கள் கண்டறியப்பட்டன.

அடைப்புகள் நீக்கப்பட்டு புதிய ஸ்டென்ட் வைக்கப்பட்டன. ஏறக்குறைய 40 நிமிடங்களுக்குள் அனைத்தும் இதய மருத்துவ சத்திரசிகிச்சை நிபுணர் ராக்கோ (Dr Raco) அவர்களால் வெற்றிகர மாகச் செய்து முடிக்கப்பட்டது.

வாழ்க மருத்துவ விஞ்ஞானம். வாழ்க மருத்துவ நிபுணர்களின் அர்ப்பணிப்பான பணிகள். இதயமே மிக அண்மைக் காலமாக அடிக்கடி நடந்த பிரச்சினைகள் அனைத்தினதும் அடிப்படைக் காரணம் இத்தகைய இதயக் குழாய் அடைப்பாகக் கூட இருக்கலாம்.

*"நோய்நாடி நோய்முதல் நாடி அதுதணிக்கும்*
*வாய்நாடி வாய்ப்பச் செயல்"*

வள்ளுவம் இப்போது நம்பிக்கை தந்தது.

இதய நோயில் பல இளம் வயதினர் திடீரென்று இறந்து போகும் செய்திகளை இப்போது அதிகமாக அறிகிறோம். இதற்கான அடிப்படைக் காரணம் அவர்களது பழக்க வழக்கங்கள் என்பது அவர்கள் இறந்து போனதற்கான காரணங்களை அறியும் போது அறியக்கூடியதாக உள்ளது.

அளவுக்கு மீறிய மதுப் பழக்கம் என்பதோடு போதை மருந்துகளுக்கு அடிமையாதல் என்பதுவே எல்லாவற்றிலும் மிகவும் ஆபத்தானதாகும். மனிதர்களில் சிலர் பிறக்கும்போதே குறைபாடுகளோடு பிறக்கின்றார்கள். அதில் அவர்களது பங்கிற்கு எந்தத் தவறும் இல்லை. மருத்துவ விஞ்ஞானம் அவற்றையும் சரி செய்யக் கூடிய அளவுக்கு வளர்ந்திருக்கிறது. ஆனால் பழக்க வழக்கங்களால் தாமே தமக்குத் தீங்கினைத் தேடிக் கொள்ளுபவர்கள் உரிய நேரத்துள் கவனிக்கப்படாவிட்டால் பெரும் பாதிப்புக்களுக்கு உள்ளாக நேர்கின்றது. அந்த நிலைக்குப் போகாத அளவிற்கு அவர்களைக் காப்பாற்ற வேண்டியது பெற்றோரதும் சமூகத்தினதும் கடமையாகும்.

எமது வாழ்க்கை முறை உடல் உள நலன்களைப் பாதிக்கும் விதங்களில் மாறிப்போய்விட்டன. உடல் உழைப்பும் அன்றாட வாழ்க்கையுடன் ஒன்றித்த உடற் பயிற்சிகளும் இன்று இல்லாமல் ஆகிவிட்டன. உடல் குனிந்து வளைந்து செய்யும் வீட்டு வேலைகள் பலவும் விரல் நுனிக்குள் வந்துவிட்டன. உடலுக்குப் பயிற்சி தரும் விளையாட்டுக்கள் குறைந்து சொகுசு இருக்கைகளில் வேர்கொண்டு நொறுக்குத் தீனிகளை வாய்க்குள் எறிந்தபடி கணனியில் விளையாடுதல் இளையோர் மத்தியில் அதிகரித்துள்ளது.

தொடர்ந்து பார்ப்பதன் மூலம் கிலுசு கெட்ட தொடர் நாடகங்களின் கதாபாத்திரங்களாகவே சில பெரியோர் மாறிவிட்டனர். உணவுப் பழக்கங்களில் கெடுதி தரும் வேக உணவுகள் (Fast Food) நிறைந்து விட்டன. எப்போதும் கிணுகிணுக்கும் கைத் தொலைபேசிகளும், மடியில் செல்லப்பிள்ளையாகிவிட்ட லப்ரொப், ஐப்பாட் சின்னத்திரைகளும் கண்களையும் காதுகளையும் முற்றாக ஆக்கிரமித்து விட்டன.

குழந்தைகளும் பெரியவர்களும் இவற்றிற்கு அடிமைகள் ஆகி விட்டனர். கூனல் முதுகினராக பலர். பாரதி விரும்பியது போன்ற நிமிர்ந்த நெஞ்சும் நேர்கொண்ட பார்வையும் நிமிர்ந்த ஞானச் செருக்கும் இன்று இல்லாமல் போய்விட்டன.

குடும்ப உறவுகளின் பிணைப்புக்களும் ஊடாட்டங்களும் குறைந்து விட்டன. ஒருவருக்கு ஒருவர் கலந்து பேசுவதும் தம்மைச் சேர்ந் தோரின் உடல் உள நலன்களிலான அக்கறைகளும் குறைந்து போய் விட்டன. 'தனிப்பட்ட விடயம்' என்று பல நல்ல விடயங்கள் கூட குடும்பங்களில் தலையிடாக் கொள்கைகள் ஆகிவிட்டன. ஆரோக்கியமான வாழ்வுக்கு இந்த வாழ்க்கை முறையில் அதிக மாற்றங்கள் தேவை.

இன்னும் ஒரு பக்கம் நோயின் தன்மையைக் குறைத்து மதிப்பிடுவதால் ஆபத்தான கட்டங்களுக்குச் செல்ல நேர்கிறது. படித்தவர்கள் படிக்காதவர்கள் என்பதிலும் பொது அறிவோடு நிலைமையை மதிப்பீடு செய்து காலம் தாழ்த்தாது நடவடிக்கைகள் எடுக்காமையாலும் பலரது உயிர் பறிபோகக் காரணமாய் இருந்திருக்கிறது.

உலக சுகாதார நிறுவனத்தின் (WHO) 2020 அறிக்கையில் இதய நோய்களினால் இறப்போரின் எண்ணிக்கை ஏனையோரை விட தென்னாசிய மக்கள் 40 வீதம் அதிகம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. உலகின் 25 வீத சனத்தொகையைக் கொண்ட தென்னாசிய மக்கள் இதய நோய்களிலான இறப்பில் 50 வீதத்தைக் கொண்டிருக்கிறார்கள்.

தென்னாசிய மக்களின் இதயக் குழாய்களின் அளவு பொதுவில் ஒடுங்கியதாக இருப்பதாகவும் அதனால் இதயப் பாதிப்புக்கு உள்ளாகும் விகிதம் தென்னாசிய மக்களுக்கு அதிகம் என்பதையும் இங்கு நாம் கவனிக்க வேண்டும். இயற்கையான உடல் அமைப்பு என்ற அடிப்படையிலும் நாம் எமது இதயங்களைப் பாதுகாப்பதில் அதிக அக்கறை கொள்ள வேண்டும்.

நெஞ்சிலே எரிவு பிரச்சினை, நெஞ்சுக் குத்து என்று வந்தபோது அதனைச் சாதாரணமாக எடுத்துக் கொண்டு இஞ்சி மிளகு என்று கசாயங்களைக் காய்ச்சிக் கொடுத்து உரிய வேளைக்குள் மருத்துவ நிலையங்களுக்குப் போகாமல் தாமதம் செய்ததமையால் மாரடைப்பு வந்து உயிர் இழந்த சம்பவங்கள் எமக்குத் தெரிய பல நடந்துள்ளன.

சந்தேகம் இருந்தாலும் தாமதமின்றி அம்புலன்சை அழைப்பது முக்கியம். இதய நோயைப் பொறுத்தவரை காலம் கடத்துவது மிகவும் ஆபத்தானது. இதை அனைவரும் புரிந்து கொள்ளுவது அவசியம்.

இதயமே, நீ நோய்வாய்ப்பட்டபோது ICD உன்னைப் பல தடவைகள் காப்பாற்றி வந்திருக்கிறது. ஆனால் உன்னைக் காப்பாற்றிவரும் உன் தோழனுக்கே பிரச்சினைகள் வந்துவிட்டால் நீ என்ன செய்வாய்?

*(தொடரும்..)*



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோவில்கள் 1014



## தாழையம்பதி ஸ்ரீ துர்க்காதேவி ஆலயம்

### சாவகச்சேரி

"மின்னாயிரம் ஒரு மெய்வடிவாகி விளங்குகின்ற
துன்னாள் அகமகிழ் ஆனந்தவல்லி அருமறைக்கு
முன்னாய் நடுவெங்குமாய் முடிவாய முதல்விதன்னை
ஊன்னாது ஒழியினும் உன்னினும் வேண்டுவது ஒன்றில்லையே."

தாழையம்பதி துர்க்கையம்மன் ஆலயம் படிமுறை வளர்ச்சியாக வளர்ந்து அழகுற விளங்க, இவ்வூர் மக்களும் அன்னைமேல் ஆராத பக்திகொண்ட அடியார்களும் உதவியுள்ளனர். இவ்வாலயத்தின் முதலாவது கும்பாபிஷேகம், 1956 ஆம் ஆண்டிலும், 1981 ஆம் ஆண்டிலும் மிகச் சிறப்பாகத் திருப்பணிவேலைகள் நடைபெற்றுக் கும்பாபிஷேகம் நடைபெற்றது. அவ்வாறே மேலும் பல திருப்பணிகள் நிறைவேற்றப்பட்டு 1998 ஆம் ஆண்டில் மகாகும்பாபிஷேகம் சிறப்பாக நடந்தேறியது.

இவ்வாலயத்தில் நடைபெறும் பூசைகளுள் செவ்வாய்க்கிழமைப்பூசை, இராகுகாலப் பூசை, பூரணை விசேட பூசை ஆகியவை சிறப்புடன் நடைபெறும் பூசைகளாகும். துர்க்கை அம்மன் ஆலயங்களில் செவ்வாய்கிழமைப்பூசைகள் மிக விமரிசையாகப் பக்திபூர்வமாகக் கடைப்பிடிக்கப்படும். பெரும்பாலும் பெண்களே இப்பூசைகளில் கலந்துகொள்வதுண்டு. எல்லாப் பெருமைகளும் நிறைந்த துர்க்காதேவியைப் பூசிப்பதற்கு ஏற்ற நாட்கள் பல இருப்பினும், அன்னைக்கு உகந்ததாக விளங்குவது மங்கள வாரம். வாரங்களிலே சிறந்தது மங்களவாரம். மங்களவாரம் என்ற சொல் மங்களன் ஆன செவ்வாய்க்கிரகத்திற்கு உரிய நாளாகும். மங்களவாரம் எல்லா மங்களங்களுக்கும் இருப்பிடமாகக் காணப்படுகின்றது. ஏனைய வாரங்களிலே கிடைக்காத பலன்களை மங்களவாரப்பூசைமூலம் பெறமுடியுமென ஆன்றோர் கூறியுள்ளனர்.

மங்கள சண்டிகைபூசை, மங்களகிரகபூசை, மங்களாம்பிகைபூசை, மங்களதுர்க்காபூசை போன்றவைகளும், மனச்சாந்திக்கும், மகிழ்விற்கும் உரிய பூசைகளாகக் காணப்படுகின்றன. விவாகமாகவேண்டிய கன்னிப்பெண்கள் இந்த மங்கள வாரத்திலே செய்ய வேண்டிய பூசைகள்பற்றி பல நூல்களிலே குறிப்பிடப்பட்டுள்ளது. மங்களவாரத்திலே மாலைநேரத்தில் விளக்கேற்றி வழிபாடு செய்வது பல நன்மைகளைக் கொடுக்குமென்பர்.

அன்னை துர்க்காதேவியை நவக்கிரகங்களிலே மிக வலிமை பொருந்திய ராகுபகவான் பூசித்துள்ளார். துர்க்காதேவிக்குப் பூசை செய்தபின் இவர் மகிழ்ச்சியான முகத்துடன், மனநிறைவுடன் விளங்குவதாகக் கூறுவர். அதனால்தான் மங்களவார ராகுகாலத்தில் துர்க்காவைப் பூசைசெய்து வணங்கி வழிபடுவது சகல நன்மையையும் அளிக்குமெனச் சித்தர்கள் கூறியுள்ளார்கள்.

இத்தகைய சிறப்பான விரதங்கள் தாழையம்பதி ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத்திலும் மிகச் சிறப்பாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாலயத்திலே 1956 ஆம் ஆண்டு முதல் நடைபெற்று வந்த அலங்கார உற்சவம் 1989 ஆம் ஆண்டு முதல் மகோற்சவமாகக் கொண்டாடப்படுகின்றது. ஆடிஅமாவாசையன்று தீர்த்தம் நடைபெறும்வகையில் பத்துத் தினங்கள் மகோற்சவம் சிறப்பாகக் கொண்டாடப்படுகின்றது. அம்பிகைக்கேயுரிய ஆடிப்பூரத் திருநாளில் 108 தீபபூசையும் மிகச் சிறப்பாக நடைபெறும்.

துர்க்கை என்ற பெயர் வந்ததற்குக் காரணம் அவள் மற்வர்களைத் துன்பத்திலிருந்து காப்பாற்றுகின்றாள் என்பதாலேயே என மகாபாரதம் குறிப்பிடுகின்றது. தர்மபுத்திரர் தனது தவறுக்காகத் துர்க்காதேவியைப் பூசித்தார். எல்லாக் காலங்களையும் உணர்ந்தவரான கிருஷ்ணபரமாத்மா அர்ச்சுனனைப் பார்த்து, அருச்சுனா துர்க்காதேவியைத் தோத்திரம் செய், அவள் ஒருத்தியால்தான் எதிரிகளை வென்று நீ ஜெயத்தை அடைய முடியும் என்று கூறினார். அவ்வாறே அர்ச்சுனனும் காண்டீபத்தையே துர்க்கையாகப் பூசித்துப் பாவனை செய்து வழிபட்டமையால், காண்டீபத்திலேயே துர்க்கை எழுந்தருளி அருள் கொடுத்தாள். அந்த அன்னையின் பேரருளால் அர்ச்சுனனும் வெற்றி பெற்றான்.

திருமூலர் துர்க்கையை ஆராதித்தும் வழிபட்டும் அதனால் பெற்ற பேற்றைக் கூறுகையில்,

"நேரிழை யாவள் நிரதி சயானந்தப்
பேருடையாளென் பிறப்பறுத் தாண்டவன்
சீருடையாள் சிவனாவடு தண்டுறை
சீருடையாள் பதஞ் சேர்ந்திருந்தேனே"

எனக் கூறியுள்ளார். இத்தகைய அருள்மிக்க அன்னை தாழையம்பதி ஸ்ரீ துர்க்காகோவிலிலும் எழுந்தருளி அருள்பாலிக்கின்றாள்.

வளரும்...

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?
0%வட்டி
அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்
No Need to file for Bankruptcy
One Small Monthly Payment for all your Bills


வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?
நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?
நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?
உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?
உங்ளது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?
நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்
உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.
நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.
நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.
நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்
நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.
நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.
தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்
உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்
416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York

தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

# இவ்வார ராசிபலன்

## 09-09-2022 வெள்ளி தொடக்கம் 15-09-2022 வியாழன் வரையும்




**மேஷம்:** பிள்ளைகளால் பெருமை சேரும் வாரம். நன்மைகள் உண்டாகும். பிறர்க்கு உதவி செய்வதால் நன்மை உண்டாகும். வருமானம் கைகூடி வரும். பாதகம் விலகும். புதிய வாய்ப்பு வரும். கர்ம வினைகள் அகலும். பணவரவு உயரும். பொருளா-தாரம் உயரும். பொன், பொருள் சேரும். மருத்துவச் செலவு உண்டு. வாகனச் செலவு ஏற்படும். மங்களச் செய்தி வரும். முயற்சி பலன் தரும். சமுதாய விழிப்புணர்வோடு செயல்படுவது நல்லது. அடுத்தவர் தலையீடு தவிர்க்கவும். குடும்ப வளம் கூடும். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். ஆடம்பரச் செலவு அதிகரிக்கும். அரசு வகையில் அனுகூலம் உண்டு. பழைய பகை மாறும். தன வரவுகள் தடைப்படும். திடீர் செலவுகள் ஏற்படும். புதுமுயற்சியினை தள்ளி வைக்கவும். காலம் தாழ்த்துவது நல்லதல்ல. கவன-முடன் இருக்க வேண்டும். எதிர்பார்த்த தொகை தாமதமாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். தொல்லைத் தருகிறவர்கள் விலகி செல்வர். வயிறு உபாதை வந்து சேரும். அணிகலன் ஆர்வம் அதிகரிக்கும். திருடு போன பொருள் மீண்டும் கிடைக்கும் வாய்ப்பு உள்ளது. கௌரவம் அதிகரிக்கும். அன்றாட நாட்கள் மன மகிழ்ச்சியைத் தரும். மனதில் அளவில்லா சந்தோஷம் உண்டாகும். மனஅமைதி நிலவும். பங்குச்சந்தை தொழில் பணம் தரும். புதிய எண்ணங்கள் அதிகமாகும். உணவுத்தொழில் உயர்வு தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். உற்சாகம் கூடும். மன தைரியம் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாளிகாம்பாள், அதிர்ஷ்ட எண்: 2,7,9,1
அதிர்ஷ்ட நிறம்: ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: E,J




**ரிஷபம்:** சிறப்புக்கள் சேரும் வாரம். சுப விரயம் ஏற்படும். நன்மைகள் நாடி வரும். அற்புதமான நாளாக அமையும். குடும்ப கௌரவம் உயரும். பயணத்தில் பலன் உண்டு. சந்தோஷம் அதிகமாகும். பிள்ளைகளால் பெருமை சேரும். டிரான்ஸ்போர்ட் தொழில் சிறந்த லாபம் தரும். சிந்தனைகள் மேலோங்கும். சீரான வாழ்வமையும். வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். ஏற்றமான காலம். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. மகான்களின் சந்திப்பு கிட்டும். மதிப்பு உயரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். பணப்பற்றாக்குறை நீங்கும். நட்பு பெருகும். வராத கடன் வந்து சேரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். வேலைப் பளு அதிகரிக்கும். பூமியால் லாபம் உண்டு. நன்மைகள் நாடி வரும். பயணத்தால் பலன் உண்டு. சந்தோஷம் அதிகமாகும். பிள்ளைகளால் பெருமை சேரும். சீரான வாழ்வமையும். வியாபாரம் விருத்தியாகும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். பிள்ளைகளின் கல்வி மேம்படும். மனவேதனை குறையும். உடல் ஆரோக்கியம் குறையும். வசதி கூடும். லாபம் திருப்தி தரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பொருளாதாரம் உயரும். வாழ்வு நிலை உயரும். கலகலப்பான செய்திகள் வந்து சேரும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர். மாணவர் திறமை பளிச்சிடும். திறமைகள் அதிகமாகும். பல்வலி வந்து போகும். இல்லம் தேடி வாய்ப்பு வரும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். வியாபாரம் விருத்தியாகும். பெரியோர்களின் பாராட்டு கிட்டும்.

வழிபட வேண்டிய தெய்வம்: நடராஜப் பெருமாள், அதிர்ஷ்ட எண்: 6,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,D




**மிதுனம்:** விறுவிறுப்பாக செயல்படும் வாரம். கொள்கையில் பிடிப்பு ஏற்படும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. பெற்றோர்களின் அன்பு அதிகரிக்கும். குடும்பத்தில் குதூகலம் ஏற்படும். தொழில் ரகசியம் காப்பாற்றப்படும். தாய்வழி உறவில் கவனம் தேவை. சுதந்திரமாக செயல்படுவீர்கள். மாணவர்களுக்கு அக்கறை கூடும். மாற்று யோசனை பயன் தரும். வாகன மாற்றம் உண்டு. வருமானம் திருப்தி தரும். வியாபாரம் விருத்தியாகும். காதலர்களுக்கு கையிருப்பு கரையும். சகோதர வழியில் சந்தோஷம் கூடும். உறவினரால் உதவிகள் கிட்டும். எண்ணங்கள் வண்ணமயமாகும். வம்பு வழக்குகள் தீரும். யோக பலன் கூடும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். பாக்கிகள் வசூலாகும். நீண்ட நாள் ஆசை நிறைவேறும். மாணவர்களுக்கு எச்சரிக்கை தேவை. வீண் வம்பு அகலும். திறமைகள் வெளிப்படும். மனநெருக்கடிகள் தீரும். பணப்புழக்கம் அதிகரிக்கும். முதலீடுகளால் முன்னேற்றம் உண்டு. பால்ய நண்பர் சந்திப்பு கிட்டும். பயணம் வெற்றி தரும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். பணமும், பாராட்டும் சேரும். மங்கள நிகழ்ச்சிகள் நடைபெறும். பிரச்சனைகள் அகலும். திருமணப் பேச்சு முடிவிற்கு வரும். கடன் விஷயத்தில் கவனம் தேவை. மருத்துவச் செலவு குறையும். புதிய ஒப்பந்தம் கையெழுத்தாகும். விரோதங்கள் விலகும். சூழ்ச்சிகளில் இருந்து விடுபடுவீர்கள். ஆபரணச் சேர்க்கை உண்டு. இரும்புத்தொழில் ஏற்றம் தரும். அன்னிய தேசப்பயணம் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: காவல்தெய்வம், அதிர்ஷ்ட எண்: 4,9,1,5
அதிர்ஷ்ட நிறம்: முட்செவ்வந்தி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,I




**கடகம்:** பொன்னான வாய்ப்புக்கள் கிடைக்கும் வாரம். சூழ்நிலைகள் சாதகமாகும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். தெய்வ நம்பிக்கை அதிகரிக்கும். வாழ்வில் வசந்தம் உண்டு. கணவன், மனைவி அன்யோன்யம் குறையும். காரிய வெற்றி தரும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். திடீர் மாற்றங்கள் நிகழும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். பழையக் கடன் வசூலாகும். உத்தியோக உயர்வு உண்டு. ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. மதிநுட்பம் மாபெரும் வெற்றி தரும். நட்பு வட்டம் விரிவடையும். கூட்டுத்தொழிலில் குழப்பங்கள் நீங்கும். பால் தானம் செய்வதில் பாவங்கள் விலகும். கையிருப்பு கரையும். கனவுகள் பலிதமாகும். கௌரவம் உயரும். வாகனத்தால் செலவு உண்டு. பணி செய்யும் இடத்தில் பாராட்டு உயரும். எதிரிகளால் ஏமாற்றம் அடைவீர்கள். அலைச்சல் அதிகரிக்கும். சுறுசுறுப்பு அதிகரிக்கும். வியாபாரம் சுமாராக இருக்கும். புதிய தொழில் முயற்சி பலிதமாகும். செயல்களில் நிதானம் தேவை. வரவுக்கு மீறிய செலவு ஏற்படும். வெளியூர் பயணம் வெகுமானம் தரும். பிரச்சனைகள் முடிவுக்கு வரும். வழக்குகளில் திருப்பம் ஏற்படும். குடும்பச் சுமை கூடும். ஆபரண தொழில் கவனம் தேவை. பெற்றோர் நலனில் அக்கறை தேவை. வாயில் தேடி வாய்ப்பு வரும். நட்பு வட்டம் விரிவடையும். அன்னதானம் ஆரோக்கியம் தரும். புதிய சிந்தனை உருவாகும். முன்கோபத்தை குறைத்துக் கொள்ள வேண்டும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். தொழில் லாபம் பெருகும். பழைய நண்பரை சந்திக்கும் வாய்ப்பு வரும். காரியம் கைகூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி, அதிர்ஷ்ட எண்: 3,9,5,1
அதிர்ஷ்ட நிறம்: அரக்கு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,E


ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
Dr. K. RAM.Ph.D (USA)
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**சிம்மம்:** திருப்திகள் பெருகும் வாரம். அரசு வாய்ப்பு தடைப்படும். ஆடை, அணிகலன் சேரும். சகோதர உதவி கிட்டும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஏற்றுமதி தொழிலில் கவனம் தேவை. பொறியியல் துறை லாபம் தரும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். திருமண வாய்ப்புக்கள் கூடும். மன அமைதி குறையும். கடவுள் பிரார்த்தனை கை கொடுக்கும். பொறாமைகள் விலகும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். உத்தியோகத்தில் பாராட்டுக் கிட்டும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். பிள்ளைகளின் கல்விச் செலவு அதிகரிக்கும். உறவினர் வருகை உற்சாகம் கூடும். தொல்லைகள் ஒழியும். நினைத்த காரியம் நிறைவேறும். கன்னிப் பெண்களுக்கு சுபச்செய்தி வரும். வாழ்த்துக்கள் வந்து சேரும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். உடல்நலம் திருப்தி தரும். குடும்ப ஒற்றுமை பலப்படும். உதவிகள் கிடைக்கும். பொருளாதாரம் உயரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்ப்புக்கள் குறையும். புத்தி சாதுர்யம் கூடும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிக்கொள்ளும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. செயல்பாட்டில் தீவிரம் கூடும். அலைச்சல் அதிகரிக்கும். குடும்பத்தில் குழப்பங்கள் நீங்கும். பொருளாதார நிலை உயரும். தொட்ட காரியம் ஜெயமாகும். நீண்ட நாளைய நோய் விலகும். பணவரவு திருப்தி தரும். மனமகிழ்ச்சி கூடும். இல்லத்தில் அமைதி பெருகும். சுமூகமான சூழ்நிலை காணப்படும். மனக்குழப்பங்கள் தீரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ காளி துர்க்காதேவி, அதிர்ஷ்ட எண்: 6,8,1,5
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,U




**கன்னி:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். அற்புதமான காலமாக அமையும். எதார்த்தமாக செயல்படவும். கலகலப்பு நிறைந்திருக்கும். கலைத்தொழிலில் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பாதகமான சூழ்நிலைகள் அகலும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். நல்லோர்களின் வாழ்த்து அதிகரிக்கும். குதூகலம் தாண்டவமாடும். புதிய முதலீடு லாபம் தரும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவும் திருப்தி தரும். காரிய தாமதம் ஏற்படும். தாய் வழி உறவில் கவனம் தேவை. அணிகலன் சேரும். இரும்பு தொழில் ஏற்றம் தரும். விளையாட்டுத் துறை லாபம் தரும். புதிய முதலீடு உருவாகும். கற்பனை வளம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன்தொல்லை தீரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளிகளின் நிலை மாறும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். முத்தாய்ப்பான முன்னேற்றம் உண்டு. பொறுமையைக் கையாள வேண்டும். டிரான்ஸ்போர்ட் தொழில் லாபம் தரும். தான தர்மங்கள் பலன் தரும். பெற்றவர்கள் பாராட்டு கிடைக்கும். வினோதமான எண்ணம் விலகும். புதிய முயற்சிகள் பலன் தரும். பிள்ளைகளால் தொல்லை அதிகரிக்கும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். பட்டம் பதவி தேடி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீபால முனீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 9,1,5,7
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,J




**துலாம்:** பெண்களால் ஆதாயம் கிடைக்கும் வாரம். நண்பரால் பணவரவு உண்டு. புதிய வாய்ப்புக்கள் வரும். பெரியோர்களின் ஆலோசனை பலன் தரும். நட்பு பெருகும். ஆண்களின் அதிகாரம் உயரும். ஆடம்பரத்தை விரும்புவீர்கள். பணவரவு உண்டு. வராத கடன் வந்து சேரும். நன்மைகள் நாடி வரும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மதிப்பு உயரும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. கணவன், மனைவி கௌரவம் உயரும். சுறுசுறுப்பு அதிகமாகும். கமிஷன் தொழில் லாபம் தரும். கட்டிடத் தொழில் முன்னேற்றம் தரும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். புதிய நட்பு உருவாகும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும். திடீர் லாபம் உண்டு. திருமண வாய்ப்பு கூடி வரும். பேச்சில் நிதானம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். உத்தியோக ஈடுபாடு அதிகரிக்கும். சோம்பல் அதிகரிக்கும். பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். ஆபரணச் சேர்க்கை ஏற்படும். மனோ தைரியம் அதிகரிக்கும். பூமியால் லாபம் உண்டு. பதவி வாய்ப்பு வரும். பாதகம் விலகும். பங்குத்தொழில் கவனம் தேவை. கல்வியில் ஆர்வம் கூடும். புதிய நட்பு உருவாகும். பழையக் கடன் தீரும். குதூகலம் சேரும். புத்திரர்களால் மேன்மை உண்டு. பணிவான பேச்சுக்கள் தேவை. விவசாயம் பலம் தரும். அரசு வழி ஆதாயம் உண்டு. குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். நண்பர்களால் உதவி உண்டு. சுபச்செய்திகள் அதிகரிக்கும். கடன் பாக்கிகள் வசூலாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீஎல்லையப்பன், அதிர்ஷ்ட எண்: 4,3,9,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,J




**விருச்சிகம்:** வெகுமானம் அதிகரிக்கும் வாரம். புதிய எண்ணங்கள் உருவாகும். தகுதிகள் உயரும். கமிஷன் தொழில் லாபம் தரும். விருந்தினர் வருகை உண்டு. பயணம் தவிர்ப்பது நல்லது. பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. ஆபரணச்சேர்க்கை உண்டு. கலைத்துறையில் திருப்பம் உண்டு. மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. கடன் சுமை குறையும். காரியத்தடை ஏற்படும். உறவினர்களால் நன்மையுண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். வாகனச் செலவு ஏற்படும். பயணம் அனுகூலம் தரும். பழையக் கடன் வசூலாகும். போட்டிகள் உருவாகி மறையும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. தனலாபம் கூடும். வறுமைகள் ஒழியும். விவேகம் அதிகரிக்கும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கமிஷன் தொழில் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டு. வரவுகள் திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். உத்தியோக உயர்வு கிட்டும். சச்சரவுகள் அகலும். குடும்ப கௌரவம் உயரும். சந்தோஷம் அலைமோதும். மறைமுக எதிர்ப்பு விலகும். உறவினர் ஒற்றுமை ஏற்படும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். தனவரவு உண்டு. திறமையால் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். சான்றோர்களின் சந்திப்பு கிட்டும். விளையாட்டுத் துறையில் வெற்றி தரும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். இனிப்பான செய்திகள் வரும். பயணம் அனுகூலம் தரும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். எதிரிகள் பலம் குறையும். புதிய தொழில் வாய்ப்பு உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீசண்டிகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 9,5,7,2
அதிர்ஷ்ட நிறம்: நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,P

*(தொடர்ச்சி 25 பக்கம்)*

# ஜீவன் முக்தி 592

## தப்பிய வேகத்தில் குருவைச் சந்தித்தால்...

“அனவி மனைவி மக்கள் அட்டவீ டணைகண் மூன்றும் கானவர் வலையிற் பட்டுக் கைத்தப்பி யோடும் மான்போல் போனவன் வெறுங் கையோடே போகாத வண்ணஞ் சென்று ஞானசற் குருவைக் கண்டு நன்றாக வணங்கி னானே”.

எத்தனைத் தரம் சொன்னாலும் இந்தப் பாடலுடைய சத்தியம் அவ்வளவு அழமானது.

“வேட்டுவனுடைய வலையிலே சிக்கிய மான் ஒருவேளை அந்த வலையிலிருந்து தப்பிவிட்டால் அந்தப் பொறியிலிருந்து தப்பி விட்டால் என்ன ஓட்டம் ஓடுமோ அந்த வேகத்தில் சத்குருவைக் கண்டு வணங்கி நின்றான் ’ என்று சொல்கிறது.

இந்த வேட்டுவர்கள் மானுக்கு எப்படி வலை விரிப்பார்கள் என்றால் ஒரு நான்கைந்து கயிறுகளில் சுருக்குமுடி போட்டு அந்தக் கயிற்றை நாலாபுறத்திலும் இழுத்துக் கட்டிவிட்டு கீழே பள்ளம் தோண்டிவிட்டு அதன்மீது இலைகளையும் தழைகளையும் போட்டுவிடுவார்கள்.

இந்த மான் அதைக் கடந்து நடந்து போகும் பொழுது அந்த இலை தழையைப் பார்த்து அதைத் தரை என்று நினைத்து அதன்மீது காலை வைத்தவுடனே அதன் கீழேபள்ளம் இருப்பதாலே அந்த மானின் எடையால் இயற்கையாகவே அது கீழே போகும்.

மானினுடைய எடையினாலே தானாகவே இந்தக் கயிறு சுருக்குப் போட்டுக் கொள்ளும். அதன் கால்கள் அந்தச் சுருக்குக் கயிற்றிலே சிக்கிக் கொள்ளும்.

இதுதான் வேடர்கள் வலை. ஒருவேளை அந்தமாதிரி மாட்டிய மான் எப்படியாவது தம்முடைய புத்திசாலித்தனத்தினாலே தப்பித்து விட்டால் என்ன செய்யும்? பின்னங்கால் பிடரியில்பட தப்பித்து ஓடும்.

வேடர்களின் வலையில் சிக்கிய மான் நினைத்தால் அதனால் தப்பித்து விட முடியும்.

ஒன்றுமில்லை அதனுடைய மொத்த எடையையும் அந்த வலை மேல் அழுத்தாமல் மற்ற இரண்டு மூன்று கால்களாலே தரையை அழுத்திக்கொண்டு ஒருகாலை மேலே தூக்கியது என்றால் அந்தச் சுருக்குத் தானாகவே கழலும். தப்பித்துப் போய்விடலாம்.

இப்படித்தான் நம் வாழ்வில் சந்திக்கும் எல்லா வலைகளும். எல்லா வலையுமே நாம் ஒத்துழைத்தால் மட்டும்தான் நம்மைப் பந்தப்படுத்தும். அது பாச வலையாக இருந்தாலும் சரி மோச வலையாக இருந்தாலும் சரி. நாம் ஒத்துழைக்காதவரை எந்த ஒரு வலையுமே நம்மைப் பந்தப்படுத்தாது.

நான் பார்த்திருக்கிறேன். திருவண்ணாமலையில் மலையிலிருந்து நிறையக் குரங்குகள் இறங்கிக் கீழே கோயிலுக்குள் வந்துவிடும்.

கோயிலுக்குள்ளும் ஊருக்குள்ளும் வந்துவிடும். மிகவும் அட்டகாசம் செய்யும். இந்தக் குரங்குகளைப் பிடிப்பதற்கு ஒரு வித்தியாசமான வலை வைப்பார்கள். அதற்காகப் பெரிய கூண்டெல்லாம் செய்ய மாட்டார்கள்.

ஒரு சின்ன சாதாரண டம்ளர் எடுத்து அதனுடைய கீழ்ப் பகுதியை உடைத்துவிட்டு அந்த டம்ளரைத் தரையில் வைத்துவிட்டு டம்ளருக்கு இன்னொரு பக்கத்தில் ஸ்வீட்டை வைத்துவிடுவார்கள். அந்த டம்ளரை அருகேயிருக்கும் கல்லிலோ இந்தக் குரங்கு டம்ளர் வழியாகக் கையைவிட்டு டம்ளருக்கு அடுத்த பக்கம் இருககும் அந்த ஸ்வீட்டைப் பிடித்து எடுத்துக்கொள்ள முயற்சிக்கும். ஸ்வீட்டைப் பிடித்த உடனே அந்த ஸ்வீட்டைக் கையில் மறைத்துக்கொண்டு டம்ளர் வழியாகவே கையைத் திரும்ப எடுக்க முயற்சி செய்யும்.

எவ்வளவு முயற்சி செய்தாலும் அதனால் எடுக்க முடியாது. காரணம் அந்த டம்ளரைக் கயிற்றில் கட்டி வைத்திருப்பார்கள். அவ்வளவுதான் அந்தக் குரங்கால் வேறு ஒன்றும் செய்ய முடியாது.

பாவம் அந்தப் பைத்தியக்காரக் குரங்குக்குத் தெரியாது ... அந்த ஸ்வீட்டை விட்டால் போதும் அந்த விநாடியே கையை எடுத்து விடலாம் என்று!

ஆனால் அது அந்த ஸ்வீட்டைவிடவும் விடாது் தப்பிக்கவும் தப்பிக்காது.

“இந்த ஸ்வீட்டையும் குரங்கு விடாது. கையையும் அதனால் எடுக்க முடியாது. அப்படியே நான்கு மணிநேரம் போராடிக் கொண்டிருக்கும். மெதுவாக அந்த வேடர்கள் வந்து அழகாக அந்தக் குரங்கை பிடித்துக் கூண்டில் வைத்துக்கொண்டு போய்விடுவார்கள்.

ஸ்வீட்டை எடுக்க டம்ளருக்குள் கையை விடும்போது எளிதாக கை நுழைந்து விடும்.

ஆனால் ஸ்வீட்டை பிடித்துக் கொண்டபிறகு குரங்கால் கையை வெளியில் எடுக்க முடியாது. கை வெளியே வராது. சிக்கிக் கொள்ளும்.

குரங்கால் ஸ்வீட்டை சாப்பிடவும் முடியாது. தப்பிக்கவும் முடியாது. ஏனென்றால் கை சிக்கிக் கொண்டிருக்கிறது. ஸ்வீட்டை சாப்பிடவும் முடியாமல் தப்பித்துப் போகவும் முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும்.

“அப்பா இந்த விநாடி ஆசை அச்சத்தை விட்டோமானால் போதும் ஸ்வீட் எனும் அந்த ஆசையை விட்டால் போச்சு சுதந்திரமாகி விடலாம்” என்று அந்த அப்பாவி குரங்குக்குத் தெரியாது. அந்தக் கையில் பிடித்து இருக்கும் ஸ்வீட்டை விட்டால் போதும். கை எவ்வளவு எளிதாக உள்ளே சென்றதோ அதே மாதிரி அவ்வளவு எளிதாக வெளியே வந்துவிடும்.

ஆனால் குரங்குக்கு அந்த அளவுக்குப் புத்திசாலித்தனம் இல்லை.

நாம் எல்லோரும் அப்படித்தான் ஆசை அச்சத்திடம் சிக்கி இருக்கிறோம். எங்கெங்கே யார் யார் கையைக் காலை விட்டு விட்டு மாட்டிக்கொண்டு இருக்கிறீர்களோ எல்லோரும் தெளிவாகத் தெரிந்துகொள்ளுங்கள்... நீங்கள் எல்லோரும் கையை இறுக்கமாக மடக்கிப் பிடித்துக்கொண்டு இருக்கிறீர்கள். தப்பிப்பதற்குப் பதிலாக மேலும் மேலும் இறுக்கமாகப் பிடித்துக்கொண்டு வதைபடுகிறீர்கள்.

“என்ன செய்து கொண்டிருக்கிறோம்?” என்பதை ஆராய்ந்து பாருங்கள். கையை இறுக்கமாக மடக்கிப் பிடித்திருப்பதைப் போல எதை எதையோ இறுக்கிப் பிடித்துக்கொண்டு அதிலிருந்து விடுபட வழி தெரியாமல் மாட்டிக் கொண்டிருக்கிறோம். கையை மட்டும் அல்ல காலையும்கூட இதே மாதிரிதான் சிக்கவிட்டுக்கொண்டு இருக்கிறோம். ஆழ்ந்து சிந்தித்தால் அதைத்தான் பெரியவர்கள் கால்கட்டு என்று சொன்னார்களோ!? என்ற தெளிவு பிறக்கும். சில நேரத்தில் கையைக் கண்ட இடத்தில் விட்டு இறுக்கமாகப் பிடித்துக் கொண்டிருப்போம். அதாவது தொழில் ரீதியான சிக்கல் சில நேரத்தில் காலைக் கண்ட இடத்தில் விட்டு இறுக்கமாகப் பிடித்துக் கொண்டிருப்போம். தாவது வாழ்க்கை ரீதியான சிக்கல். சில நேரத்தில் தலையை எங்காவது விட்டு இறுக்கமாகப் பிடித்துக் கொண்டிருப்போம். அதாவது மன ரீதியானச் சிககல்.

எல்லோருமே எங்கேயாவது எதையாவது இறுக்கமாகப் பிடித்துக்கொண்டு இருப்போம். எதிலாவது மாட்டிக்கொண்டு இருப்போம்.

ஒருவேளை அந்த மாட்டிய மான் தப்பித்தால் என்ன வேகத்தில் ஓடுமோ அந்த வேகத்தில் ஞான சத்குருவிடம் வருகிறவர்களுக்குத்தான் சத்தியம் புரிபடும் என்று அந்தப் பாடலில் சொல்கிறார்.

டம்ளரிலிருந்து குரங்கு தப்பித்தாலோ வேடர்களிடமிருந்து மான் தப்பித்தாலோ எப்படி அது பின்னங்கால் பிடரியில் பட ஓடுமோ அதுபோல் வாழ்க்கையில் எக்குதப்பாகக் கையைக் காலை விட்டுவிட்டுச் சிக்கி தவித்துக் கொண்டிருக்கும் மனிதன் சத்குருவைச் சந்திக்க வாய்ப்பு கிடைத்தால் பின்னங்கால் பிடரியில் படும் வேகத்தில் அல்ல முன்னங்கால் நெற்றியில் படும் வேகத்தில் ஓடிவருவான். இளைப்பாறுவான் சாந்தமடைவான்.

இராமர் அப்படித்தான் வாழ்க்கை என்கிற துக்கத்தில் மாட்டி அதிலிருந்து தப்பித்து அனுமனிடம் வருகிறார்.

அனுமன் மெதுவாகக் கருணையோடு எல்லாவற்றையும் புரிய வைத்தார்.

*(தொடரும்...)*


# இவ்வார ராசிபலன்

*(24ம் பக்கத் தொடர்ச்சி)*




**தனுசு:** எதிர்ப்புக்களால் சிறப்பு சேரும் வாரம். பயணம் பலன் தரும். சாதனை படைக்கும் காலம். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். உத்தியோக உயர்வு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். எதிரிகள் பலம் குறையும். வீடு, மனை யோகம் உண்டு. வழக்கு வெற்றி தரும். புதிய கடன் வாங்க நேரிடும். மனதில் உற்சாகம் கூடும். உறவினர் வருகை ஏற்படும். மாற்றங்கள் ஏற்படும். பால்ய நண்பர்களைச் சந்திக்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். புதிய சொத்து சேரும். மாற்று இன உதவிகள் கிட்டும். ஆடை, அணிகலன் சேரும். பெண்களுக்கு கவனம் தேவை. தொழில் லாபம் கூடும். பொன், பொருள் சேரும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். சொத்துச் சேர்க்கையுண்டு. கணவன் மனைவி சச்சரவு ஏற்படும். முன்கோபம் தவிர்க்கவும். விவசாயிகள் பயன் பெறுவர். கமிஷன் தொழில் லாபம் தரும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். எண்ணிய காரியம் கை கூடும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. தோதான எண்ணம் உருவாகும். ஆடை அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். பெருமைகள் சேரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். பழைய பாக்கி வசூலாகும். பங்குத்தொழில் பணம் தரும். தொலைபேசித் தகவல் தொல்லைத் தரும். விபரீத எண்ணம் விலகும். சிந்தனைகள் மேலோங்கும். உதவும் குணம் அதிகரிக்கும். வணிகத்தொழில் வளம் கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: 3,5,9,7
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,J




**மகரம்:** பாராட்டுக்கள் அதிகரிக்கும் வாரம். வியாபாரத்தில் கவனம் தேவை. நீண்ட நாள் பிரச்சினை முடிவுக்கு வரும். மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். வர்த்தக தொழில் லாபம் தரும். புதிய முயற்சியில் கவனம் தேவை. முன்கோபம் தவிர்க்கவும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். பயணம் பலன் தரும். புதிய எண்ணங்கள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மருத்துவச் செலவு உண்டு. ஆடை அணிகலன் சேரும். மாற்று இன உதவி கிட்டும். புதிய சொத்து சேரும். பிள்ளைகளால் தொல்லைகள் உண்டாகும். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். பறவைகளுக்கு உணவு அளித்து பலன் பெறலாம். புகழும், பொருளும் பெருகும். முற்போக்கு சிந்தனை வரும். பங்குத்தொழில் பணம் தரும். புதிய எண்ணங்கள் உருவாகும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். உணவுத்தொழில் உயர்வு தரும். குளிர்பான தொழில் கவனம் தேவை. விபரீத எண்ணம் விலகும். கூட்டுத்தொழில் லாபம் தரும். மனநிறைவு உண்டாகும். பேச்சில் நிதானம் தேவை. புதிய நட்பு உருவாகும். பழைய கடன் தீரும். சாதக சூழ்நிலைகள் உருவாகும். உறவினர் வருகை உண்டு. வணிகத்தொழில் வளம் கூடும். பழைய பாக்கி வசூலாகும். அற்புதமான காலம். விளையாட்டுத் துறையில் லாபம் கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு. செல்வாக்கு பெருகும். வாழ்வில் வசந்தம் உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: காரியசித்தி ஆஞ்சநேயர், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,K




**கும்பம்:** மங்களகரமான வாரம். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு கிட்டும். விவேகம் கை கொடுக்கும். வெற்றி வீடு தேடி வரும். செல்வச்செழிப்பு உயரும். காரியம் கைகூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். சச்சரவுகள் அகலும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பரப் பொருள் சேரும். குடும்ப மேன்மை உண்டாகும். பணத்தட்டுப்பாடு நீங்கும். மனக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்கள். தோற்றப்பொலிவு கூடும். ஏற்றமான தருணம் அமையும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். மனம் மகிழும். உறவுகளால் மதிப்பு உயரும். உத்தியோக உயர்வு தரும். பாக்கிகள் வசூலாகும். வியாபார விருத்தி ஏற்படும். வீண் விரயம் தவிர்க்கவும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். முயற்சிகள் பலிதமாகும். நினைத்தது நிறைவேறும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பல்வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பயணம் தடைப்படும். குடும்ப உறவு பலப்படும். புதுமைகள் நிறைந்த காலம். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். கண் நோய் வந்து போகும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். மனைவியால் மரியாதை உயரும். அடுத்த வீட்டாரின் ஆதரவு பெருகும். பிரச்சனைகள் தீரும். சுபச்செய்தி வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சிவபெருமான், அதிர்ஷ்ட எண்: 5,3,2,9
அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிகப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,K




**மீனம்:** பொன், பொருள் சேரும் வாரம். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். சொத்துச் சேர்க்கை உண்டு. கணவன் அன்பு அதிகரிக்கும். முன்கோபம் தவிர்க்கவும். பயணம் பலன் தரும். பதவி உயர்வு தடைப்படும். பிரச்சனை முடிவுக்கு வரும். வியாபாரத்தில் கவனம் தேவை. பொருளாதார சிக்கல் நீடிக்கும். சிரமங்கள் அதிகரிக்கும். வெற்றியை எட்டும் காலம். பால்ய நண்பர்களை சந்திக்க நேரிடும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். வழக்கு முடிவுக்கு வரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். மாற்று இன உதவி கிட்டும். ஆடை, அணிகலன் கிட்டும். பெண்களுக்கு கவனம் தேவை. எதிரிகள் பலம் குறையும். தனலாபம் கூடும். வறுமைகள் ஒழியும். விவேகம் அதிகரிக்கும். கலை ஈடுபாடு அதிகரிக்கும். கமி‘ன் தொழில் திருப்தி தரும். வாகன யோகமுண்டு. மறைமுக எதிர்ப்புக்கள் விலகும். மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். உத்தியோக உயர்வு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். பொருளாதார வளம் மேம்படும். குழந்தைகளால் மகிழ்ச்சி உண்டு. தர்மசிந்தனை மேலோங்கும். விருந்தினர் வருகை உண்டு. மெத்தனப்போக்கு விலகும். பொருள் இழப்பு ஏற்படும். கலைத்துறையில் திருப்பம் உண்டு. கடன் சுமை அதிகரிக்கும். பயணம் அனுகூலம் தரும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். புத்துணர்ச்சியோடு செயல்படுவீர்கள். திறமையால் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். சான்றோர்களின் சந்திப்புக் கிட்டும். உடல்நலம் சீராகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: முப்பாத்தம்மன், அதிர்ஷ்ட எண்: 9,5,4,3
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,N

# அன்பின் தொனி - 662

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**படைப்புகளை வணங்காதே** - Worship not the Creations

**உன்னை படைத்தவரை வணங்கு** - Worship your Creator

**பொய்யான தேவர்களின் விக்கிரகங்கள்**

**4. பாகால்பேரீத்** - Baal-Berith

கிதியோன் மரித்தபின் இஸ்ரவேல் புத்திரர் திரும்பவும் பாகால்களைப் பின்பற்றிச் சோரம்போய், பாகால்பேரீத்தைத் தங்களுக்குத் தேவனாக வைத்துக்கொண்டார்கள். - **நீயாயாதிபதிகள் 8: 33**

அவர்கள் பாகால் பேரீத்தின் கோவிலிலிருந்த எழுபது வெள்ளிக்காசை எடுத்து அவனுக்குக் கொடுத்தார்கள், அவைகளால் அபிமெலேக்கு வீணரும் போக்கிரிகளுமான மனுஷரை சேவகத்தில் வைத்தான், அவர்கள் அவனைப் பின்பற் றினார்கள். - **நீயாயாதிபதிகள் 9: 4**

**5. பாகால்கள்** - Baalim

அப்பொழுது இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து, பாகால்களைச் சேவித்து, தங்கள் பிதாக்களை எகிப்துதேசத்திலிருந்து புறப்படப்பண்ணின அவர்களுடைய தேவனாகிய கர்த்தரை விட்டு, தங்களைச் சுற்றிலும் இருக்கிற ஜனங்களுடைய தேவர்களாகிய அந்நிய தேவர்களைப் பின்பற்றிப்போய், அவர்களைப் பணி ந்துகொண்டு, கர்த்தருக்குக் கோபமூட்டினார்கள். - **நியாயாதிபதிகள் 2 11-12**

கிதியோன் மரித்தபின் இஸ்ரவேல் புத்திரர் திரும்பவும் பாகால்களைப் பின்பற்றிச் சோரம்போய், பாகால்பேரீத்தைத் தங்களுக்குத் தேவனாக வைத்துக்கொண்டார்கள். - **நியாயாதிபதிகள் 8: 33**

ஆகாப் எலியாவைக் கண்டபோது, ஆகாப் அவனை நோக்கி: இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நீயல்லவா என்றான். அதற்கு அவன்: இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவன் நான் அல்ல, கர்த்தரின் கட்டளைகளை விட்டு பாகால் களைப் பின்பற்றினதினால் நீரும் உம்முடைய தகப்பன் வீட்டாருமே இஸ்ரவேலைக் கலங்கப்பண்ணுகிறவர்கள்.
- **1 ராஜாக்கள் 18: 17-18**

கர்த்தர் யோசபாத்தோடிருந்தார், அவன் பாகால்களைத் தேடாமல், தன் தகப்பனாகிய தாவீது முன்நாட்களில் நடந்த வழிகளில் நடந்து, தன் தகப்பனுடைய தேவனைத் தேடி, இஸ்ரவேலுடைய செய்கையின்படி நடவாமல், அவருடைய கற்பனைகளின்படி நடந்துகொண்டான்.
- **2 நாளாகமம் 17: 3-4**

நான் அவரவருக்கு விதித்த என் நியாயப்பிரமாணத்தை அவர்கள் விட்டு, என் சொல்லைக் கேளாமலும், அதின்படி நடவாமலும், தங்களுடைய இருதயத்தின் கடினத்தையும், தங்கள் பிதாக்கள் தங்களுக்குக் கற்றுக்கொடுத்தபடி பாகா ல்களையும் பின்தொடர்ந்தார்களே என்று கர்த்தர் சொல்லுகிறார். - **எரேமியா 9: 13-14**

அவள் பாகால்களுக்குத் தூபங்காட்டி, தன் நெற்றிப்பட்டங்களினாலும் தன் ஆபரணங்களினாலும் தன்னைச் சிங் காரித்துக்கொண்டு, தன் நேசரைப் பின்தொடர்ந்து, என்னை மறந்துபோன நாட்களினிமித்தம் அவளை விசாரிப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார். - **ஓசியா 2: 13**

இஸ்ரவேல் இளைஞனாயிருந்தபோது நான் அவனை நேசித்தேன், எகிப்திலிருந்து என்னுடைய குமாரனை வரவழைத்தேன். அவர்கள் தங்களை அழைக்கிறவர்களின் முகத்துக்கு விலகிப்போய்விட்டார்கள், பாகால்களுக்குப் பலியிட்டு, விக்கிரகங்களுக்குத் தூபங்காட்டினார்கள். - **ஓசியா 11: 1-2**

**6. பாகால்சேபூப்** - BaalZebub

அகசியா சமாரியாவிலிருக்கிற தன் மேல்வீட்டிலிருந்து கிராதியின் வழியாய் விழுந்து, வியாதிப்பட்டு: இந்த வியாதி நீங்கிப் பிழைப்பேனா என்று எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூபிடத்தில் போய் விசாரியுங்கள் என்று ஆட்களை அனுப்பினான். கர்த்தருடைய தூதன் திஸ்பியனாகிய எலியாவை நோக்கி: நீ எழுந்து, சமாரியாவுடைய ராஜாவின் ஆட்களுக்கு எதிர்ப்படப்போய்: இஸ்ரவேலிலே தேவன் இல்லையென்றா நீங்கள் எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூ பிடத்தில் விசாரிக்கப்போகிறீர்கள்? இதினிமித்தம் நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல், சாகவே சாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்பதை அவர்களோடே சொல் என்றான், அப்படியே எலியா போய்ச் சொன்னான். அந்த ஆட்கள் அவனிடத்திற்குத் திரும்பிவந்தபோது: நீங்கள் திரும்பி வந்தது என்ன என்று அவன் அவர்களிடத்தில் கேட்டா ன். அதற்கு அவர்கள்: ஒரு மனுஷன் எங்களுக்கு எதிர்ப்பட்டுவந்து: நீங்கள் உங்களை அனுப்பின ராஜாவினிடத்தில் திரும்பிப்போய், இஸ்ரவேலிலே தேவன் இல்லையென்றா நீ எக்ரோனின் தேவனாகிய பாகால்சேபூபிடத்தில் விசாரிக்க ப்போகிறாய், இதினிமித்தம் நீ ஏறின கட்டிலிலிருந்து இறங்காமல் சாகவே சாவாய் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்பதை அவனோடே சொல்லுங்கள் என்றான் என்று சொன்னார்கள். - **2 ராஜாக்கள் 1: 2-6**

**7. பெயெல்செபூல்** - Beelzebub

அவர்களில் சிலர்: இவன் பிசாசுகளின் தலைவனாகிய பெயெல்செபூலைக் கொண்டு பிசாசுகளைத் துரத்துகிறான் என்றார்கள். வேறு சிலர் அவரைச் சோதிக்கும்படி வானத்திலிருந்து ஒரு அடையாளத்தைக் காட்டவேண்டுமென்று அவரிடத்தில் கேட்டார்கள். அவர்களுடைய சிந்தனைகளை அவர் அறிந்து, அவர்களை நோக்கி: தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம், தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த வீடும் விழுந்துபோம். சாத்தானும் தனக்குத்தானே விரோதமாய்ப் பிரிந்திருந்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலைநிற்கும்? இப்படியிருக்க, பெயெல்செபூலைக்கொண்டு நான் பிசாசுகளைத் துரத்துகிறேன் என்கிறீர்களே. நான் பெயெல் செபூலினாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? ஆகை யால், அவர்களே உங்களை நியாயந்தீர்க்கிறவர்களாயிருப்பார்கள். - **லூக்கா 11: 15-19**

*தொடரும்...*

SHIVA DURGA ASTROLOGY CENTER





PRIVATE & CONFIDENTIAL



PANDIT: KRISHNAM RAJU

Solutions & Suggestions on:

Black Magic, Evil Spirits, Jealousy, Health, Wealth, Business, Marriage, Drinking Problem, Love, Divorce, Visa Prob., Education, Family, Employment, Court, Husband & Wife, Children Problem, Business Prob., Vasthu Prob, Real Estate and all other Problems

பிரபல மந்திரிமார்களும், நடிகர், நடிகைகளுக்கு ஜோதிடம் பார்த்து புகழ் பெற்றவர். கைரேகை பார்த்து, முகரேகை பார்த்து, ஜாதகம் பார்த்து, ராசி நட்சத்திரமும் பார்த்து, பிறந்த ஆண்டு திகதி பார்த்து நடந்தது நடந்துகிட்டு இருக்கிறது நடக்கப் போறது பற்றிச் சொல்லுவார்

- குடும்ப காதல் விடயங்கள், மனை விவகாரங்கள்.
- கணவன், மனைவி, காதலர் ஒற்றுமை பிணக்குகள்.
- குழந்தை சந்தான பாக்கியம், பிள்ளைகள் படிப்பு.
- திருமணயோகம், காதல் விவகாரங்கள்.
- தொழில், மனை, அபிவிருத்தி, முன்னேற்றம், லட்சுமிகடாட்சம்.
- வாகன மனைப்பொருத்தங்கள், வீசாப் பிரச்சனைகள், கோட்டு வழக்கு.
- ஆரோக்கியப் பாக்கியம், வியாழ முன்னேற்றம், சேவன கோளாறும்.
- பேய் பிசாசு தொந்தரவா, எதிர்ப்பால தொந்தரவா, கண்திருஸ்டி.
- நாகதோசம் போன்ற எந்தப் பிரச்சினையாக இருந்தாலும்.

உடனே பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம். ஏற்கனவே வேறு பல சாஸ்திரிகளை சந்தித்து மனவேதனையுடன் இருந்திருப்பீர்கள். ஒருதரம் பண்டித் ஜெகதீஸ் சாஸ்திரி அவர்களை சந்தியுங்கள் வெற்றி நிச்சயம்.

An Expert Spirtualist treats Black Magic, Witchcraft, Jaadu, Obeau and gives 100% Immediate Protection

880 Markham Rd, Scarborough ON M1H 2Y2
(MARKHAM RD. & PAINTED POST DR.)

437-213-3305

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னையின் மடியில்
21 . 08 . 1942



ஆண்டவன் நிழலில்
10 . 09 . 2020

## அன்னலட்சுமி தங்கவடிவேலு
### (மணி அக்கா)

எங்கள் குடும்பத்தின் குலவிளக்கே நீங்கள் அணைந்த நாளிலிருந்து எங்களின் வாழ்க்கை இருள் அடைந்து விட்டது.
எங்களின் பிரகாசமான வாழ்க்கைக்கு முதல்வியாகவும், எங்கள் குடும்பத்தின் ஆணி வேராகவும் இருந்தீர்கள்.
உங்களை இழந்த பின்பு வேர் அறுந்த மரங்களாக வாடி வதங்குகின்றோம். நீங்கள் இருந்த இடத்தை நிரப்புவதற்கு
இங்கு எவரும் இல்லை இனிமேலும் வரப்போவதும் இல்லை. உங்களை நினைத்து ஆறாத் துயரில் கண்ணீர் வடிக்கின்றோம்.
உங்களின் பெற்றோருக்கு சிறந்த மகளாகவும், உடன் பிறந்தோர்க்கு உண்மையான சகோதரியாகவும், கட்டிய கணவருக்கு
அன்பான மனைவியாகவும், பிள்ளைகளிற்கு பாசமான தாயாகவும், மருமக்களிற்கு அன்பான மாமியாகவும்,
பேரப்பிள்ளைகளிற்கு பாசம் மிகுந்த பாட்டியாகவும், பூட்டப்பிள்ளைகளிற்கு புன்னகை கலந்த, பாசமுள்ள பூட்டியாகவும்,
மாமன், மாமிக்கு சிறந்தொரு மருமருகளாகவும், உறவினர் எல்லோருக்கும் அன்பான மச்சாள், மாமி,
மணி அக்காவாகவும், விருந்தோம்பலில் சிறந்தவராகவும் வாழ்ந்து காட்டிய உங்களை காலன் கவர்ந்து சென்று
ஆண்டுகள் இரண்டு ஓடி மறைந்தன. நாங்களோ உங்களை நினைத்து மனம் உடைந்து கண்ணீர் சிந்திய
வண்ணம் இருக்கின்றோம். உங்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

***எங்கள் துக்கத்தில் பங்கெடுத்த அனைத்து உள்ளங்களிற்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.***

**தகவல்:** தங்கவடிவேலு(விநாயகம்)(416 454 3234) கணவர்
பிள்ளைகள், மருக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.


Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.

**CHRISTEEN SEEVARATNAM**
**(416) 258-6759**



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

**Chapel Ridge Funeral Home & Cremation Centre**
**8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1**
**www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca**

மொன்றியல் நகரில் உதயன்
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பலவகையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria Montreal, QC H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS! Peter Joseph
Legal Representative / Paralegal
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas Broker
Sun Sanmugathas Broker of Record
PROPERTY MAX Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464 www.iselldreamcondos.ca
416-291-0005 www.iselldreamhomes.ca

26ம் ஆண்டில்.. 26 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்

EXPRESS AIR TRAVELS AND TOURS "Fly with Confidence"
416.828.9696
info@expressairtravelss.com
Flight Services
All Inclusive Packages
Last Minute Deals
Cruise Services
Car Rentals
Hotels
Tourist Visa
Passport Application
Dual Citizen Application
தமிழர்களின் நிர்வாகத்தில் Majestic City Indoor Mall இல் உங்களுக்கான பிரயாண முகவர் நிலையம்
Majestic City Indoor Mall
H1-2900 Markham Road, Scarborough ON, M1X 1E6

உதயம் 1379 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday September 9, 2022



# இங்கிலாந்தின் நீண்டகால முடியாட்சியை அலங்கரித்து வந்த மகாராணி இரண்டாம் எலிசபெத், தனது 96வது வயதில் காலமானார்

இங்கிலாந்து தேசத்தின் நீண்ட கால முடியாட்சியை அலங்கரித்த வண்ணம் அரியாசணத்தில் அமர்ந்திருந்த இரண்டாம் எலிசபெத் மகாராணி நேற்று வியாழக்கிழமை காலமானால் அன்று காலை மகாராணியின் உடல்நிலை கவலைக்கிடமானதை அடுத்து, அவரது குடும்பத்தினர் ஸ்கொட்லாந்தில் உள்ள பால்மோரல் எஸ்டேட்டில் கூடினர்.

மகாராணியை மருத்துவ கண்காணிப்பில் மருத்துவர்கள் வைத்த நிலையில், அவர் மரணித்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. இந்த மரணச் செய்தி உலகெங்கும் உடனே பரவியது.

ராணி எலிசபெத் அலெக்ஸாண்ட்ரா மேரி விண்ட்சர் லண்டனில் உள்ள மேபயார் நகரில் 1926ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி பிறந்தார். 1952இல் அரியணைக்கு வந்த அவர், 70 ஆண்டுகளாக நேற்று வரை அரியாசனத்தில் இருந்தார்.

# ரொறன்ரோ தமிழ்த் திரைப்பட விழா இன்று வெள்ளிக்கிழமை தொடக்கம் 3 நாட்கள் நடைபெறுகிறது

மார்க்கம் நகரில் அமைந்துள்ள யோர்க் சினிமாவில் இன்று 9ம் திகதி வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்ற ரொறன்ரோ தமிழ்த் திரைப் பட விழா.

சனிக்கிழமை 10ம் திகதி ஞாயிற்றுக்கிழமை 11ம் திகதிகளில் நண்பகல் 12.00 மணி தொடக்கம் இரவு 11.00 மணி வரை பல இயக்குனர்களின் தமிழ்த் திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன.

அனுமதிச் சீட்டுக்களுக்கு **www.ttff.ca** இணையத்தளத்தைப் பார்க்கவும்.




# Mayor of Jaffna Visuvalingam Manivannan was received by Brampton Mayor, Patrick Brown

# யாழ்ப்பாண மாநகர மேயர் விசுவலிங்கம் மணிவண்ணனை தனது மாநகரசபைக்கு அழைத்து வாழ்த்துக்களைத் தெரிவித்த பிரம்ரன் மாநகர முதல்வர் பெற்றிக் பிரவுண்



தற்போது கனடாவிற்கான பயணம் ஒன்றை மேற்கொண்டு பல கூட்டங்களிலும் கலந்துரையாடல்களிலும் சந்திப்புக்களிலும் பங்கெடுத்து வரும் யாழ்ப்பாண மாநகர மேயர் விசுவலிங்கம் மணிவண்ணனை தனது மாநகரசபைக்கு அழைத்து வாழ்த்துக்களைத் தெரிவித்தார் பிரம்ரன் மாநகர முதல்வர் பெற்றிக் பிரவுண்.

கடந்த செவ்வாய்கிழமை மாலை நடைபெற்ற இந்த சிறப்புச் சந்திப்பில் பிரம்ரன் மற்றும் மிசிசாகா தமிழ் மூத்தோர் சங்கங்களின் உறுப்பினர்கள் மற்றும் அரசியல் ஆர்வலர்கள் பிரம்ரன் மாநகர சிரேஸ்ட உத்தியோகத்தராகப் பணியாற்றும் ஸ்ரீ வல்லிபுரநாதர் மற்றும் வர்த்தகப் பிரமுகர்கள் மற்றும் கனடா உதயன் லோகேந்திரலிங்கம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த சந்திப்பில் இரண்டு நகரங்களின் நகர பிதாக்களும் பரஸ்பரம் வாழ்த்துக்களை தெரிவித்த பின்னர் யாழ்ப்பாண மாநகர சபைக்கு அவசரமாகத் தேவைப்படுகின்ற ஏதாவது ஒரு விடயத்தில் ரொறன்ரோ மாநகர சபை மேயரோடு கைகோர்த்து அதை நிறைவேற்ற தான் ஆவலாக உள்ளதாக தெரிவித்தார் நகரபிதா பெற்றிக் பிரவுண் அவர்கள்.

# கனடிய தமிழர் பேரவையின் ஏற்பாட்டில் மாபெரும் நிதி சேர் நடைப் பயணம்

## இலங்கையில் உள்ள ஐந்து பிரதான வைத்தியசாலைகளுக்கு திரட்டப்பெறும் நிதி அனுப்பிவைக்கப்படும்




இலங்கை அதன் வரலாற்றில் மிக மோசமான சமூக-பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் உள்ளது. ஒரு காலத்தில் வலுவாக இருந்த சுகாதார அமைப்பு வீழ்ச்சியை நெருங்குகிறது, நோயாளிகள் மின் பற்றாக்குறை, மருந்துகள் பற்றாக்குறை மற்றும் உபகரணங்கள் பற்றாக்குறை ஆகியவற்றால் ஆபத்தில் உள்ளனர்.

14வது வருடாந்த தமிழ் கனடிய நடைபயணம் செப்டம்பர் 11, 2022 அன்று ஸ்காபரோவில் உள்ள தாம்சன் நினைவுப் பூங்காவில் நடைபெறவுள்ளுத. இந்த ஆண்டு நடைப்பயணத்தின் மூலம் திரட்டப்படும் நிதி, இலங்கை முழுவதும் உள்ள தேர்தெடுக்கப்பெற்ற 5 மருத்துவமனைகளுக்கு உயிர் காக்கும் மருத்துவப் பொருட்களை வாங்குவதற்கு உதவும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உள்ளே விபரமான செய்தி 9ம் பக்கத்தில்)

# இலங்கை நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் சிறார்கள்

**கனடா உதயனின் சிறப்பு கள ஆய்வுக் கட்டுரை**

**— சிவா பரமேஸ்வரன் மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் லண்டன்**



இலங்கையில் ஏழ்மையில் உழலும் இலட்சக்கணக்கானவர்களால் இனியும் போதிய உணவைப் பெற்றுக்கொள்ள முடியாமல் உள்ளனர், மேலும் இனி வரும் வாரங்களில் மேலும் மோசமடையலாம்” உலக உணவுத் திட்டத்தின் ஆசிய பசிபிக் பிராந்தியத்தின் பணிப்பாளர் இந்த வாரம் கொழும்பில் தெரிவித்த கருத்து இது.

(உள்ளே விபரமான கட்டுரை 12ம் பக்கத்தில்)

புலம்பெயர் உறவுகளே! தாயகம் செல்லுகையில் இங்கு தங்கிப் பாருங்கள்..
தமிழர் நிர்வாகத்தில் இயங்கும் தரமான நட்சத்திர விடுதி
MaRadha HOTEL

COLOMBO - SRI LANKA
SALES@MARADHA.LK
+94112550136